இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100
1924 - 2023

# முரசொலி

Murasoli

www.murasoli.in
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 152 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – மார்கழி 26 – வியாழக்கிழமை 11 ஜனவரி 2024 – சென்னை 16 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 152 : Thiruvalluvar Year - 2054 - Margazhi 26 - Thursday 11 January 2024 - Chennai 16 Pages ₹ 5.00

### குடும்ப அட்டைதாரர்கள் அனைவருக்கும் 1 கிலோ பச்சரிசி, சர்க்கரை, முழுக் கரும்புடன்

# ரூ. 1000 ரொக்கம் - பொங்கல் பரிசுத் தொகுப்பு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கி மகிழ்வித்தார்!

**சென்னை, ஜன. 11 -**

**தமிழர் திருநாளாம் பொங்கல் திருநாளை மகிழ்ச்சியுடன் கொண்டாடிட 2,19,71,113 அரிசி குடும்ப அட்டைதாரர்கள் மற்றும் முகாம்வாழ் இலங்கை தமிழர்கள் குடும்பங்களுக்கு தலா ஒரு கிலோ பச்சரிசி மற்றும் சர்க்கரை, முழுக்கரும்பு மற்றும் ரூ.1,000/ ரொக்கம் வழங்கும் திட்டம் மற்றும் 1 கோடியே 77 இலட்சம் இலவச வேட்டிகள், 1 கோடியே 77 இலட்சம் இலவச சேலைகள் வழங்கும் திட்டம் ஆகியவற்றை தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வழங்கி தொடங்கி வைத்தார்.**

“சுழன்றும்ஏர்ப் பின்னது உலகம்” என்ற குறளில் அய்யன் திருவள்ளுவர், உழவுத் தொழிலே சிறந்தது என்றும், உலகம் பல தொழில் செய்து சுழன் றாலும் ஏர்த் தொழிலின் பின் நிற்கின்றது என்றும் புகழ்ந்த உழவர் பெருமக்களை யும், அவர்களுக்கு துணையாக இருக்கும் கதிரவனுக்கும், கால்நடை களுக்கும் நன்றிகூறி மரியாதை செலுத் தும் நன்னாளாகவும், தமிழர் அனை வரும் ஓரினம் என்ற தமிழினத்தின் சிறப்பினை உலகிற்கு பறைசாற்றும் பொன்னாளாகவும் தைப்பொங்கல் திருநாள் கொண்டாடப்படுகிறது.

**இலங்கைத் தமிழர் மறுவாழ்வு இல்லங்களிலும் பொங்கல் பரிசு!**

இத்தகைய சிறப்புமிக்க தமிழர் திருநாளாம் தைப் பொங்கல் திருநாளை மக்கள் அனைவரும் சிறப்பாகக் கொண் டாடும் வகையில், அனைத்து அரிசி குடும்ப அட்டைதாரர்கள் மற்றும் இலங் கைத் தமிழர் மறுவாழ்வு முகாம்களில் வசிக்கும் குடும்பங்களுக்கு தலா ஒரு கிலோ பச்சரிசி, ஒரு கிலோ சர்க்கரை, முழுக் கரும்பு மற்றும் ரூ.1,000/ரொக்கம் ஆகியவற்றை 2,19,71,113 குடும்பங் களுக்கு 2436.19 கோடி ரூபாய் செலவில் வழங்கப்படும் என்று தமிழ்நாடு முதல மைச்சர் அவர்கள் அறிவித்தார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், பொங்கல் பரிசாக ஒரு கிலோ பச்சரிசி, ஒரு கிலோ சர்க்கரை, முழுக் கரும்பு மற்றும் ரூ.1,000/– ரொக்கம், வழங்கிடும் பணியினை தொடங்கி வைப்பதன் அடையாளமாக, நேற்று (10.1.2024) சென்னை, ஆழ்வார்பேட்டை டி.யூ.சி.எஸ். நியாய விலைக் கடையில் அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கு பொங்கல் பரிசுத் தொகுப்பினையும், இலவச வேட்டி, சேலைகளையும் வழங்கினார். இந்நிகழ்ச்சியில் கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன், உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, சட்டமன்ற உறுப்பினர் த.வேலு, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் மரு. கே.கோபால், உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை முதன்மைச் செயலாளர் ஹர் சஹாய் மீனா, கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் மரு. ந. சுப்பையன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**1 கோடியே 77 இலட்சம் வேட்டி - சேலைகள்!**

மேலும், பொங்கல் பண்டிகையை யொட்டி இலவச வேட்டி, சேலைகள் வழங்கும் திட்டத்தினை செயல்படுத் திடும் வகையில், 1 கோடியே 77 இலட்சம் வேட்டிகள் மற்றும் 1 கோடியே 77 இலட்சம் சேலைகளை வழங்கிட தமிழ்நாடு அரசால் நிதி ஒதுக்கீடு செய்யப் பட்டு, இத்திட்டத்தின் மூலம் ஏழை, எளிய மக்கள் பயன்பெறுவதோடு, கைத்தறி, விசைத்தறி தொழில்களில் ஈடுபட்டுள் ளோருக்கு வேலைவாய்ப்பும் வழங்கப் படுகிறது.

அதன்படி, பொங்கல் பரிசாக ஒரு கிலோ பச்சரிசி, ஒரு கிலோ சர்க்கரை, முழுக் கரும்பு மற்றும் ரூ.1,000/ரொக்கம் ஆகியவற்றை வழங்கிடும் பணியினை தொடங்கி வைப்பதன் அடையாளமாக, தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (10.1.2024) சென்னை, ஆழ்வார்பேட்டை டி.யூ.சி.எஸ். நியாய விலைக் கடையில் அரிசி குடும்ப அட்டை தாரர்களுக்கு பொங்கல் பரிசுத் தொகுப் பினையும், இலவச வேட்டி, சேலை களையும் வழங்கி, தொடங்கி வைத்தார்.

**குறிப்பிட்டுள்ள நாட்களில் பொங்கல் பரிசைப் பெறுவீர்!**

இப்பொங்கல் பரிசினை பெற்றிட அரிசி குடும்ப அட்டைதாரர்கள் அதிக எண்ணிக்கையில் நியாய விலைக் கடைகளுக்கு ஒரே நேரத்தில் வருவதை தவிர்த்திட, நாள் மற்றும் நேரம் குறிப் பிடப்பட்டு டோக்கன் வழங்கப்பட்டுள் ளது. அதில் குறிப்பிடப்பட்டுள்ள நாள் மற்றும் நேரத்தில் அக்குடும்ப அட்டை தாரர்கள் பொங்கல் பரிசினை பெற்றுக் கொள்ள கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இந்நிகழ்ச்சியில் கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன், உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கர பாணி, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, சட்டமன்ற உறுப்பினர் த.வேலு, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் கே. கோபால், உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை முதன்மைச் செயலாளர் ஹர் சஹாய் மீனா, கூட்டுறவு சங்கங்களின் பதி வாளர் மரு. ந.சுப்பையன் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

### போராட்டம் தேவையற்றது, பொதுமக்களுக்கு இடையூறு செய்வதாக நீதிமன்றம் கூறிய நிலையில்

# போக்குவரத்துத் தொழிலாளர்கள் போராட்டம் வாபஸ்!

## சென்னை உயர்நீதிமன்றத்தில் தொழிற்சங்கங்கள் அறிவிப்பு!

**சென்னை, ஜன. 11 -**

**வேலைநிறுத்தப் போராட்டம் தேவையற்றது என்றும், பொது மக்களுக்கு இடையூறு செய்வ தாகவும் உயர்நீதிமன்றம் கூறிய நிலையில், போக்குவரத்துத் தொழிற் சங்கங்கள் போராட் டத்தை திரும்பப் பெறுவதாக நேற்று பிற்பகல் உயர்நீதிமன்றத் தில் தெரிவித்தன.**


உறுதி அளிக்கப்பட்ட கோரிக் கைகள் நிறைவேற்றப்படும் என அரசு தெரிவித்தும், அ.தி.மு.க. வைச் சேர்ந்த தொழிற்சங்கங் கள் வேலைநிறுத்தப் போராட் டத்தில் ஈடுபட்டன.

இந்நிலையில், இந்த வேலை நிறுத்தம் தொடர்பான வழக்கு சென்னை உயர்நீதி மன்றத்தில் தலைமை நீதிபதி கங்காபூர்வாலா, நீதிபதி பரதசக் ரவர்த்தி ஆகியோர் அடங்கிய அமர்வு முன்பு நேற்று காலை விசாரணைக்கு வந்தது.

**உயர்நீதிமன்ற நீதிபதிகள் கேள்வி!**

அப்போது பொங்கல் பண்டிகையின்போது வேலை நிறுத்தம் தேவையா என கேள்வி எழுப்பிய நீதிபதிகள், தற்போதைய சூழலில் இந்தப் போராட்டம் அவசியமற்றது என்று தெரிவித்தனர்.

வேலைநிறுத்தம் செய்து பொதுமக்களுக்கு ஏன் இடையூறு ஏற்படுத்த வேண்டும் என வின வினர். போராட்டத்தால் மக்கள் பாதிக்கப்படுவார்கள் என தெரி வித்த நீதிபதிகள், பண்டிகை நேரத்தில் போராட்டத்தை நடத்துவது முறையற்றது என்று கண்டித்தனர்.



இதனிடையே, பேச்சு வார்த்தை பல கட்டங்களில் நடைபெற்றும், முற்றுப் பெறாத நிலையில், மீண்டும் வரும் 19ஆம் தேதிக்கு ஒத்திவைக்கப் பட்டிருப்பதாகவும், எனவே தற் போது நடைபெற்று வரும் போராட்டம் சட்டவிரோதம் என் றும் தமிழ்நாடு அரசு சார்பில் நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டது.

இந்நிலையில் இவ்வழக்கு விசாரணை பிற்பகலுக்கு விசாரிக்கப்படும் என்று நீதிபதிகள் அறிவித்த நிலையில், நேற்று பிற்பகலில் போராட்டம் அறிவித்திருந்த அ.தி.மு.க. உள்ளிட்ட தொழிற்சங்கங்கள் சென்னை உயர்நீதி மன்றத்தில் போராட்டத்தை திரும்பப் பெறு வதாக தெரிவித்தன.

**பொங்கலுக்குப் பிறகு பேச்சுவார்த்தை!**

தமிழ்நாடு அரசு பொங்கலுக் குப் பிறகு 19ஆம் தேதி அன்று பேச்சுவார்த்தை நடத்தப்படும் என்று அறிவித்ததை ஏற்காமல் அ.தி.மு.க. உள்ளிட்ட சில தொழிற்சங்கங்கள் போராட்டம் 9ம் தேதி முதல் நடத்தப்படும் என்று அறிவித்த நிலையிலும் கடந்த 2 நாட்களாக (9,10ஆம் தேதிகளில்) மக்களின் எந்தவித இயல்பு வாழ்க்கையும் பாதிக்கா மல் பேருந்துகள் வழக்கம் போல் இயங்கின என்பது குறிப் பிடத்தக்கது.

---

### கலைஞர் மகளிர் உரிமைத் தொகை:

# ரூ. 1,000 முன்கூட்டியே வரவு வைப்பு!

சென்னை, ஜன. 11 –

பொங்கல் பண்டி கையை முன்னிட்டு, ஒரு கோடியே 13 லட்சம் பயனா ளர்களின் வங்கிக் கணக்கு களில், கலைஞர் மகளிர் உரிமைத் தொகை முன் கூட்டியே வரவு வைக்கப் பட்டுள்ளது.

பேரறிஞர் அண்ணா பிறந்தநாளை ஒட்டி கடந்த செப்டம்பர் மாதம் 15ம் தேதி காஞ்சிபுரத்தில் 1 கோடியே 6 லட்சத்து 50 ஆயிரம் பயனாளிகளுக்கு முதற் கட்டமாக கலைஞர் மகளிர் உரிமைத் தொகை வழங் கும் திட்டத்தை முதல மைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத் தார்.

அதன்பின்னர், 2ம் கட்டமாக கடந்த நவம்பர் மாதம் 7 லட்சத்து 35 ஆயி ரம் மகளிருக்கு கூடுதலாக கலைஞர் மகளிர் உரிமை தொகை வழங்கப்பட்டது.

மேலும், தகுதியான மகளிர் யாரும் விடுபட்டு விடக்கூடாது என முதல மைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், கலைஞர் உரிமைத் தொகை பெற மேல்முறையீடு செய்ய லாம் என அறிவித்தார்.

அதன்படி, கடந்த செப் டம்பர் மாதம் முதல் டிசம்பர் வரை 11 லட்சத்து 85 ஆயி ரம் பேர் மேல்முறையீடு செய்தனர். இதில் 2 லட்சம் பேரின் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன. எஞ்சியவர்களின் மனுக் கள் மீதான பரிசீலனை விரைவில் முடிக்கப்படும் என்று தெரிவிக்கப் பட்டுள்ளது.

இ ந் நி லை யி ல் , ஒவ்வொரு மாதமும் 15ஆம் தேதி அன்றுதான் கலைஞர் மகளிர் உரிமைத் தொகை ரூபாய் 1,000 வங்கிகளில் வரவு வைக்கப்படும்.

ஆனால், இந்த மாதம் தமிழர் திருநாளாம் பொங்கல் திருநாள் ஜனவரி 15ஆம் தேதி தொடங்கி 17 ஆம் தேதி வரை கொண் டாடப்படவிருப்பதாலும், மகளிர்க்கு முன் கூட்டியே கலைஞர் மகளிர் உரிமைத் தொகை வழங்கினால், அவர்களுக்கு பயனுள்ள தாக இருக்கும் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் உத்தரவுக் கிணங்க பணம் முன்கூட்டியே வரவு வைக்கப்பட்டது.

அதன்படி நடப்பு ஜனவரி மாதம் 10ந் தேதி மகளிர் உரிமை தொகை பயனாளிகளின் வங்கிக் கணக்கில் வரவு வைக்கப் படும் என முதலமைச்சர் அறிவித்திருந்தார்.

அதன்படி, நேற்று ஒரு கோடியே 13 லட்சத்து 84 ஆயிரத்து 300 பயனாளர் களுக்கு கலைஞர் மகளிர் உரிமைத் தொகை அவர்க ளது வங்கிக் கணக்குகளில் வரவு வைக்கப்பட்டது.

இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
வீழ்வது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும்
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
வியாழக்கிழமை 11-01-2024

# சிரிக்கிறார் பில்கிஸ் பானு

மனித உரிமையும் - சட்டநீதியும் காக்கும் தீர்ப்பு ஒன்றை உச்சநீதிமன்றம் வழங்கி இருக்கிறது. குஜராத் மாநிலத்தில் உருக்குலைக்கப்பட்ட பில்கிஸ் பானு என்ற பெண்ணுக்கு கொடூரம் இழைத்த குற்றவாளிகளை அந்த மாநில அரசு விடுதலை செய்ததை ரத்து செய்திருக்கிறது உச்சநீதிமன்றம்.

இந்த தீர்ப்பைக் கேள்விப்பட்டதும், **“ஒன்றரை ஆண்டுகளில் முதல் முறையாக சிரிக்கிறேன்.” என்று பில்கிஸ் பானு கூறியுள்ளார். “இன்று எனக்கு உண்மையிலேயே புத்தாண்டு. நான் கண்ணீர் விட்டு அழுதேன். ஒன்றரை ஆண்டுகளில் முதல் முறையாக நான் சிரிக்கிறேன். என் நெஞ்சில் சுமையாக இருந்த ஒரு மலை அகன்றது போல் உணர்கிறேன். எனக்கு சுவாசமே திரும்ப வந்தது போல் இருக்கிறது. இதுதான் உண்மையான நீதி. எனக்கும், என் குழந்தைகளுக்கும், அனைத்து பெண்களுக்கும் சம நீதி கிடைக்கும் என்ற நம்பிக்கையை வழங்கிய உச்ச நீதிமன்றத்திற்கு நன்றி.”** என்று குறிப்பிட்டுள்ளார்.

பில்கிஸ் பானுவின் கணவர் யாகூப் பி.பி.சி. - செய்தி நிறுவனத்திடம் கூறுகையில், **“உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பு மற்றும் பில்கிஸுக்கு கிடைத்த நீதியால் நானும் எனது குடும்பத்தினரும் மகிழ்ச்சியடைகிறோம். நாட்டின் நீதி அமைப்பு மீது எங்களுக்கு நம்பிக்கை இருந்தது. இன்று உச்சநீதிமன்றம் எங்கள் நம்பிக்கையை காப்பாற்றியுள்ளது. உச்ச நீதிமன்றத்திற்கு மிக்க நன்றி”** என்று சொல்லி இருக்கிறார்.

பில்கிஸ் பானுவுக்கு மகள்கள் ஹஜ்ரா, பாத்திமா, சலேஹா என 3 மகள்களும் யாசின் என்ற மகனும் உள்ளனர். தன் கண் முன்னே கொலை செய்யப்பட்ட மகளின் சலேஹா என்ற பெயரை இளைய மகளுக்கு சூட்டியுள்ளார் பில்கிஸ் பானு.

2002 ஆம் ஆண்டு குஜராத் மாநிலத்தில் கோத்ரா ரயில் எரிப்பு சம்பவம் நிகழ்ந்தது. இதைத் தொடர்ந்து இசுலாமியர்களுக்கு எதிரான பெரும் வன்முறை அரங்கேற்றப்பட்டது. இதில் 20 ஆயிரத்துக்கும் மேற்பட்ட இசுலாமியர்கள் வீடுகள், தங்கள் சொத்துகள் சூறையாடப்பட்டது. இதில் பில்கிஸ் பானுவின் குடும்பமும் ஒன்று. அவரது குடும்பத்தில் 7 பேர் கொலை செய்யப்பட்டார்கள். 6 பேரைக் காணவில்லை. பில்கிஸ் பானுவின் 3 வயது குழந்தை சலேஹா சுவற்றில் அடித்துக் கொல்லப்பட்டார். அப்போது 5 மாத கர்ப்பிணியாக இருந்தார் பில்கிஸ் பானு. அவர் உட்பட 4 பெண்கள் பாலியல் வன்முறையால் சீரழிக்கப்பட்டார்கள்.

அப்போது பில்கிஸ் பானுவுக்கு சுமார் 20 வயது. பாலியல் வல்லுறவுக்குப் பின்னர் அவநம்பிக்கையான நிலையில் பில்கிஸ் பானு அருகேயுள்ள மலைப்பகுதிக்குச் சென்று தன் உயிரை காப்பாற்றிக் கொண்டார். இந்த சம்பவத்திற்குப் பிறகு, போலீசார் சிலர் பில்கிஸ் பானுவை மிரட்டி ஆதாரங்களை அழிக்க முயன்றனர். அவரது குடும்ப உறுப்பினர்களின் உடல்கள் பிரேதப் பரிசோதனை செய்யாமல் அடக்கம் செய்யப்பட்டன.

பில்கிஸ் பானுவை பரிசோதித்த மருத்துவர், அவர் பாலியல் வல்லுறவு செய்யப்படவில்லை என்று தெரிவித்தார். ஆனாலும், பில்கிஸ் பானு தொடர்ந்து போராடி குற்றவாளிகளை அடையாளம் காட்டினார். 2004-ம் ஆண்டு உச்ச நீதிமன்றம் இந்த வழக்கை சி.பி.ஐ. வசம் ஒப்படைத்த பிறகு முதல் கைது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. தேசிய மனித உரிமைகள் ஆணையத்தின் உதவியுடன், பில்கிஸ் பானு வழக்கு மகாராஷ்டிராவுக்கு மாற்றப்பட்டு குற்றவாளிகளுக்கு தண்டனை விதிக்கப்பட்டது. ‘குஜராத் நீதிமன்றங்களால் நீதி வழங்க முடியாது’ எனக்கூறி பில்கிஸ் பானு தாக்கல் செய்த மனுவை உச்ச நீதிமன்றம் ஏற்றுக்கொண்டது.

இது தொடர்பாக 11 பேர் கைது செய்யப்பட்டார்கள். ஜஸ்வந்த்பாய், கோவிந்தபாய், சைலேஷ் பட், ராதேஷ்யாம் ஷா, பிபின் சந்திர ஜோஷி, கேசவர் பாய் வோஹானியா, பிரதீப் மோர்தியா, பசுபாய் வோஹானியா, ராஜுபாய் சோனி, மிதேஷ் பட், ரமேஷ் சந்தனா ஆகிய 11 பேர் மீது மும்பை சி.பி.ஐ. சிறப்பு நீதிமன்றத்தில் வழக்கு நடந்தது. இவர்கள் அனைவரும் ஆயுள் தண்டனையை சி.பி.ஐ. நீதிமன்றம் 2008 ஆம் ஆண்டு விதித்தது. இவர்கள் கோத்ரா சிறையில் அடைக்கப்பட்டு இருந்தார்கள். கடந்த ஆண்டு சுதந்திர தினத்தை முன்னிட்டு கடந்த ஆகஸ்ட் 15 அன்று இவர்கள் 11 பேரையும் விடுவித்து இருக்கிறது குஜராத் மாநில அரசு. நீண்ட காலம் சிறையில் இருந்தார்கள் என்ற அடிப்படையில் அவர்களை விடுதலை செய்துள்ளது அம்மாநில அரசு.

11 பேரின் விடுதலையை ரத்து செய்யக் கோரி உச்சநீதி மன்றத்தில் வழக்கு தொடுக்கப்பட்டது. ‘அரசியலமைப்பு நடத்தைக் குழு’ என்ற தலைப்பில் பகிரங்க கடிதம் ஒன்றை உச்சநீதிமன்றத்தின் தலைமை நீதிபதி மாண்பமை யு.யு.லலித் அவர்களுக்கு ஐ.ஏ.எஸ், ஐ.பி.எஸ். அதிகாரிகள் 134 பேர் அப்போதே அனுப்பி வைத்தார்கள்.

**“இவர்களை விடுதலை செய்தது பயங்கரமான தவறு. முன்கூட்டியே விடுதலை செய்யலாம் என்று முடிவெடுக்கும் குழுவில் இருந்த 10 பேரில் 5 பேர் பா.ஜ.க.வைச் சேர்ந்தவர்கள். இது பாரபட்சமற்ற தன்மை மற்றும் சுதந்திரமான நடைமுறையின் மீது முக்கியமான கேள்வியை எழுப்புகிறது. பில்கிஸ் பானுவின் குடும்பத்துக்கு மட்டுமல்ல; இந்தியாவில் உள்ள அனைத்துப் பெண்களின் பாதுகாப்பிலும் குறிப்பிடத்தக்க தாக்கத்தை இது ஏற்படுத்தும்”** என்று 134 அதிகாரிகளும் கேட்டுக் கொண்டுள்ளார்கள்.

இந்த வழக்கில் தான் உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. குஜராத் அரசின் முடிவை உச்சநீதிமன்றம் அதிரடியாக ரத்து செய்துள்ளது. **“குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் படி தண்டனையை ரத்து செய்ய குஜராத் அரசுக்கு அதிகாரம் இல்லை. குற்றவாளிகள் விசாரிக்கப்பட்டு, தண்டனை வழங்கப்பட்ட மகாராஷ்டிரா அரசுக்குதான் அந்த அதிகாரம் உள்ளது. இது குஜராத் அரசின் அதிகார அத்துமீறல் ஆகும்”** என்று உச்சநீதிமன்ற நீதிபதிகள் நாகரத்னா, உஜ்ஜல்புயான் ஆகியோர் தீர்ப்பு அளித்துள்ளார்கள்.

குஜராத் பா.ஜ.க. அரசால் விடுவிக்கப்பட்ட 11 பேரும் விரைவில் கைது செய்யப்பட இருக்கிறார்கள். இந்த தீர்ப்புக்குப் பிறகு அதில் 7 பேர் தலைமறைவு ஆகிவிட்டதாகச் செய்திகள் வந்துள்ளன.

**குற்றவாளிகளின் மிரட்டல் காரணமாக இரண்டு ஆண்டுகளில் இருபது வீடுகள் மாறியவர் பில்கிஸ் பானு. ஆனால் அவருக்கு கொலை மிரட்டல் விடுத்தவர்கள் இன்று தலைமறைவு ஆகிவிட்டார்கள். பில்கிஸ் பானு முதன்முறையாகச் சிரிக்கிறார்.**

டெல்லியில்:

## குடியரசு தின விழாவில் முதன் முதலில் பெண் போலீசார் அணிவகுப்பு!

*டெல்லி, ஜன. 11-*

*நாட்டின் 75வது குடியரசு தினம் வரும் 26ம் தேதி கொண்டாடப்பட உள்ளது. குடியரசு தினத்தின் போது டெல்லியில் உள்ள கடமை பாதையில் ராணுவம், கடற்படை, விமானப் படை என முப்படைகளின் அணிவகுப்பும் நடைபெறும். இந்த அணிவகுப்பில் டெல்லி போலீசார் சார்பிலும் அணிவகுப்பு நடத்தப்பட உள்ளது. அந்த வகையில் இந்த ஆண்டு கடமை பாதையில் நடைபெறும் அணிவகுப்பில் டெல்லி போலீசார் தரப்பில் பெண் போலீசார் மட்டுமே பங்கேற்பார்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*ஐ.பி.எஸ். அதிகாரி ஸ்வேதா தலைமையில் பெண் கான்ஸ்டபிள்கள் 194 பேர் டெல்லி போலீஸ் சார்பில் குடியரசு தினவிழாவில் கடமை பாதையில் அணிவகுப்பு நடத்த உள்ளனர். டெல்லி போலீஸ் அணிவகுப்பில் இடம்பெற்றுள்ள போலீசாரில் 80 சதவீதம் பேர் வடகிழக்கு மாநிலங்களைச் சேர்ந்தவர்கள் ஆவர். பாலின சமத்துவம், பெண்கள் முன்னேற்றத்தை ஊக்குவிக்கும் வகையில் அணிவகுப்பில் பெண்கள் மட்டுமே பங்கேற்க உள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*அதேபோல், குடியரசு தின விழாவில் கடமை பாதையில் பெண்கள் மட்டுமே பங்கேற்கும் அணிவகுப்பு நடைபெறுவது வரலாற்றில் இதுவே முதல் முறையாகும் என்பது குறிப்பிடத்தக்கது.*

திருவொற்றியூர் கிழக்கு பகுதி

## வட்டச் செயலாளர்கள் அவசர ஆலோசனைக் கூட்டம்!

பகுதிச் செயலாளர்

தி.மு.தனியரசு ஏற்பாட்டில்!

*சென்னை,ஜன.11-*

*திருவொற்றியூர் கிழக்கு பகுதிச் செயலாளர் தி.மு. தனியரசு விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-*

*திருவொற்றியூர்கிழக்குப் பகுதிவட்டசெயலாளர்கள் ஆலோசனை கூட்டம் சென்னை வடகிழக்கு மாவட்ட செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ.ஆலோசனையின்படி திருவொற்றியூர் கிழக்கு பகுதிசெயலாளர்1வதுமண்டலகுழுதலைவர்தி.மு.தனியரசு ஏற்பாட்டில் இன்று (11.1.2024) காலை 10 மணிக்கு திருவொற்றியூர் சன்னதி தெருவில் அமைந்துள்ள பகுதி கழக அலுவலகத்தில் பகுதி அவைத்தலைவர் ஆர்.சி.ஆசைதம்பி தலைமையில் வட்ட செயலாளர்கள்ஆலோசனைகூட்டம் நடைபெற உள்ளது.*

*ஆகையால் இதில் சட்டமன்றஉறுப்பினர்கள்,நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாநில நிர்வாகிகள், மாவட்ட நிர்வாகிகள், பொதுக்குழு உறுப்பினர்கள், வட்ட செயலாளர்கள், மாவட்ட பிரதிநிதிகள், வட்ட கழக நிர்வாகிகள், அணியின்நிர்வாகிகள், பாகமுகவர்கள் BLA 2 மற்றும் கழகமுன்னோடிகள்கலந்து கொள்ளும் படி கேட்டுக் கொள்கிறேன்.*

*பொருள் :*

*தமிழர் திருநாள் பொங்கல் விழா, சேலத்தில் நடைபெறஉள்ளஇளைஞர்அணி மாநாடுகலந்துகொள்ளவது குறித்து, பாகமுகவர்கள்BLA 2 பணிகள், கழக ஆக்க பணிகள்,*

*இவ்வாறு பகுதிக் கழகச் செயலாளர் தி.மு.தனியரசு வேண்டுகோள் விடுத்துள்ளார்.*



முதலமைச்சர் அவர்கள் பொங்கல் பரிசாக ஒரு கிலோ பச்சரிசி, ஒரு கிலோ சர்க்கரை, முழு கரும்பு மற்றும் ரூ. 1000/– ரொக்கம் வழங்கிடும் பணியை சென்னையில் தொடங்கி வைத்ததை தொடர்ந்து, வேலூர் மாவட்டத்தில் கழகப் பொதுச் செயலாளர் நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் நேற்று (10.01.2024) காட்பாடி ஸ்ரீ ரங்காலயா திருமண மண்டபத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பொங்கல் பரிசு தொகுப்பினை பொதுமக்களுக்கு வழங்கினார். இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் பெ.குமாரவேல் பாண்டியன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் முனைவர். எஸ்.ஜெகத்ரட்சகன், து.மு.கதிர் ஆனந்த், சட்டமன்ற உறுப்பினர்கள் ஏ.பி.நந்தகுமார், திருமதி அமலு விஜயன், மாவட்ட ஊராட்சிக் குழு தலைவர் மு.பாபு, மாநகராட்சி மேயர் திருமதி சுஜாதா ஆனந்தகுமார், துணை மேயர் சுனில்குமார், மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி த. மாலதி, கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் ச. திருகுண ஐயப்பதுரை,1வது மண்டல குழுத்தலைவர் திருமதி புஷ்பலதா வன்னியராஜா, காட்பாடி ஒன்றிய குழுத்தலைவர் வேல்முருகன், வருவாய் கோட்டாட்சியர் திருமதி கவிதா உட்பட பலர் கலந்து கொண்டனர்.



காஞ்சிபுரம் மாவட்டம், குன்றத்தூர் ஒன்றியம், படப்பை பேருந்து நிலையத்தில், குடும்ப அட்டைதாரர்களுக்கு ரொக்கப்பணம் ரூ.1000/–த்துடன் ஒரு கிலோ பச்சரிசி, ஒரு கிலோ சர்க்கரை மற்றும் முழு கரும்புடன் கூடிய பொங்கல் பரிசு தொகுப்பினையும் மற்றும் இலவச வேட்டி, சேலைகளையும் கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி. – குறு,சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் ஆகியோர் வழங்கினார்கள். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் கலைச்செல்வி மோகன், சட்டமன்ற உறுப்பினர் கு.செல்வபெருந்தகை, மாவட்ட ஊராட்சி குழுத்தலைவர் படப்பை ஆ.மனோகரன் ஆகியோர் உள்ளனர்.



இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை மற்றும் சிறப்பு திட்ட செயலாக்கத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை நேற்று (10.1.2024) காங்கிரஸ் கட்சியின் சட்டமன்ற கட்சித் தலைவர் கு.செல்வப்பெருந்தகை சந்தித்து, தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியின் சட்டமன்ற உறுப்பினர்கள் சார்பில் மிக்ஜாம் புயல் பேரிடர் நிவாரணப் பணிகளுக்காக முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு 18 இலட்சம் ரூபாய்க்கான காசோலையை வழங்கினார். உடன் பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு, காங்கிரஸ் கட்சியின் சட்டமன்ற உறுப்பினர்கள் எஸ்.ராஜேஷ்குமார், ஏ.எம்.முனிரத்தினம், எஸ்.ராஜ்குமார், ஏ.எம்.எஸ்.ஜி.அசோகன், ஜே.எம்.எச்.ஹசன் மௌலானா, ஆர்.எம்.கருமாணிக்கம், எஸ்.அமிர்தராஜ், துரை சந்திரசேகர், ஆர்.ராதாகிருஷ்ணன், எஸ்.டி.ராமச்சந்திரன் ஆகியோர் உள்ளனர்.

## வாட்ஸ் அப்பில் வந்த செய்தி !



# பில்கிஸ் பானு வழக்கும் - ராஜதர்மமும்!

**“நீதி நிலைநாட்டப்பட்டுள்ளது. இருள் சூழ்ந்த வேளையில் நம்பிக்கை தரும் ஒளிக்கீற்றாக உச்சநீதிமன்றத் தீர்ப்பு அமைந்திருக்கிறது.”**

- பில்கிஸ் பானு வழக்கில் உச்சநீதிமன்றம் அளித்த தீர்ப்பு குறித்து தமிழ்நாடு முதல்வர் தளபதி மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ள இந்தக் கருத்துகளை ஆழ்ந்து நோக்கினால், சமீபகாலமாக எல்லாத் துறைகளும் பா.ஜ.க. ஆட்சியில் சீரழிந்து - சின்னாபின்னமாகி இருள் சூழ்ந்து கிடக்கும் நிலைகுறித்து அவருடைய ஆழ்மனதின் அங்கலாய்ப்பை உணரமுடியும்!



பல நேரங்களில் முதல்வர் குறிப்பிட்ட இருள்சூழ்ந்த நிலை மற்ற துறைகளைப் போல நீதித் துறையையும் விட்டுவைக்கவில்லை! சர்வாதிகாரத்தின் ‘ஆக்டோபஸ்’ கரங்கள் நீதித் துறையையும் வளைத்திடத் தொடங்கிய கொடூரம் பல நேரங்களில் கண்கூடாகவே தெரிய ஆரம்பித்தது.

**“ஜனநாயகம் ஆபத்தில் இருக்கிறது. நிலைமைகள் சரியாக இல்லை”** (Democracy at stakes; Things not in order) **என்று கடந்த 2018-ஆம் ஆண்டே உச்சநீதிமன்றத்தின் மூத்த நீதிபதிகள் நால்வரே செய்தியாளர்களைச் சந்தித்து கவலை தெரிவித்ததும் இங்கு நினைவுகூரத்தக்கது. அந்தச் செய்தியாளர்கள் சந்திப்பு இந்திய ஜனநாயகத்துக்கு உருவாகி உள்ள ஆபத்தை சுட்டிக் காட்டி எச்சரிப்பதாகவே அமைந்தது! ஆனால் அதற்குப் பின்னும் நிலைமைகளைச் சரிசெய்யும் போக்கு தென்படவில்லை!**

பல வழக்குகளில் நீதிமன்றங்களின் செயல்பாட்டில் நேர்மைத் தன்மை - வெளி அழுத்தங்கள் காரணமாகத் தள்ளாடுகிறதோ என்று பொதுமக்களால் எண்ணிடத் தோன்றுமளவு அதன் செயல்பாடுகள் அமைந்ததைக் காணமுடிந்தது! உச்சநீதிமன்றம் தெரிவித்த பல கருத்துகளில் இதன் உணர்வு தென்பட்டது!

**“தனி மனித சுதந்திரத்தைப் பாதுகாக்க வேண்டிய தன் அவசியத்தை மீண்டும் மீண்டும் வலியுறுத்தியுள்ளது. நியாயமான காரணமின்றி நியாயமான ஜாமீன் மறுக்கப்படக் கூடாது - இந்த உரிமை நாகரிக குற்றவியல் நீதி அமைப்பின் இன்றியமையாத அங்கமாகும்”**

(Time and again the supreme court emphasized the need to protect personal liberty and held that the right not to be denied reasonable bail without just cause an essential element of criminal law)

- உச்சநீதிமன்றம் தெரிவித்த இந்தக் கருத்துகள் நடைமுறையில் பல வழக்குகளில் செயல்பட முடியாது உள்ளதைக் கண்கூடாகக் கண்டு கொண்டிருக்கிறோம்.

உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதி ஒரு நிகழ்ச்சியில் பேசும் போது, குற்றவியல் நீதியில் (criminal justice system) முக்கிய அடிப்படையான விதியே பெயில் தான்; ஜெயில் அல்ல! (Bail not Jail) என்று பேசியது பெரிய அளவில் ஏடுகளிலும் ஊடகங்களிலும் செய்தியாக வெளிவந்துள்ள நிலையில், நடப்பில் அந்தக் கருத்தை பல நீதிமன்றங்கள் கடைப்பிடிப்பதில்லை என்பது நீதித்துறையின்மீது ஒருவித நெருடலை ஏற்படுத்துவதாகவே உள்ளது.



**குற்றவியல் சட்டத்தை அணுகும் முறையில், உச்சநீதிமன்றம் உட்பட பல நீதிமன்றங்கள் இன்று அணுகிடும் முறையைக் காணும் போது - நீதிமன்றங்களிலும் இருள்சூழ்ந்த நிலை உள்ளதோ என்ற ஐயப்பாடு உருவாகிறது.**

சிலர் மீதான வழக்கு விசாரணை; அவர்கள் சிறைப் படுத்தப்பட்டு பல மாதங்களாகியும் தொடங்கப்படாத நிலையில், நீதிமன்றங்கள் இவர்களைக் குற்றவாளி எனத் தீர்மானிக்காத போதும், இவர்களின் சிறைவாசம் நீடித்துக் கொண்டிருக்கிறது.

**ஜனநாயகம் ஆபத்தில் உள்ளது என்று உச்சநீதிமன்றத்தின் நீதியரசர்கள் குற்றம் சாட்டியதை தொடர்புபடுத்திப் பார்த்தால் அரசியல் அதிகாரம் படைத்தோருக்கு நீதித்துறையும் தலைதாழ்ந்து நிற்கிறதோ? சில அழுத்தங்களுக்கு கட்டுப்பட வேண்டிய நிலையில் உள்ளதோ? - என்பன போன்ற கேள்விகள் மக்கள் மனதில் எதிரொலிக்கவே செய்கிறது. இந்தக் கேள்விகளுக்கு உரிய பதிலைத் தேடிப் பார்த்தால் மறுப்பதற்கு சரியான ஆதாரங்கள் கிடைக்கவில்லை.**

நாட்டில் உள்ள இந்தச் சூழலில்தான் பில்கிஸ் பானு வழக்கில் உச்சநீதிமன்றம் அளித்தத் தீர்ப்பை இருள் சூழ்ந்த வேளையில் நம்பிக்கை தரும் ஒளிக்கீற்றாக முதல்வர் கருதியுள்ளார் என எண்ணிடத் தோன்றுகிறது.

பில்கிஸ் பானு வழக்கில் உச்சநீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு ஒளிக்கீற்றாகத் தோன்றினாலும், அந்த ஒளி நீடிக்குமா என்பது சந்தேகமே!

அந்தச் சந்தேகத்தை நாம் எழுப்பவில்லை. கடந்த கால நிகழ்வுகளை நினைவூட்டி பில்கிஸ் பானுவின் மாமா அப்துல் ரசாக் மன்சூரி எழுப்பியுள்ளார்! இந்தக் கொடூர வழக்கு விசாரணையில் நேரடி சாட்சியாக (Eyewitness) இருந்தவர்; அவர்!





உச்சநீதிமன்றம் ‘குற்றவாளியை விடுவித்தது தவறு’ என்று கூறிவிட்டது. குற்றவாளிகள் சிறைவாசத்துக்கு அனுப்பப்பட்டாலும் அவர்கள் சிறையில் அடைக்க வைக்கப்படுவார்களா என்ற சந்தேகத்தை அவர் எழுப்பியுள்ளார். அவர்களுக்கு முதலில் நீதிமன்றம் அளித்த தீர்ப்பின்படி அவர்கள் முழுச் சிறைவாசம் அனுபவிக்கவில்லை. பல ஆண்டு காலம் அந்த மாநில அரசின் கருணையால் சிறைக்கு வெளியேதான் இருந்தார்கள். இப்போது கூட இந்தத் தீர்ப்பிற்குப் பிறகு அந்தக் குற்றவாளிகள் தலைமறைவாகிவிட்டதாகச் செய்திகள் வருகின்றன!



**அந்தக் குற்றவாளிகளுக்கு அந்த மாநில அரசு இத்தனை சலுகைகள் அளிப்பதின் பின்னணி என்ன? இந்த வழக்கில் குற்றவாளிகளுக்கு ஆதரவாக, அன்று குஜராத் கலவரப் பகுதியைப் பார்வையிட்ட அன்றைய பிரதமர் வாஜ்பாய் குறிப்பிட்டபடி, ராஜ தர்மத்தைக் கடைபிடிக்கத் தவறிய படுபாதகர்கள் உள்ளனர். அவர்களில் சிலர் இன்றும் உயர்பதவிகளில் அமர்ந்து இந்த நாட்டையும், நாட்டு மக்களையும் ஏமாற்றிக் கொண்டிருக்கிறார்கள்.**

இவர்கள் அகற்றப்படும்வரை பில்கிஸ் பானு போன்றோருக்கு முழு விடிவு இல்லை -உச்சநீதிமன்றத் தீர்ப்பில் இன்று காணப்படும் ஒளிக்கீற்றை மீண்டும் இருள் கவ்விடும்!

**அரசியல் போலி வேடதாரிகளின் ஆட்டத்துக்கு முடிவுகட்ட விழியுங்கள்!**

**ஏமாற்றுப் பேர்வழிகளுக்கு எதிராக எழுங்கள்!**

**ஏற்றமிகு புதிய வரலாறு படைக்கத் தயாராகுங்கள்!**



**சிலந்தி**



சென்னை மகாலிங்கபுரத்தில் உள்ள தனியார் மண்டபத்தில் சென்னை மேற்கு மாவட்ட திமுக சார்பில், ஆயிரம் விளக்கு சட்டமன்ற தொகுதி நிர்வாகிகளுக்கு பொங்கல் பரிசு வழங்கும் விழா நடந்தது. இதில், தயாநிதிமாறன் எம்.பி., கலந்து கொண்டு நிர்வாகிகளுக்கு பரிசு பொருட்கள் வழங்கினார். அருகில், மாநகராட்சி நிலைக்குழு தலைவரும், மாவட்ட செயலாளருமான நே.சிற்றரசு, பகுதி செயலாளர் மா.பா.அன்புதுரை உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



சென்னை வள்ளுவர்கோட்டம் மாநகராட்சி ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் மக்களுடன் முதல்வர் திட்டத்தின் சிறப்பு முகாம் நடந்தது. இதனை, தயாநிதிமாறன் எம்.பி. பார்வையிட்டு பொதுமக்கள் மனுக்கள் மீது எடுக்கப்படும் நடவடிக்கைகள் கூறித்து கேட்டறிந்தார். உடன், எழிலன் எம்.எல்.ஏ.., மாநகராட்சி நிலைக்குழு தலைவரும், மாவட்ட செயலாருமான நே.சிற்றரசு, பகுதி செயலாளர் மா.பா.அன்புதுரை உள்ளிட்ட நிர்வாகிகள் உள்ளனர்.

## உலக முதலீட்டாளர்கள் மாநாடு :

# சாதித்துக் காட்டிய முதலமைச்சர்.. தலை நிமிரும் தமிழ்நாடு!

சென்னையில் சமீபத்தில் நடைபெற்ற சர்வதேச முதலீட்டாளர்கள் மாநாடு தமிழ்நாட்டின் வளர்ச்சிப் பாதையில் மாபெரும் மைல் கல்.

கையெழுத்திடப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தங்களின் படி தமிழ்நாடு பெறப்போகும் முதலீடு 6 லட்சம் கோடி ரூபாயைத் தாண்டி வரலாற்றுச் சாதனை படைத்துள்ளது. இதை சாதித்துக் காட்டிய தமிழ்நாடு முதலமைச்சருக்கு தமிழ்நாடு மக்கள் வாழ்த்துகளைத் தெரிவித்து வரும் வேளையில், நாம் ஒன்றை நினைவு கூர வேண்டும்.

அது, எப்போதெல்லாம் தமிழ்நாட்டில் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வருகிறதோ அப்போதெல்லாம் தமிழ்நாடு மாபெரும் வளர்ச்சியை எட்டியுள்ளது.

கல்வி, வேலைவாய்ப்பு, மருத்துவம், உட்கட்டமைப்பு, போக்குவரத்து, விவசாயம் என்று அனைத்துத் துறைகளிலும் சீரான வளர்ச்சி,

அனைவருக்குமான வளர்ச்சி என்று இந்த வளர்ச்சியை சாத்தியப்படுத்திக் காட்டியது திமுக. தமிழ்நாட்டில் இந்த வளர்ச்சி எங்கிருந்து தொடங்கியது, அது எப்படி எல்லாம் பரவலாக்கப்பட்டது என்பதை விவரிக்கிறது இந்தத் தொகுப்பு.

1967 ல் பேரறிஞர் அண்ணா தமிழ்நாட்டின் முதலமைச்சராகப் பதவியேற்றபோது, தமிழ்நாடு உட்பட இந்தியாவின் பல்வேறு மாநிலங்களில் வறுமை தலைவிரித்தாடியது பசியும், பட்டினியும்தான் இந்தியாவின் பல்வேறு மாநிலங்களின் நிலையாக இருந்தது. தமிழ்நாட்டிலும் அந்தக் காலகட்டத்தில் இருந்த

பஞ்சத்தினால் பஞ்சம் பிழைக்க பலரும் இன்றைய மும்பை, அன்றைய பம்பாய் உள்ளிட்ட நகரங்களுக்கு வேலை தேடிச் சென்ற நிலை இருந்தது. மக்களின் அன்றைய உடனடித் தேவை என்பது உணவு தானியமாக இருந்தது. அதை மனதில் கொண்டே அறிஞர் அண்ணா தேர்தல் வாக்குறுதியாக திமுக ஆட்சிக்கு வந்தால் பேரறிஞர்

‘ஒரு ரூபாய்கு மூன்று படி அரிசி லட்சியம் ஒரு படி அரிசி நிச்சயம்’ என்ற வாக்குறுதியைத் தந்தார். திமுக ஆட்சிக்கு வந்தது.

1969 ல் அண்ணா மறைவுக்குப் பிறகு முதலமைச்சராக பொறுப்பேற்ற முத்தமிழ் அறிஞர் கலைஞர் தமிழ்நாட்டின் உணவு தானிய உற்பத்தியைப் பெருக்கச் செய்த நடவடிக்கைகளே இன்றளவும் தமிழ்நாட்டில் உணவுப் பஞ்சம் இன்றி இருப்பதற்குக் காரணம்.

கலைஞர் முதல்வராகப் பொறுப்பேற்றதும், நிலச்சீர்திருத்தச் சட்டத்தில் கொண்டு வந்த திருத்தத்தால், பெரும் பண்ணையார்களிடம் குவிந்திருந்த விவசாய நிலங்கள் ஏழை எளிய விவசாயிகள் வசமாகின. அது உற்பத்தியைப் பெருக்குவதற்கு முதல் காரணமாகியது. நிலத்தை விவசாயிகள் வசம் கொடுத்ததோடு நிற்காமல் விளைச்சலைப் பெருக்க இலவச மின்சாரம், ஏராளமான மானியங்கள், கூட்டுறவு சங்கங்களின் மூலம் கடன் உதவி என்று விவசாய உற்பத்தியைப் பெருக்க எல்லா விதமான நடவடிக்கைகளையும் எடுத்தார் கலைஞர். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் மட்டும் 42 அணைக்கட்டுகள் கட்டப்பட்டன.

பட்டினி இல்லை என்ற நிலை உருவானது. உணவு தானிய உற்பத்தியில் தன்னிறைவு பெற்றோம். உற்பத்தியான உணவு தானியங்களை மக்களிடம் கொண்டு போய் சேர்க்க தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் உருவாக்கப்பட்டு நியாய விலைக் கடைகள் எல்லா இடங்களிலும் திறக்கப்ப ட்டு மக்களுக்கு அவை கொண்டு சேர்க்கப்பட்டன.

உணவு கிடைத்தால் மட்டும் போதுமா, மக்களின் வாழ்க்கைத் தரம் அடுத்த கட்டத்திற்குச் செல்ல வேண்டாமா..அந்த இடத்தில் உருவானதுதான் சிப்காட். தமிழ்நாட்டில் பல்வேறு பகுதிகளுக்கும் தொழிற்சாலைகள் வந்தன.



தமிழ் கேள்வி
**தி.செந்தில் வேல்**
மூத்த ஊடகவியலாளர்.

முன்பெல்லாம் கிருஷ்ணகிரி, தருமபுரி ஆகிய மாவட்டங்கள் பின் தங்கிய மாவட்டங்களாக இருந்த காலத்தில் வளர்ச்சியின்மை வேலையின்மை ஆகியவற்றால் இளைஞர்கள் பலரும் நக்சல் இயக்கங்களால் ஈர்க்கப்பட்ட காலத்தில் அப்பகுதிகளின் தொழில் வளர்ச்சிக்காக ஒசூரில் ஏராளமான தொழிற்சாலை கள் கொண்டு வரப்பட்டன. இன்று ஓசூர் மிகப்பெரிய தொழில் நகரமாக நிற்பதற்கு வித்திட்டவர் கலைஞர்.

வளர்ச்சியின் இன்றியமையாத படிகளுள் ஒன்று போக்குவரத்தும், மின்சாரமும். ஒவ்வொரு கிராமத்திற்கும் மின்சாரத்தைக் கொண்டு போய் சேர்த்தது திமுக. அன்றைய காலத்தில் போக்குவரத்து என்பது சாமானியர்களுக்கு சாத்தியமில்லாத ஒன்று. பேருந்துகள் ஓரிரு உயர்சாதியினருக்கு மட்டுமே என்றிருந்த காலம். அதை மாற்றி பேருந்துகளை நாட்டுடைமையாக்கி அரசுப் போக்குவரத்துக் கழகம் என்ற ஒன்றை உருவாக்கியவர் கலைஞர் .இதன் மூலம். மிகச்சிறிய கிராமங்களில் இருந்த மக்களுக்கும் போக்குவரத்து வசதி சாத்தியமானது. அது தமிழ்நாடு பொருளாதாரத்தை அடுத்த கட்டத்திற்கு நகர்த்தியது. பின் நாட்களில் மிக மிக சிறிய கிராமங்களை அருகில் இருக்கும் சிறு நகரங்களோடு இணைக்கும் முயற்சியாக வந்ததுதான் கலைஞரின் மினி பஸ் திட்டம். அதனால் மிக மிக சிறிய கிராமங்க ளைச் சேர்ந்த இளைஞர்கள், இளம் பெண்கள் பலரும் அருகில் உள்ள சிறு நகரத்தில் வேலை வாய்ப்பை பெரும் நிலை உருவானது.

1996 ல் தி.மு.க. ஆட்சிப் பொறுப்பேற்ற போது, அப்போது கணினியின் பயன்பாடு குறித்து பெரிய அளவு புரிதல்கள் இல்லாத காலத்திலேயே, முத்தமிழ் அறிஞர் கலைஞர் கணினிதான் இனி வரும் காலம் என்பதை உணர்ந்து கணினி சார்ந்து முதலீடுகளை ஈர்க்க அனைதது முயற்சிகளையும் தொடங்கியன் விளைவு டைடல் பார்க் உள்ளிட்ட ஏராளமான மென்பொருள் பூங்காக்கள் தமிழ்நாட்டில் கால் பதித்தன.

இன்றைக்கு நம் வீடுகளில் உள்ள பிள்ளைகள் மென்பொருள் நிறுவனங்களில் லட்சத்தில் ஊதியம் பெறுகின்றனர் என்றால் அதற்கு வித்திட்டது திமுக அரசு.

இப்படி விவசாயம், உற்பத்தி சார் தொழில்கள், சேவை சார்ந்த தொழில்கள் என்று எல்லாவற்றையும் பார்த்துப் பார்த்து திட்டங்கள் தீட்டி தமிழ்நாட்டிற்கு தி.மு.க. கொண்டு வந்ததன் நீட்சியாக இன்றைக்கு

6 லட்சம் கோடிக்கும் அதிகமான முதலீடுகளை தமிழ்நாடு பெற்றிருக்கிறது. தமிழ்நாடு இன்னும் பலபடி முன்னே நின்றிருக்க வேண்டும். திமுக ஆட்சியில் கொண்டு வரப்பட்ட பல நல்ல மக்கள் நலன் சார்ந்தத் திட்டங்களை அடுத்து வந்த அ.தி.மு.க. அரசு முடக்கிக் போடுவதையே வழக்கமாக கொண்டிருந்ததன் காரணத்தால் நாம் சிலவற்றை இழக்க நேரிட்டது.

கடந்த அதிமுக ஆட்சிக் காலத்தில் பல்வேறு நிறுவனங்கள் தமிழகத்தை விட்டு வெளியேறி அண்டை மாநிலங்களை நோக்கிச் சென்றதையும் சில நிறுவனங்கள் முற்றிலுமாக மூடிவிட்டுச் சென்றதால் அதன் தொழிலாளர்கள் படும் பாட்டையும் நாம் பார்த்தோம்.

அ.தி.மு.க. ஆட்சியில் தமிழ்நாட்டிற்கு ஏற்பட்ட இழப்பையும் சேர்த்து ஈடுகட்டும் வகையில் தற்போது நம் முதலமைச்சர் ஸ்டாலின் அவர்கள் மாபெரும் சாதனையை நிகழ்த்திக் காட்டியுள்ளார். ரூபாய் 6 லட்சம் கோடி மதிப்பிலான முதலீட்டை தமிழ்நாட்டில் செய்வதற்கு நிறுவனங்கள் முன் வந்ததற்கு பல்வேறு காரணிகள் உள்ளன. பிரதானமாக, நம்முடைய சட்டம் ஒழுங்கு மிகச்சிறப்பாக இருக்கிறது. முதலீடு செய்யும் நிறுவனங்களுக்குத் தேவையான மனித வளம் தமிழ்நாட்டில் இருக்கிறது. அதிலும் இந்த ஆட்சியில் கொண்டு வரப்பட்டுள்ள நான் முதல்வன் உள்ளிட்ட திட்டங்களினாலும், புதுமைப் பெண் உள்ளிட்ட திட்டங்களினாலும் இளைஞர்களின் கல்வித் தரம் மேம்பட்டுள்ளதோடு உயர்கல்வியில் இடைநிற்றல் என்ற பேச்சுக்கே இடமில்லை என்ற நிலை உருவாகியுள்ளது.

இதனால், நிறுவனங்களுக்குத் தேவையான திறன்வாய்ந்த மனித ஆற்றலை தமிழ்நாடு தருகிறது. மேலும், கடுமையான இயற்கைச் சீற்றங்களையும் தாண்டி தமிழ்நாட்டின் உட்கட்டமைப்பு வசதிகளும் முதலீடுகள் தமிழ்நாட்டில் குவிவதற்கு முக்கிய காரணிகள்.

குறிப்பாக, தி.மு.க . அரசால் கொண்டு வரப்பட்ட மெட்ரோ உள்ளிட்ட திட்டங்கள் எல்லாம் இதற்கு மிகப்பெரும் காரணிகள் என்கின்றனர் பொருளாதார வல்லுநர்கள்.

குறிப்பாக ரிசர்வ் வங்கியின் முன்னாள் ஆளுநர் ரகுராம் ராஜன், கட்டணமில்லா மகளிர் பேருந்து திட்டம் என்பது பெண்களின் வேலை வாய்ப்பை அதிகப்படுத்தியுள்ளது என்று பாராட்டுகிறார். மகிந்ரா நிறுவனத்தின் ஆனந்த் மகிந்ரா, இந்தியாவுக்கான ஜப்பான் தூதர் உள்ளிட்ட பலரும் இந்த மாநாட்டையும், தமிழ்நாடு முதல்வரையும் பாராட்டியுள்ளது குறிப்பிடத்தக்கது.

குறிப்பாக, தென்மாவட்டங்களில் எழும் சமூக ரீதியிலான மோதல்களைத் தடுக்க அன்றைய கலைஞர் ஆட்சியில் கொண்டு வரப்பட்ட திட்டமான நான்குநேரி தொழில் நுட்பப் பூங்காவை அடுத்து வந்த அ.தி.மு.க. அரசு அப்படியே கிடப்பில் போட்டது. தற்போது நடைபெற்ற உலக முதலீட்டாளர்கள் மாநாட்டில்

ஏராளமான நிறுவனங்கள் தொடங்கப்பட இருப்பது தென் தமிழ்நாட்டு மாவட்ட மக்களுக்கு மிகப்பெரிய மகிழ்ச்சி.

இரண்டரை ஆண்டுகளில், இந்த அரசு செய்த சாதனைகளை நினைத்துப் பார்க்கிறேன்.

கலைஞர் நூற்றாண்டு பன்நோக்கு மருத்துவமனை.

கலைஞர் நூற்றாண்டு பிரமாண்ட நூலகம்

கீழடி அருங்காட்சியகம்

கிளாம்பாக்கம் பேருந்து நிலையப் பணிகளை நிறைவு செய்து மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வந்தது.

வேகமெடுக்கும் மெட்ரோ பணிகள் என்று எத்தனை எத்தனை.. இவை தவிர சமூக நீதிப் பார்வையில், காலை உணவு, அனைத்து சாதியினரும் அர்ச்சகர்,பெண் பிள்ளைகளின் உயர் கல்விக்கு மாதம் ஆயிரம் ரூபாய் மகளிருக்கு கட்டணமில்லா பேருந்து, மகளிர் உரிமைத் தொகை மாதம் 1000 ரூபாய் என்று ஏராளமான திட்டங்களைத் தந்த முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் சாதனைப் பட்டியலில் மற்றுமொரு மகுடம் இந்த முதலீட்டாளர்கள் மாநாடு. இதைத் திறம்பட நடத்திக் காட்டி முதலமைச்சரின் பாராட்டைப் பெற்ற தொழில்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜாவுக்கும் தமிழ்நாடு அரசின் அதிகாரிகளுக்கும் நன்றியோடு நம் வாழ்த்துகளையும் கூறுவோம்.

## பில்கிஸ்பானு வழக்கில் உச்சநீதிமன்ற தீர்ப்பு! பா.ஜ.க. அரசின் கன்னத்தில் விழுந்த அடியாகும்

# மக்களின் நம்பிக்கையை நீதிமன்றம் உறுதிபடுத்தியுள்ளது!

## விவசாயிகள் - தொழிலாளர்கள் கட்சித் தலைவர் பொன்குமார் அறிக்கை!

சென்னை, ஜன. 11-

விவசாயிகள், தொழிலாளர்கள் கட்சித் தலைவர் பொன்குமார் அறிக்கை வருமாறு:-

குஜராத் மாநிலம், கோத்ரா ரயில் எரிப்பு சம்பவத்தில் பில்கிஸ்பானு தொடுத்த வழக்கில் 08.01.2024 அன்று உச்சநீதிமன்றம் வரலாற்றுச் சிறப்பு மிக்க தீர்ப்பினை வழங்கி நீதியை நிலைநாட்டி நீதி மன்றத்தின் மீது மக்களுக்கு மீண்டும் நம்பிக்கையை ஏற்படுத்தி உள்ளது. பில்கிஸ் பானு கூட்டு பாலியல் வ ன்கொடுமை வழக்கில் தண்டிக்கப்பட்ட 11 பேரை முன்கூட்டியே விடுதலை செய்த குஜராத் அரசின் முடிவை உச்சநீதிமன்றம் ரத்து செய்துள்ளது. குஜராத் அரசு அதிகாரத்தை தவறாக பயன்படுத்தியிருப்பதாக குறிப்பி ட்ட நீதிபதிகள், வழக்கின் தீவிரத்தை மனதில் கொள்ளாமல் குஜராத் அரசு இந்த உத்தரவை பிறப்பித்துள்ளது என்றும் கண்டித்துள்ளனர். உண்மைகளை மறைத்து, குற்றவாளி களுக்கு ஆதரவாக குஜராத் மாநில பா.ஜ.க. அரசு செயல்பட்டுள்ளதாகவும் உச்சநீதிமன்றம் கண்டித்து உள்ளது. இந்த தீர்ப்பில் நீதிமன்றத்தை ஏமாற்றி மோசடியாக தீர்ப்பினை பெறப்பட்டுள்ளது என்று உச்சநீதிமன்றம் கூறியிருப்பது குஜராத் மாநிலம் மற்றும் ஒன்றிய பாரதிய ஜனதா ஆட்சியின் கன்னத்தில் விழுந்த மாபெரும் அடியாகும்.

கடந்த 2002 ஆம் ஆண்டு குஜராத் மாநிலத்தில் கோத்திரா ரயில் எரிக்கப்பட்டதும் அதனை தொடர்ந்து ஏற்பட்ட மத கலவரத்தால் மனிதர்கள் கொல்லப்பட்டதும் அறிந்ததே!. அப்போது 21 வயதான 5 மாத கர்ப்பிணி பில்கிஸ்பானு என்ற பெண்மணி கூட்டுப் பாலியல் வன்பலாத்காரம் செய்யப்பட்டுள்ளார். அவர் கண் முன்னாலேயே அவரது மூன்று வயது குழந்தை சுவரில் அடித்து அந்த வெறி கும்பல் கொலை செய்துள்ளது. பில்கிஸ்பானுவின் குடும்பத்தைச் சேர்ந்த ஏழு பேர் கொலை செய்யப்பட்டுள்ளனர்.

இந்த வழக்கில் குஜராத் காவல்துறை புலன் விசாரணை செய்யக்கூடாது. சி.பி.ஐ. தான் விசாரனை செய்ய வேண்டும் என்றும் குஜராத் மாநிலத்தில் இந்த வழக்கு நடைபெறக் கூடாது என்று மராட்டிய மாநிலத்திற்கு இந்த வழக்கை நீதிமன்றம் மாற்றியது. இந்த நிலையில் ஆயுள்தண்டனை வழங்கி தண்டிக்கப்பட்ட 11 குற்றவாளிகள் சிறையில் அடைக்கப்பட்டனர். முன்கூட்டியே குஜராத் அரசால் விடுதலை செய்யப்பட்டனர். இதில் குஜராத் மாநில மற்றும் ஒன்றிய பா.ஜ.க. அரசுகளின் பங்களிப்பு மிகப்பெரிய அளவில் உள்ளது. விடுதலை செய்யப்பட்ட குற்றவாளிகளை பா.



ஜ.க. வினர் இனிப்பு கொடுத்து வரவேற்றது வெட்கக்கேடான செயலாகும்.

இந்த நிலையில் பில்கிஸ்பானு இதனை எதிர்த்து தொடர்ந்த வழக்கில் தற்போது உச்சநீதிமன்றம் ஒரு சரியான தீர்ப்பை வழங்கி பா.ஜ.க. அரசுகளின் கன்னத்தில் ஓங்கி அறைந்துள்ளது. மராட்டிய மாநில நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு என்பதால் இதில் குற்றவாளிகளை விடுதலை செய்வது குறித்து மராட்டிய மாநில அரசு தான் முடிவு எடுக்க வேண்டும். ஆனால் மராட்டிய அரசின் அதிகாரத்தை குஜராத் அரசு அபகரித்து அவர்களை விடுவித்து ள்ளது என்று நீதிமன்றம் சாடியுள்ளது. அதைப்போல குஜராத் நீதிமன்றம் மற்றும் மராட்டிய நீதிமன்றங்கள் வழங்கிய தீர்ப்புகளை மறைத்து நீதிமன்றத்தை ஏமாற்றி மோசடியாக தீர்ப்புகளை பெற்றுள்ளனர் என்றும் மிக உச்சமான கண்டனத்தை பதிவு செய்து நீதிமன்றம் வழங்கி உள்ள தீர்ப்பு வரலாற்றுச் சிறப்புமிக்கதாகும்.

இந்த தீர்ப்பின் மூலம் குற்றவாளிகள் மீண்டும் சிறைப்படுத்துவதற்கான வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. 22 ஆண்டுகளுக்கு பிறகு தீர்ப்பு கிடைத்தாலும் அது நீதிக்கு கிடைத்திருக்கிறது. பெண்களின் உரிமை நிலை நாட்டப்பட்டிருக்கிறது. பா.ஜ.க. அரசின் செயல்பாடுகள் தோலுரித்துக் காட்டப்பட்டுள்ளன. பா.ஜ.க. குஜராத் அரசு நீதியை வளைத்துள்ளது வெளிப்படுகிறது. எனவே இந்த தீர்ப்பின் மூலம் ஒன்றிய மற்றும் குஜராத் பாரதிய ஜனதா அரசுகள் வெட்கி தலை குனிய வேண்டும். மக்கள் பாரதிய ஜனதா கட்சியின் உண்மையான முகத்தை உணர்ந்து கொள்ள வேண்டும்.

இவ்வாறு அவர் தமது அறிக்கையில் கூறி யுள்ளார்.



எழும்பூர் தொகுதி, ஆக்ஸீலியம் மேல்நிலைப்பள்ளியில் கழகச் சட்டத்துறை இணைச் செயலாளர் வழக்கறிஞர் இ.பரந்தாமன் எம்.எல்.ஏ. கலந்து கொண்டு, அப்பள்ளி மாணவிகளுக்கு விலையில்லா மிதி வண்டிகளை வழங்கினார். இந்நிகழ்வில் பகுதி முன்னாள் செயலாளர் ஜெ.விஜயகுமார், அவைத் தலைவர் வெ.மருதன், மாவட்டப் பிரதிநிதி காந்தி; கோமகன், எழும்பூர் ரமேஷ், 108–வது வட்டத் துணைச் செயலாளர் கே.சீனிவாசன், 108–வது வட்டத் துணைச் செயலளார் ஜெ.இந்திராகாந்தி; எழும்பூர் தெற்குப் பகுதி மகளிர் அணி துணை அமைப்பாளர் முத்துலெட்சுமி, எழும்பூர் தெற்குப் பகுதி இளைஞரணி துணை அமைப்பாளர் சிலம்பரசன், 108–வது வட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் ஜோ.சந்தோஷ்குமார், வட்டச் செயற்குழு உறுப்பினர் பா.ஆனந்த், அசினாபேகம், பெ.பிரவீண்குமார், ஜி.பிரவீண்குமார், ஆர்.வேலு உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### அரூர் கே.ஆர்.சுப்பிரமணி

### சனவரி 11 (2020)



1968ஆம் ஆண்டு பள்ளிப் பருவத்திலேயே, இந்தித் திணிப்பை எதிர்த்து மொரப்பூர் ரயில் நிறுத்தப் போராட்டத்தில் கலந்து கொண்டு கழகப் பணியாற்றத் தொடங்கியவர்.

1974ல் அரூர் நகரில் ‘இளைஞர் தி.மு.க.’ அமைப்பை தொடங்கி மாவட்டம் முழுவதும் கழகக் கொள்கை பரப்ப துவங்கிய இவர், அரூர் ஒன்றிய துணை துணைச் செயலாளர், பேரூர்ச் செயலாளர், இளைஞர் அணி அமைப்பாளர், மாவட்ட மாணவர் அணி மற்றும் தொண்டர் அணி அமைப்பாளர் என கழகத்தில் பல்வேறு பொறுப்புகளை வகித்தவர்.

கறுப்புக் கொடி போராட்டம், கைலாசம் கமிஷன் அரசாணை எரிப்புப் போராட்டம், ஈழத் தமிழர் ஆதரவு போராட்டம், இந்தித் திணிப்பு எதிர்ப்பு போராட்டம், கலைஞர் கைது எதிர்ப்பு மற்றும் ராணிமேரி கல்லூரி பிரச்சினையில் கழகத் தலைவர் கைது எதிர்ப்பு போன்ற கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு பல மாதங்கள் சிறைவாசம் அனுபவித்தவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**



தமிழ்நாட்டில் குடும்ப அட்டைதாரர்களுக்கு பொங்கல் தொகுப்புடன் ஆயிரம் ரூபாய் வழங்க முதலமைச்சர் அறிவித்து, துவங்கி வைத்ததை தொடர்ந்து, திண்டிவனம் 25வது வார்டில் உள்ள நியாய விலை கடையில் கவுன்சிலர் டி.டி.ஆர். ரேகாநந்தகுமார் பொங்கல் தொகுப்புடன், ஆயிரம் ரூபாய் வழங்கி தொடங்கி வைத்தார். அருகில் வழக்கறிஞர் அசோகன் மற்றும் திமுக நிர்வாகிகள் உள்ளனர்.

## பகுதிக் கழக செயலாளர் எஸ். முரளி தலைமை!

# மயிலை 124 அ வட்ட கழக நிர்வாகிகளுக்கு பொங்கல் பரிசு!

## மயிலை த.வேலு எம்.எல்.ஏ. வழங்குகிறார்!

## வட்டப் பொறுப்பாளர் மா.பா. அன்பு அறிவிப்பு!

சென்னை, ஜன.11-

மயிலை கிழக்கு பகுதி 124 அ வட்ட கழக நிர்வாகிகளுக்கு பொங்கல் பரிசு வழங்கும் விழா இன்று 11.01.2023, மாலை 6 மணியளவில், மயிலாப்பூர் சட்டமன்ற அலுவலகத்தில் நடைபெறுகிறது. பகுதி கழக செயலாளர் எஸ் முரளி தலைமை வகிக்கிறார்.

விமலா கிருஷ்ணமூர்த்தி எம்.சி. முன்னிலையில், சென்னை தென்மேற்கு மாவட்ட செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ. பரிசு பொருட்கள் வழங்குகிறார். இந்நிகழ்ச்சியில் 124 அ வட்டக் கழகத்தை சார்ந்த மாநில, மாவட்ட, பகுதி, வட்டக் கழக நிர்வாகிகள் அணிகளின் அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள், பாக முகவர்கள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பிக்கு மாறு வட்டக் கழக பொறுப்பாளர் மா.பா. அன்பு தெரிவித்துள்ளார்.



இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை நேற்று (10.01.2024) விளையாட்டுத் துறையில் தலைசிறந்து விளங்கும் பயிற்சியாளருக்கு ஒன்றிய அரசால் வழங்கப்படும் உயரிய விருதான துரோணாசாரியா விருது பெற்ற ஆர்.பி.ரமேஷ் நேரில் சந்தித்து வாழ்த்து பெற்றார். அப்போது அவருக்கு அமைச்சர் அவர்கள் நினைவுப் பரிசினை வழங்கினார். இந்நிகழ்வில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர். அதுல்ய மிஸ்ரா, உடனிருந்தார்.



இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை நேற்று (10.01.2024) விளையாட்டுத் துறையில் தலைசிறந்து விளங்கும் வீரர், வீராங்கனைகளுக்கு ஒன்றிய அரசால் வழங்கப்படும் உயரிய விருதான அர்ஜுனா விருது பெற்ற செஸ் வீராங்கனை செல்வி. ஆர். வைஷாலி நேரில் சந்தித்து வாழ்த்து பெற்றார். அப்போது அவருக்கு அமைச்சர் அவர்கள் நினைவுப் பரிசினை வழங்கினார். இந்நிகழ்வில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர். அதுல்ய மிஸ்ரா, உடனிருந்தார்.



இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை நேற்று (10.01.2024) 'சென்னை கிராண்ட் மாஸ்டர்ஸ் 2023' போட்டியில் வெற்றி பெற்ற செஸ் வீரர் குகேஷ் நேரில் சந்தித்து வாழ்த்துப் பெற்றார். அப்போது அவருக்கு அமைச்சர் அவர்கள் நினைவுப் பரிசினை வழங்கினார். இந்நிகழ்வில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர். அதுல்ய மிஸ்ரா உடனிருந்தார்.

### நம் உள்ளங்களிலும் இல்லங்களிலும்

# சமத்துவமும் சகோதரத்துவமும் பெருகி மகிழ்ச்சி நிறைக்கட்டும்!

## தமிழர் திருநாள் - பொங்கல் திருநாளை முன்னிட்டு பொங்கல் பரிசுத் தொகுப்பை வழங்கி முதல்வர் மு.க.ஸ்டாலின் பெருமிதம்!

சென்னை, ஜன. 11-

சமத்துவமும் சகோதரத்துவமும் நம் உள்ளங்களிலும் இல்லங்களிலும் பெருகி எங்கும் மகிழ்ச்சி நிறைக்கட்டும் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆழ்வார்பேட்டையில் பொங்கல் பரிசுத் தொகுப்பை வழங்கியது குறித்து சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

தமிழர் திருநாளாம் பொங்கல் திருநாளை மகிழ்ச்சியுடன் கொண்டாடிட அரிசி குடும்ப அட்டைதாரர்கள் மற்றும் முகாம்வாழ் இலங்கை தமிழர்கள் குடும்பங்களுக்கு தலா ஒரு கிலோ பச்சரிசி மற்றும் சர்க்கரை, முழுக்கரும்பு மற்றும் ரூ.1,000/- ரொக்கம் வழங்கும் திட்டம், இலவச வேட்டிகள் மற்றும் சேலைகள் வழங்கும் திட்டத்தை தொடங்கி வைத்தது குறித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

**"இல்லங்களில் இன்பம் பொங்கிடும் தமிழர் திருநாளின் மகிழ்ச்சியைக் கூட்டிடும் பொங்கல் பரிசுத் தொகுப்பு வழங்கும் பணியை ஆழ்வார்பேட்டையில் தொடங்கி வைத்தேன்.**

**சமத்துவமும் சகோதரத்துவமும் நம் உள்ளங்களிலும் இல்லங்களிலும் பெருகி எங்கும் மகிழ்ச்சியை நிறைக்கட்டும்!"**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.



சென்னை மேற்கு மாவட்டம் சேப்பாக்கம் பகுதி திமுக சார்பில் சேப்பாக்கம் திருவல்லிக்கேணி தொகுதி பொது மக்களுக்கு பொங்கல் திருநாளை முன்னிட்டு நலத்திட்ட உதவிகளை இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் மற்றும் தயாநிதி மாறன் எம்.பி. ஆகியோர் வழங்கினர். உடன் திமுக மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு, திமுக பகுதி செயலாளர் மதன்மோகன் உள்ளிட்ட கட்சி நிர்வாகிகள் உள்ளனர்.

### மூத்த குடிமக்கள் பயன்பெறும் வகையில்

# அறுபடை வீடுகளுக்கு கட்டணமில்லாமல் ஆண்டிற்கு 5 முறை ஆன்மிக சுற்றுலா!

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு அறிவிப்பு!



*சென்னை, ஜன.11-*

*முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு நேற்று (10.01.2024) ஆணையர் அலுவலகத்தில் திருக்கோயி ல்களில் பணியாற்றி ஓய்வுபெற்ற 2,646 அர்ச்சகர்கள் மற்றும் பணியாளர்களுக்கு பொங்கல் கொடை வழங்கும் திட்டத்தை தொடங்கி வைத்து, 10 நபர்களுக்கு ரூ.1,000/ க்கான காசோலைகளை வழங்கினார்.*

*அதனைத் தொடர்ந்து, தமிழ் கடவுள் முருக பெருமானின் அறுபடை வீடுகளான திருப்பரங்குன்றம், திருச்செந்தூர், பழனி, சுவாமி மலை, திருத்தணி, பழமுதிர் சோலை ஆகிய திருத்தலங்களுக்கு ஒரேமுறையாக மூத்த குடிமக்கள் தரிசனம் செய்திடும் வகையில் ஆன்மிக சுற்றுலா ஏற்பாடு செய்வது குறித்த ஆலோசனைக் கூட்டம் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் தலைமையில் நடைபெற்றது.*

*பின்னர் அமைச்சர் பி.கே. சேகர்பாபு செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது :*

*2023 2024 ஆம் ஆண்டிற்கான இந்து சமய அறநிலையத் துறை மானிய கோரிக்கையில் 249 அறிவிப்புகளை வெளியிட்டிருந்தோம். அதில் 40 ஆவது அறிவிப்பான திருக்கோ யில்களில் பணிபுரிந்து ஓய்வு பெற்ற அர்ச்சகர்கள் மற்றும் பணியாளர்களுக்கு பொங்கல் கொடை வழங்கப்படும் என அறிவிப்பினை நிறைவேற்றிடும் வகையில் இன்றைய தினம் ஓய்வுபெற்ற அர்ச்சகர்கள் மற்றும் பணியாளர்களுக்கு பொங்கல் கொடை வழங்கும் திட்டம் தொடங்கி வைத்து, ரூ.1,000/ க்கான காசோலையினை வழங்கினோம்.*

*இந்த ஆட்சி ஏற்பட்ட பிறகு, முதலமைச்சர் அவர்கள் அரசின் சார்பில் பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்றிருந்தாலும் இந்து சமய அறநிலையத் துறை சார்பில் நடைபெற்ற 58 நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு சிறப்பு செய்திருக்கிறார். இந்து சமய அறநிலையத் துறை சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சிகளில் அதிக எண்ணிக்கையிலான நிகழ்ச்சிகளில் பங்கேற்ற முதல்வராக நம்முடைய முதலமைச்சர் அவர்கள் திகழ்கிறார். இந்து சமய அறநிலையத்துறையின் அமைச்சர் என்ற வகையில் நானும் 304 நிகழ்ச்சிகளில் பங்கேற்றுள்ளேன்.*

*முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின்படி, தமிழ் கடவுள் என்று போற்றப்படுகின்ற முருகப் பெருமான் வீற்றிருக்கும் அறுபடை வீடுகளான திருப்பரங்குன்றம், திருச்செந்தூர், பழனி, சுவாமிமலை, திருத்தணி, பழமுதிர் சோலை ஆகியவற்றிற்கு மூத்த குடிமக்கள், ஒரேமுறையாக சென்று தரிசனம் செய்திட சிரமப்படு கிறார்கள் என்பதனை கருத்தில் கொண்டு, இந்த ஆறு திருக்கோயில்களுக்கும் கட்டணமில்லாமல் 60 வயது முதல் 70 வயதிற்குட்பட்ட 200 நபர்களை ஆண்டிற்கு 5 முறை அதாவது 1,000 பக்தர்களை அழைத்து சென்று தரிசனம் செய்து வைத்திட இந்து சமய அறநிலையத்துறை புதிய முயற்சியை மேற்கொண்டுள்ளது. அதன்படி, முதற்கட்ட அறுபடை வீடு ஆன்மிக சுற்றுப்பயணம் வருகின்ற 28.01.2024 அன்று தொடங்க இருக்கின்றது. இதற்கான விண்ணப்பத்தினை நாளை (11.01.2024) முதல் துறையில் இணையதளத்தில் பதிவிறக்கம் செய்து விண்ணப்பிக்கலாம். தகுதியுடைய 200 விண்ணப்பதாரர்கள் முதற்கட்ட பயணத்தில் அழைத்துச் செல்லப்படுவர். ஏனைய தகுதியுடைய விண்ணப்பதாரர்கள் அடுத்தடுத்த ஆன்மிக பயணங்களில் அழைத்து செல்ல முன்னுரிமை வழங்கப்படும்.*

*இந்து சமய அறநிலையத்துறையின் சார்பில், ஏற்கனவே மானசரோவர், முக்திநாத் மற்றும் இராமேசுவரம் - காசி ஆன்மிக பயணங்கள் செயல்படுத்தப்பட்டு பக்தர்கள் பயன் பெற்று வருகின்றனர். இராமேசுவரம் காசி ஆன்மிக பயணத்திற்கு இந்தாண்டு 300 நபர்கள் அழைத்து செல்லப்பட உள்ளனர். இதற்காக தமிழ்நாடு அரசு ரூ.75 லட்சத்தை மானியமாக வழங்கியுள்ளது.*

*பழனி, தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் தைப்பூச விழாவினை சிறப்பாக நடத்திட ஏதுவாக முன்னேற்பாடு பணிகள் தொடர்பாக அனைத்து துறை அலுவலர்களுடன் ஒருங்கிணைப்பு கூட்டம் நடத்தப்பட்டுள்ளது. பணி சுமை அதிகம் இல்லாத திருக்கோயில்களின் அலுவலர்கள் சிறப்பு பணியில் நியமிக்கப்பட உள்ளனர். சிறப்பு பேருந்துகள் இயக்கம் மற்றும் பக்தர்களுக்கு தேவையான அனைத்து அடிப்படை வசதிகளையும் செய்திட உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்த ஆட்சி ஏற்பட்ட பிறகு, பழனியில் தைப்பூசத்திற்கு 10 நாட்களுக்கு நாள்தோறும் 10,000 பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது. அறுபடை வீடு திருக்கோயில்களிலும் தைப்பூசத்திற்கு சிறப்பு தரிசன கட்டணத்தை ரத்து செய்வது தொடர்பாக கலந்தாலோசித்து முடிவெடுக்கப்படும்.*

*இவ்வாறு அமைச்சர் பி.கே. சேகர் பாபு தெரிவித்துள்ளார்.*

*இந்நிகழ்ச்சிகளில் சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் க.மணிவாசன், இந்து சமய அறநிலையத்துறை சிறப்பு பணி அலுவலர் ஜெ.குமரகுருபரன், ஆணையர் க.வீ.முரளீதரன், கூடுதல் ஆணையர்கள் அ.சங்கர், பேரூர் ஆதீனம் சீர்வளர்சீர் மருதாச்சல அடிகளார், சிரவை ஆதினம் சீர்வளர்சீர் குமரகுருபர சுவாமிகள், மயிலம் பொம்மபுர ஆதீனம் சீர்வளர்சீர் சிவஞானபாலய தேசிகர், உயர்மட்ட ஆலோசனை குழு உறுப்பினர்கள் மு.பெ.சக்தியவேல் முருகனார், திருமதி தேச மங்கையர்க்கரசி, ராமசுப்பிரமணி, திருமதி ந.திருமகள், திருமதி சி.ஹரிப்ரியா மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.*





சென்னை மேற்கு மாவட்ட திமுக சார்பில், தமிழர் திருநாள் மற்றும் பொங்கல் திருநாளை முன்னிட்டு, ஆயிரம் விளக்கு சட்டமன்ற தொகுதி, நுங்கம்பாக்கம் 110 வது வார்டுக்குட்பட்ட புதுத் தெரு, அவென்யூ ரோடு, பொண்ணங்கிண, குட்டி தெரு, மேயர் சிவ சண்முகம் தெரு, அப்பு தெரு, அப்பாசாமி தெரு, ஆகிய பகுதிகளில் வசிக்கும் 2000 குடும்பங்களுக்கு புடவை, வேட்டி, சட்டை மற்றும் 2024 ஆம் ஆண்டுக்கான நாள்காட்டியை, மாவட்ட கழக செயலாளர் நே.சிற்றரசு மக்களுக்கு வழங்கி, தமிழர் திருநாள் மற்றும் தமிழ் புத்தாண்டு நல்வாழ்த்துக்களை கூறினார்.

### சென்னையில் - மாபெரும் அயலகத் தமிழர் தின விழா!

# முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் விருதுகள் வழங்கி விழாப் பேருரை!

## அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தொடங்கி வைக்கிறார்! 58 நாடுகளிலிருந்து தமிழ் வம்சாவளியினர் பங்கேற்கின்றனர்!

சென்னை, ஜன. 11 -

தமிழ்நாடு அரசின் அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத் துறை மூன்றாம் ஆண்டாக 'தமிழ் வெல்லும்' என்னும் கருப்பொருளை மையமாகக் கொண்டு மாபெரும் அயலகத் தமிழர் தின விழாவை சென்னையில் நடத்துகிறது.

நந்தம்பாக்கம், சென்னை வர்த்தக மையத்தில் ஜனவரி 11 மற்றும் 12 ஆகிய இரு நாள்கள் நடைபெறும் இந்த விழாவில் இலங்கை, மலேசியா, ஆஸ்திரேலியா, சிங்கப்பூர், துபாய், இங்கிலாந்து, அமெரிக்கா உள்ளிட்ட 58 நாடுகளிலிருந்து தமிழ் வம்சாவளியினர், அமைச்சர் பெருமக்கள், கல்வியாளர்கள், கவிஞர்கள் உள்ளிட்டோர் பங்கேற்கின்றனர்.

அயல்நாடுகளில் வாழும் 1400க்கும் மேற்பட்டோர் இம்மாநாட்டில் பங்கேற்பதற்குப் பதிவுகள் செய்துள்ளனர். இதில், 218 சர்வதேசச் தமிழ் சங்கங்கள் 48 பிற மாநில தமிழ் சங்கங்கள் ஆகியவற்றைச் சேர்ந்த அயலகத் தமிழர்கள். இந்த இரண்டு நாள் நிகழ்விலும் பங்கேற்கிறார்கள்.

முதல் நாளான ஜனவரி 11 அன்று, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் விழாவைத் தொடங்கி வைத்துச் சிறப்புரை ஆற்றுகிறார். அத்துடன் இங்கு அமைக்கப்பட்டுள்ள நாற்பதுக்கும் மேற்பட்ட அயலகத் தமிழர் கண்காட்சி அரங்குகளைத் திறந்து வைக்கிறார். மேலும், கலைஞர் நூற்றாண்டை முன்னிட்டுச் சிறப்பு நேர்வாக அயலகத் தமிழர்களின் புத்தக வெளியீடு நிகழ்ச்சியும் நடைபெறும்.

இந்த விழாவில் சிறப்பு நிகழ்ச்சிகளாக நான்கு கலந்துரையாடல்களும் ஒரு கவியரங்கமும் நடைபெறுகின்றன. முதல் அமர்வாக நிதி, மனிதவள மேலாண்மை மற்றும் தொல்லியல்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு தலைமையில் தமிழின் தொன்மை - தொடர்ச்சி குறித்து துறைசார் வல்லுநர்கள் தங்கள் கருத்துகளைப் பகிர்கின்றனர்.

அதைத் தொடர்ந்து, கவிப்பேரரசு வைரமுத்து தலைமையில், சிந்து சமவெளி முதல் செயற்கை நுண்ணறிவு வரை - தொலைநோக்குச் சிந்தனையும் செயலும் என்ற தலைப்பில் கவியரங்கம் நடைபெறும்.

பின்பு, நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி வீராசாமி தலைமையில் அயலகத் தமிழர்களுக்காக தமிழ்நாடு அரசு முன்னெடுத்துச் செயல்படுத்தும் திட்டங்களான அயலகத் தமிழர்களுக்கு அளிக்கப்படும் அடையாள அட்டை, காப்பீடு வசதி, திருமண உதவித் திட்டம் போன்ற நலத் திட்டங்கள் குறித்த விவரங்களும், சிறப்புக் கலந்துரையாடலும் நடைபெறும்.

அடுத்தடுத்த நிகழ்வுகளாக தகவல் தொழில் நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் முனைவர் பழனிவேல் தியாகராஜன் தலைமையில் ஒளிரும் எதிர்காலம் - வாய்ப்புகளும் சவால்களும் என்ற தலைப்பிலும், தொழில்துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா தலைமையில் வணிகத்தில் தமிழர்கள் - வாய்ப்பும் வளர்ச்சியும் என்ற தலைப்பிலும் கலந்துரையாடல்கள் நடைபெறுகிறது.

தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இரண்டாம் நாளான ஜனவரி 12ம் தேதி விழாப்பேருரை நிகழ்த்துவதுடன் எனது கிராமம்' என்னும் முன்னோடித் திட்டத்தையும் தொடங்கி வைக்கிறார். இத்திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டில் தாங்கள் பிறந்த கிராமத்தை மேம்படுத்த விரும்பும் அயலகத் தமிழர்கள் அதற்குரிய நிதியை அளித்து இத்திட்டத்தின் வாயிலாகச் செயல்படுத்த வகை செய்யப்பட்டுள்ளது. நிகழ்ச்சியில் சிங்கப்பூர் உள்துறை மற்றும் சட்டத் துறை அமைச்சர் கா.சண்முகம் அவர்கள் தலைமை விருந்தினராகப் பங்கேற்கிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

விழாவின் முக்கிய நிகழ்வாக 'வேர்களைத் தேடி' திட்டத்தின் கீழ் ஆஸ்திரேலியா, கனடா, ஃபிஜி, இலங்கை உள்ளிட்ட நாடுகளைச் சேர்ந்த 57 அயலகத் தமிழ் மாணவர்கள் தாங்கள் பண்பாட்டுச் சுற்றுலா சென்ற அனுபவங்களைப் பகிர்ந்துகொள்ளும் நிகழ்ச்சி நடைபெறும்.

முதலமைச்சர் அவர்கள் தமிழ் இலக்கியம், கல்வி, சமூக மேம்பாடு, மகளிர் நலன், வணிகம், தொழில்நுட்பம், விளையாட்டு, மருத்துவம் ஆகிய 8 பிரிவுகளில் அயலகத் தமிழர்களுக்கு விருதுகள் வழங்குகிறார்கள்.

முதல் நாளின் தொடர்ச்சியாக இரண்டு கலந்துரையாடல்கள் நடைபெறும். ஐந்தாவதாக, நாடாளுமன்ற உறுப்பினர் திருச்சி சிவா ள் தமிழ் மொழி வளர்ச்சியில் அயலகத் தமிழர்களின் பங்களிப்பு குறித்த அமர்வின் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்கிறார்.

அயலகத்தில் தமிழ்க்கல்வி கற்றல் கற்பித்தல் குறித்த விவாத அமர்வு பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தலைமையில் நடைபெறுகிறது.

தமிழர்களின் பண்பாடு மற்றும் பாரம்பரியத்தை வெளிப்படுத்தும் விதமாக இரண்டு நாள்களிலும் நாட்டுப்புற இயல், இசை, நடனம் உள்ளிட்ட கலை நிகழ்ச்சிகளுடன் குறிப்பாக தமிழ்நாடு திட்டக்குழு உறுப்பினர் நர்த்தகி நடராஜ் அவர்களின் நடன நிகழ்ச்சியும் அரங்கேற உள்ளன.

தமிழர் மரபு மற்றும் பண்பாடுகளை விளக்கும் வகையில் தமிழர் நலன், தமிழர் கலை பண்பாடு, வணிகம், தமிழின் தொன்மை, தொடர்ச்சி, சர்வதேசத் தமிழ்ச் சங்கம் என்னும் கருப்பொருள்கள் வாரியாகக் கண்காட்சி அரங்குகள் அமைக்கப்பட்டுள்ளன.

தமிழர் கலை பண்பாடு மற்றும் வணிகத்தை விளக்கும் அரங்குகளும், தமிழின் தொன்மை மற்றும் தொடர்ச்சி குறித்து தமிழ்நாடு பாடநூல் கழகம், தமிழ் வளர்ச்சித் துறை, தமிழ் தொல்லியல் துறை, தமிழ் இணையக் கழகம், இலங்கை தமிழ்க் கலை கண்காட்சி, அரங்குகளும், சர்வதேசத் தமிழ்ச் சங்கங்கள் கண்டங்கள் வாரியான அரங்குகளும் அமைக்கப்பட்டுள்ளன.

இவற்றுடன், முதலமைச்சர் அவர்களின் கனவுத்திட்டமான "நான் முதல்வன்" திட்டம் மற்றும் சிப்காட், வழிகாட்டி (கைடன்ஸ்), டிட்கோ, சிட்கோ உள்ளிட்ட துறைகளின் காட்சி அரங்குகளும் இடம் பெற்றுள்ளன. சுற்றுலா வளர்ச்சித் துறை மற்றும் பூம்புகார், தமிழ் வளர்ச்சித் துறை, கோ ஆப்டெக்ஸ், அயலக நலத் துறை ஆகிய துறைகளின் செயல்பாடுகளை விளக்கும் காட்சி அரங்குகளும் இடம்பெற்றுள்ளன.

வெளிநாடு வாழ் தமிழர்கள் இங்கு முதலீடுகள் செய்வதற்கான வசதி வாய்ப்புகளை குறித்து விளக்குவதற்காக ஸ்டார்ட் அப், டிஎன் ஃபேம் உள்ளிட்ட கண்காட்சி அரங்குகளும் அமைக்கப்பட்டுள்ளன என்பது மிகவும் குறிப்பிடத் தக்கது.

இக்கண்காட்சி அரங்குகளைக் காண்பதன் மூலம் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அயலகத் தமிழர் நலன் கருதி ஆற்றிவரும் அரும்பணிகளையும் அயலகத் தமிழர் தாய்த் தமிழ் நாட்டின் மீது கொண்டுள்ள ஈடுபாடுகளையும் பொதுமக்கள் அறிந்து மகிழும் வாய்ப்புகள் ஏற்படும்.

இரண்டு நாள் நடைபெறும் இந்த விழாவிற்கு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர் நலத் துறை அமைச்சர் செஞ்சி கே.மஸ்தான் முன்னிலை வகிக்கிறார். அயலகத் தமிழர் நல வாரியத்தின் தலைவர் கார்த்திகேய சிவசேனாதிபதி வரவேற்புரை ஆற்றுகிறார்.





அமைச்சர், தமிழ்நாடு பாரத சாரண சாரணியர் இயக்கத் தலைவர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, சென்னை(கி) மாவட்டப் பாரத சாரண சாரணியர் இயக்கம் மற்றும் ஆலடி அருணா அறக்கட்டளை சார்பாக ஒருங்கிணைக்கப்பட்ட"புகை மாசு விழிப்புணர்வுப் பேரணி" நிகழ்வைத் தொடங்கி வைத்து சிறப்புரையாற்றினார். இந்நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி வீராசாமி, சட்டமன்ற உறுப்பினர் ஐட்ரீம் மூர்த்தி, கழகச் சுற்றுச்சூழல் அணி மாநில தலைவர் திருமதி.பூங்கோதை ஆலடி அருணா, மாவட்டக் கழகச் செயலாளர் இளைய அருணா, மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் மார்ஸ் ஆகியோரும் கலந்து கொண்டார்கள்.



சென்னை, அயன்புரம், போர்ச்சியஸ் ரோடு, ஜாயிண்ட் ஆபிஸ் அருகில் நேற்று (10.01.2024) சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க. மாணவர் அணி சார்பில், கலைஞர் 100–80 "திசையெங்கும் அவர்சொல் ஒளியானது! திராவிட மாடலின் வழியானது!! என்ற மாபெரும் பொதுக் கூட்டத்தில் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி முன்னாள் தலைவரும் திருச்சிராப்பள்ளி நாடாளுமன்ற உறுப்பினருமான சு.திருநாவுக்கரசர், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு , பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்கள். இந்நிகழ்ச்சியில் சென்னை மாநகராட்சி மேயர் திருமதி.பிரியா ராஜன், வில்லிவாக்கம் சட்டமன்ற உறுப்பினர் அ.வெற்றி அழகன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினரும் தமிழ்நாடு அரசு சேமிப்பு கிடங்கு தலைவருமான ப.ரங்கநாதன், மாவட்ட அமைப்பாளர் வானவில் விஜய், தொகுதி பொறுப்பாளர் வே.கௌதமன், பகுதி செயலாளர் வே.வாசு, மாநகராட்சி மண்டலக் குழுத்தலைவரும் பகுதி செயலாளருமான கூ.பீ.ஜெயின், துணை அமைப்பாளர் சுரேஷ் எஸ்.எஸ்.மணிகண்டன், டி.ஜானகிராமன் மற்றும் உள்ளாட்சி அமைப்புப் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

### சைதை மேற்கில் தமிழர் திருநாளாம் பொங்கல் திருநாளை முன்னிட்டு

# கழகத் தோழர்களுக்கு அமைச்சர் மா.சுப்பிரமணியன் இன்று புத்தாடைகள் வழங்குகிறார்!

## தலைமை : எம்.கிருஷ்ணமூர்த்தி எம்.சி. - சைதை மா.அன்பரசன் முன்னிலை! வழக்கறிஞர் எம்.ஸ்ரீதரன் எம்.சி. - தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி., துணைமேயர் மு.மகேஷ்குமார் பங்கேற்பு!

சென்னை, ஜன.11-


சென்னை தெற்கு மாவட்டம் - சைதை மேற்கு பகுதியில் கழகத் தோழர்களுக்கு தமிழர் திருநாளாம் பொங்கல் திருநாளை முன்னிட்டு இன்று 11.01.2024 வியாழக்கிழமை மாலை 4 மணியளவில் சைதாப்பேட்டை விஜிபி சாலையில் உள்ள அன்னை வேளாங்கன்னி கலைக் கல்லூரியில் சைதை மேற்கு பகுதி செயலாளரும் பத்தாவது மண்டலக் குழுத் தலைவருமான எம்.கிருஷ்ணமூர்த்தி தலைமையிலும் பொதுக்குழு உறுப்பினர்கள் சைதை மா.அன்பரசன், வழக்கறிஞர் எம்.ஸ்ரீதரன் எம்.சி., ஆகியோர் முன்னிலையிலும் பகுதி கழக நிர்வாகிகள் களக்காடி எல்லப்பன், த.சம்பத், ஆர்.ரமேஷ், வி.பி.ஜானகிராமன், கவிதா கௌதமன் ஆகியோர் வரவேற்பில் சென்னை தெற்கு மாவட்ட கழக செயலாளரும், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சருமான மா.சுப்பிரமணியன் புத்தாடைகளை வழங்குகிறார்.

இந்நிகழ்வில் தென் சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர் தமிழச்சி தங்கபாண்டியன், பெருநகர சென்னை மாநகராட்சி துணை மேயர் மு.மகேஷ்குமார், வட்ட அவைத் தலைவர் எஸ்.குணசேகரன், பொதுக்குழு உறுப்பினர் மின்னல் கந்தப்பன் பங்கேற்க உள்ளனர்.

மேலும் இந்நிகழ்வில் சைதை மேற்கு பகுதிக்குட்பட்ட வட்டக் கழக செயலாளர்கள் சை.மு.சேகர், ந.தமிழரசு, அட்கோ கமலநாதன், அணிகள் மாவட்ட அமைப்பாளர்கள் சைதை சாதிக், நா.மணிகண்டன், அஞ்சல் ராமன், கோ.பாஸ்கர், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் ஆர்.கிருஷ்ணகுமார், மாவட்டப் பிரதிநிதிகள் கு.புகழ்வேந்தன், டி.என்.சிவமணி, கிண்டி ஆர்.எல்.செல்வம், ஜி.கே.ராமச்சந்திரன், வீ.மதிவாணன், பொன்ஜெய்சிங், ஆர்.ரவி, பால்கார் ரவி, ஜி.பாபு மற்றும் அணிகளின் மாவட்ட துணை அமைப்பாளர்கள், பகுதி அமைப்பாளர்கள், வட்டக்கழகநிர்வாகிள், பகுதிதுணை அமைப்பாளர்கள், பகுதி பிரதிநிதிகள், வட்டச் செயற்குழு உறுப்பினர்கள், வட்ட இளைஞரணி நிர்வாகிகள், பாகப் பொறுப்பாளர்கள், பாக களப்பணியாளர்கள், கழக முன்னோடிகள் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்க உள்ளனர்.

இந்நிகழ்வின் இறுதியாக 142வது வட்டக் கழக செயலாளர் எம்.நாகா, 142வது (அ) வட்டக் கழக செயலாளர் எஸ்.பி.கோதண்டம் ஆகியோர் நன்றி கூற உள்ளனர்.

2 ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி



காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர்,
காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட துணை செயலாளர்,
திரு. சிறுவேடல் க.செல்வம்
அவர்களின் தந்தையும்
திராவிட முன்னேற்ற கழகத்தின் மூத்த முன்னோடியுமான
சிறைகண்ட செம்மல்
சிறுவேடல் திரு. வெ.கணேசன்
முன்னாள் மாவட்ட பிரதிநிதி
அவர்களின்
நினைவைப் போற்றி வணங்குகிறோம்...
க.சுந்தர் B.Sc.,MLA.,
காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட கழக செயலாளர், உத்திரமேரூர் சட்டமன்ற உறுப்பினர்
சி.வி.எம்.பி.எழிலரசன் BE.,BL., MLA.,
கழக மாணவர் அணி செயலாளர், காஞ்சிபுரம் சட்டமன்ற உறுப்பினர்
ஆர்.கே.தேவேந்திரன் | எஸ்.ராஜலட்சுமிகுஜராஜ் BE., MBA.,
ஒ.கு.பெ.தலைவர் – ஒ.து.செ. | மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர்
நீங்கா நினைவுகளுடன் :-
படுநெல்லி B.M.பாபு
ஒன்றிய கழக செயலாளர்
வாலாஜாபாத் வடக்கு ஒன்றிய தி.மு.க

### தமிழ்நாட்டில்

# குறு, சிறு, நடுத்தர நிறுவனங்களை மேம்படுத்த அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா?

## மாநிலங்களவையில் இரா.கிரிராஜன் கேள்வி!



புதுடெல்லி, ஜன. 11-

2020 க்குப் பிறகு ஆயிரக்கணக்கான MSME யூனிட்கள் மூடப்பட்டன என்பது உண்மையா, அப்படியானால், அதன் விவரங்கள்; இன்றைய நிலவரப்படி, மாநில வாரியாக, நாட்டில் பதிவு செய்யப்பட்ட மொத்த MSME, ஜி.எஸ்.டி வரிவிதிப்பு முறையின் கீழ் தமிழ்நாட்டில் குறிப்பாக குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களை ஆதரிப்பதற்கும் மேம்படுத்துவதற்கும் ஒன்றிய அரசு ஏதேனும் பயனுள்ள நடவடிக்கைகளை எடுத்துள்ளதா; அப்படியானால், அதன் விவரங்கள் மற்றும் இது தொடர்பாக ஒதுக்கப்பட்ட மொத்த நிதி; மற்றும் நாட்டில் சிறப்பாகச் செயல்படும் சிறு, குறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு ஊக்கத் தொகை மற்றும் இதர ஊக்குவிப்புகளை வழங்க ஒன்றிய அரசு எடுத்துள்ள பல்வேறு நடவடிக்கைகள் என்ன? என்பதை மாநிலங்களவையில் உறுப்பினர் இரா.கிரிராஜன் எழுத்து மூலம் எழுப்பிய கேள்விக்கு ஒன்றிய குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் துறை இணையமைச்சர் பானு பிரதாப் சிங் வர்மா அளித்த பதில் வருமாறு.

உதயம் பதிவு போர்ட்டலின்படி, 2020-21ல் மூடப்பட்ட குறு, சிறு (MSME) மற்றும் நடுத்தர நிறுவனங்களின் எண்ணிக்கை 175, 2021-22ல் 6,222, 2022-23ல் 13,290, 2023-24 12,790. மொத்தம் 32,477 (MSME) ஆகும்.

எம்.எஸ்.எம்.இ அமைச்சகம், அதன் பல்வேறு திட்டங்கள், திட்டங்கள் மற்றும் கொள்கை முன்முயற்சிகள் மூலம், தமிழ்நாடு உட்பட நாட்டில் உள்ள எம்.எஸ்.எம்.இ.க்களை ஜி.எஸ்.டி வரிவிதிப்பு முறையின் கீழ் ஆதரிக்கிறது மற்றும் மேம்படுத்துகிறது. பிரதமரின் வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம் (பி.எம்.இ.ஜி.பி), குறு மற்றும் சிறு நிறுவனங்களுக்கான கடன் உத்தரவாதத் திட்டம், குறு மற்றும் சிறு தொழில்கள்-கிளஸ்டர் மேம்பாட்டுத் திட்டம் (எம்.எஸ்.இ-சி.டி.பி), தொழில்முனைவோர் திறன் மேம்பாட்டுத் திட்டம் (ஈ.எஸ்.டி.பி), கொள்முதல் மற்றும் சந்தைப்படுத்தல் ஆதரவுத் திட்டம் (பி.எம்.எஸ்.எஸ்), சர்வதேச ஒத்துழைப்புத் திட்டம், கருவி அறைகள், தொழில்நுட்ப மைய அமைப்பு திட்டம், தேசிய எஸ்.சி / எஸ்.டி ஹப் (என்.எஸ்.எஸ்.எச்), எம்.எஸ்.எம்.இ சாம்பியன்கள் ஆகியவை எம்.எஸ்.எம்.இ அமைச்சகத்தின் திட்டங்கள் / திட்டங்களில் அடங்கும். சிறு, குறு மற்றும் நடுத்தரத் தொழில் அமைச்சகம் மத்திய அரசின் திட்டங்களைச் செயல்படுத்துகிறது. மாநில வாரியாக நிதி ஒதுக்கப்படுவதில்லை. எம்.எஸ்.எம்.இ அமைச்சகம் தேசிய விருதுத் திட்டத்தின் மூலம் நாட்டில் சிறப்பாக செயல்படும் எம்.எஸ்.எம்.இ நிறுவனங்களுக்கு ஊக்கத் தொகை மற்றும் ஊக்கத்தை வழங்குகிறது, இதில் அமைச்சகம் எம்.எஸ்.எம்.இ.க்களின் புதுமையான முயற்சிகளை ஊக்குவிக்கிறது மற்றும் எம்.எஸ்.எம்.இ. களின் தரமான வளர்ச்சியின் பரந்த ஆர்வத்தில் அவர்களின் உணர்வை ஊக்குவிக்கிறது.

இது தவிர, எம்.எஸ்.எம்.இ நிலையான (இசட்.இ.டி) சான்றிதழ் திட்டம் ஒரு மதிப்பீட்டு மாதிரியை அடிப்படையாகக் கொண்டது, இது எம்.எஸ்.எம்.இ.க்கள் தரத்தை மேம்படுத்தவும், நிலைத்தன்மையை நோக்கி நகரவும் அவற்றின் செயல்முறைகள் மற்றும் அமைப்புகளை மேம்படுத்த ஊக்குவிக்கும் பல்வேறு அளவுருக்களை உள்ளடக்கியது. வெண்கலம், வெள்ளி மற்றும் தங்க சான்றிதழ் நிலைகளில் பல்வேறு அளவுருக்களை மதிப்பீடு செய்வதன் மூலம் குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் பயனடைகின்றன.

இவ்வாறு ஒன்றிய அமைச்சர் தமது பதிலில் கூறியுள்ளார்.

### தமிழ் நாட்டின் தொழில் வளர்ச்சியில்

# உலக முதலீட்டாளர்கள் மாநாடு பெரும் பாய்ச்சலாக இருக்கும்!

## 'தினத்தந்தி' தலையங்கத்தில் முதல்வருக்குப் பாராட்டு!

சென்னை, ஜன. 11

தமிழ்நாட்டின் பொருளாதாரத்தை 2030 ஆம் ஆண்டிற்குள் ஒரு டிரில்லியன் அமெரிக்க டாலராக உயர்த்த இலக்கு நிர்ணயித்து, உலக முதலீட்டாளர்கள் மாநாட்டை நடத்தி ஐந்தரை லட்சம் கோடி ரூபாய் முதலீட்டை பெற்றதன் மூலம் தமிழ்நாட்டில் தொழில் வளர்ச்சி பெரும் பாய்ச்சலாக இருக்கும் என தினத்தந்தி நாளேடு 10.1.2024 அன்று தலையங்கத்தில் பாராட்டியுள்ளது.

அத்தலையங்க விவரம் வருமாறு:-

2030 ஆம் ஆண்டுக்குள் தமிழ்நாட்டின் பொருளாதாரத்தை ஒரு டிரில்லியன் அமெரிக்க டாலராக (ரூ.83 லட்சம் கோடி) உயர்த்த இலக்கு நிர்ணயித்து, அதை நோக்கியே அனைத்து முயற்சிகளையும் முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் எடுத்து வருகிறார். அந்த இலக்கை அடைவது என்பது சாதாரண காரியமல்ல. அதற்கு தற்போது ஆண்டுக்கு 10 சதவிகிதம் அளவுக்கு இருக்கும் வளர்ச்சி 16.5 சதவீதமாக உயரவேண்டும் என்று 'டெலாயிட்' அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. தனியார் பங்களிப்பு இதற்கு மிகமிக இன்றியமையாதது.

தனியார் பங்களிப்பு வசதிகளை ஈர்க்கும் வகையில், தமிழக அரசு கடந்த 7, 8 ஆம் தேதிகளில் தமிழ்நாடு உலக முதலீட்டாளர்கள் மாநாட்டை சென்னையில் நடத்தியது. இந்த மாநாட்டில் மூலமாக ரூ.5½ லட்சம் கோடி முதலீட்டை ஈர்க்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருந்தது. தலைமைத்துவம், நீடித்த நிலைத்தன்மை மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சி என்ற கருப்பொருள்களை அடிப்படையாகக் கொண்டு இந்த மாநாடு நடத்தப்பட்டது. அமெரிக்கா, இங்கிலாந்து, ஜப்பான், ஆஸ்திரேலியா, பிரான்ஸ், ஜெர்மனி, டென்மார்க், சிங்கப்பூர், தென் கொரியா ஆகிய 9 நாடுகள் பங்குதாரர் நாடுகளாகவும், மேற்கு ஆஸ்திரேலியா மற்றும் தைபே பொருளாதார மற்றும் கலாச்சார மையம் ஆகியவை சர்வதேச பங்குதாரர்களாகவும் தமிழ்நாடு அரசுடன் இணைந்து செயல்பட்டன.

7 நாடுகள் இந்த மாநாடு கண்காட்சியில் தங்களது சர்வதேச அரங்குகளை அமைத்திருந்தன. இதுமட்டுமல்லாமல், 35க்கும் மேற்பட்ட நாடுகளைச் சேர்ந்த முன்னணி நிறுவனங்களின் பிரதிநிதிகளும், இந்திய தொழிலதிபர்கள், தலைமை நிர்வாகிகளும் கலந்து கொண்டனர். இதுவரையில் நடந்த 2 முதலீட்டாளர்கள் மாநாட்டையும் விட இந்த மாநாடு மிகப் பெரிய வெற்றியைப் பெற்றுள்ளது. தமிழ்நாடு அரசு நிர்ணயித்த இலக்கையும் தாண்டி ரூ.6 லட்சத்து 64 ஆயிரத்து 180 கோடி அளவுக்கு முதலீடுகளை ஈர்க்கும் வகையில், 631 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டன. கூடுதலாக ரூ.1 லட்சத்து 14 ஆயிரத்து 180 கோடி முதலீடு கிடைத்ததன் மூலம் இலக்கையும் மிஞ்சி சாதனை படைத்துவிட்டது. இந்த ஒப்பந்தங்கள் மூலம் 14 லட்சத்து 54 ஆயிரத்து 712 பேருக்கு நேரடியாகவும், 12 லட்சத்து 35 ஆயிரத்து 945 பேருக்கு மறைமுகமாகவும் என மொத்தம் 26 லட்சத்து 90 ஆயிரத்து 657 வேலை வாய்ப்புகள் உருவாக்கப்பட உள்ளன.




தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு, வர்த்தகத்துறை, எரிசக்தித் துறை, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, தகவல் தொழில் நுட்பத் துறை, டிஜிட்டல் சேவைகள் துறை மற்றும் பெருந் தொழிற்சாலைகளுக்கு வலுவான விற்பனையாளர் தளத்தை வழங்கும் குறு, சிறு, நடுத்தர தொழில் நிறுவனங்கள் சார்பாகவே இந்த முதலீடுகள் ஈர்க்கப்பட்டுள்ளன.

குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுமென்றால், பெரிய நிறுவனங்களான டாட்டா பவர் நிறுவனம் ரூ.70,800 கோடிக்கும், அதானி நிறுவனம் ரூ.42,768 கோடிக்கும், செம்ப்கார்ப் நிறுவனம் ரூ.37,538 கோடிக்கும், வின்பாஸ்ட் நிறுவனம் ரூ.16 ஆயிரம் கோடிக்கும், டாட்டா எலெக்ட்ரானிக்ஸ் நிறுவனம் ரூ.12,082 கோடிக்கும், ஜெ.எஸ்.டபிள்யூ. நிறுவனம் ரூ.12 ஆயிரம் கோடிக்கும் முதலீடு செய்ய இருக்கிறது.

இதனால், தமிழ்நாடு அரசு நிர்ணயித்துள்ளபடி, குறைந்தபட்சம் 75 சதவீத ஒப்பந்தங்கள் செயல்பாட்டுக்கு வந்துவிடும் என்ற வகையில், இந்த மாநாடு தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சியில் பெரும் பாய்ச்சலாக இருக்கும் என்று சொன்னால், அது மிக மிக சாலப்பொருத்தமானதாக அமையும். புதிதாக உருவாகப்போகும் வேலைவாய்ப்புகளால் லட்சக்கணக்கான இளைஞர்களின் குடும்பங்களில் ஒளிவிளக்கு ஏற்றப்படும்.

இவ்வாறு அத்தலையங்கத்தில் கூறப்பட்டுள்ளது.



எழும்பூர் தொகுதி, வார்டு எண்.61, புதுப்பேட்டை, வீரபத்திரத் தெருவிலுள்ள சமுதாய நலக் கூடத்தில் நடைபெற்ற மக்களுடன் முதல்வர் சிறப்பு முகாமைக் கழகச் சட்டத்துறை இணைச் செயலாளரும் எழும்பூர் சட்டமன்ற உறுப்பினருமான வழக்கறிஞர் இ.பரந்தாமன் பார்வையிட்டு, அம்முகாமில் பொதுமக்களிடமிருந்து பெறப்பட்ட கோரிக்கை மனுக்கள் குறித்து அதிகாரிகளுடன் கலந்தாலோசித்தார். மேலும், இம்முகாமில் கலந்துகொண்டு உரிய ஆவணங்களுடன் பிறப்புச் சான்றிதழ் கோரி விண்ணப்பித்தவருக்கு, உடனடியாக அச்சான்றிதழை அளிப்பதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, இ.பரந்தாமன், எம்.எல்.ஏ.வால் வழங்கப்பட்டது. இந்நிகழ்வில் எழும்பூர் தெற்குப் பகுதி முன்னாள் செயலாளர் ஜெ.விஜயகுமார், அவைத் தலைவர் வெ.மருதன், மாவட்டப் பிரதிநிதி காந்தி, கி.புஷ்பராஜ், பிரம்மதேவன், எழும்பூர் ரமேஷ், அசினா பேகம், குணசேகர், பொன்முடி உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

## மதம் - ஜாதியின் பெயரால் பாசிச பா.ஜ.க. பரப்பும் அவதூறுகளை முறியடிப்போம்!

# இந்தியாவைக் காப்பாற்ற ‘இந்தியா’ கூட்டணியை வெற்றிபெறச் செய்வோம்!

## கழக அயலக அணியின் முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு கருத்தரங்கம் - மாவட்ட - பன்னாட்டு நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டத்தில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் உரை!

**சென்னை,ஜன.11–**

**மதத்தின் பெயரால் – ஜாதியின் பெயரால் பாசிச பா.ஜ.க. பரப்பும் அவதூறுகளை முறியடிப்போம்! என்றும், இந்தியாவை காப்பாற்ற ‘இந்தியா’ கூட்டணியை வெற்றிபெறச் செய்வோம்! என்றும் கழக அயலக அணியின் முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு கருத்தரங்கம் மற்றும் மாவட்ட – பன்னாட்டு நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டத்தில் உரையாற்றுகையில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் குறிப்பிட்டார்.**



கழக அயலக அணி சார்பில், முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் நூற்றாண்டு கருத்தரங்கம் மற்றும் மாவட்ட – பன்னாட்டு நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் நேற்று சென்னை, ராயப்பேட்டை ஒய்.எம்.சி.ஏ அரங்கில் நடைபெற்றது.

இதில் கழக இளைஞர் அணிச் செயலாளர், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கலந்துகொண்டு சிறப்புரை ஆற்றினார்.

அப்போது அவர் பேசியதாவது :

“கழகத்தின் அயலக அணி கூட்டத்தில் பங்கேற்று, உங்களை சந்திப்பதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகின்றேன். தமிழினத் தலைவர் கலைஞரின் நூற்றாண்டில் இந்த நிகழ்ச்சி நடப்பது நமக்கு பெருமை. இந்த நிகழ்ச்சிக்கான அழைப்பிதழை உங்களுடைய செயலாளரும் நிர்வாகிகளும் கொடுத்தார்கள். அதோடு ஒரு நினைவுப் பரிசையும் அளித்தார்கள்.

அழைப்பிதழுடன் இதையும் கொடுக்கின்றோம் என்று சொன்னார்கள், என்னவென்று பார்த்தால், ஒரு பெரிய டிராவல் பேக். அயலக அணி என்பதால், டிராவல் பண்ணுவதற்குப் பேக்கையும் சேர்த்து கொடுக்கிறீர்களா? எடுத்துப் போவதற்கு டிரஸ் வைத்தும் கொடுப்பீர்களா? என்று கேட்டேன். `ஆமாம் தலைவரே, அதுவும் உள்ளே இருக்கிறது. புதுச் சட்டை, துணி, காலண்டர் எல்லாம் வைத்திருந்தார்கள்.

அதன்பிறகு அவர்களிடம் கேட்டேன். ஊருக்குப் போனால் காசு எடுத்துக் கொண்டு போக மாட்டோமா, மாநாட்டு நிதி கொடுக்கலாம் அல்லவா? என்று கேட்டேன். உங்கள் செயலாளர் கண்டிப்பாகக் கொடுத்து விடுகிறேன் என்று சொன்னார். இப்போது வரைக்கும் கொடுக்கவில்லை. அது உங்களுடைய இஷ்டம் உங்களுடைய வசதி விழா மேடை எல்லாம் பிரமாண்டமாக அமைத்திருக்கிறீர்கள். இதுவே கிட்டத்தட்ட ஒரு மாநாடு மாதிரி நடந்து கொண்டிருக்கிறது. எனவே, உங்கள் வசதியைப் பொறுத்து, மாநாட்டின் நிதியைக் கொடுக்கலாம்.

### கலைஞர் நின்று வென்ற தொகுதி!

இன்னொரு சிறப்பு என்னவென்றால், இந்த நிகழ்ச்சி நடக்கின்ற இடம் நம்முடைய சேப்பாக்கம் திருவல்லிக்கேணி தொகுதி. நான் சட்டமன்ற உறுப்பினராக இருப்பதால் சொல்லவில்லை. முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் இரண்டு முறை இந்தச் சேப்பாக்கம்–திருவல்லிக்கேணி தொகுதியில் சட்டமன்ற உறுப்பினர். எனவே நீங்கள் எவ்வளவுதான் நிகழ்ச்சி நடத்தினாலும் உலகெங்கிலும் தி.மு.க என்றாலும் கடைசியாக இந்தச் சேப்பாக்கம்–திருவல்லிக்கேணி தொகுதிக்குத்தான் வந்தாக வேண்டும். கலைஞர் நின்று வென்ற தொகுதி.

தமிழ்நாட்டு மக்கள் மட்டுமல்ல, உலகம் எங்கும் வாழ்கின்ற தமிழர்கள் உயர வேண்டும் என்று தன்னுடைய வாழ்நாள் முழுவதும் உழைத்தவர்தான் நம்முடைய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள். கலைஞர் அவர்களின் அந்த உணர்வுக்கு உயிர் கொடுக்கும் வகையில்தான் நம்முடைய கழகம் அயலக அணியை நம்முடைய முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்கள் ஜனவரி 2021 ஆம் ஆண்டு தொடங்கி வைத்தார்.

எனவே இது ஒரு ஆலோசனை கூட்டம் மட்டுமல்ல. இது ஒரு பிறந்தநாள் விழா கூட்டம். உங்களுடைய அணிக்கு இது மூன்றாவது பிறந்த நாள். ஒரு சில குழந்தைகள்தான் வளர்ந்த மனிதர்கள்போல பல்வேறு சாதனைகள் செய்கிறார்கள் என்று நாம் தொலைக்காட்சியில் ஆச்சரியத்தோடு பார்ப்போம். அது மாதிரிதான் நம்முடைய அயலக அணியும் மூன்று வயது குழந்தையாக இருந்தாலும், இந்த அணி செய்கின்ற மக்கள் பணிகள் மகத்தானவை. போற்றுதலுக்குரியவை.

நான் பொறுப்பு வகிக்கின்ற இளைஞர் அணிக்கும் இந்த அயலக அணிக்கும் ஒரு ஒற்றுமை உண்டு. நம்முடைய சகோதரர் மனுராஜ் சொன்னார். தி.மு.க ஆரம்பித்த முதல் அணி இளைஞர் அணி தி.மு.க ஆரம்பித்த கடைசி அணி அயலக அணி என்று.

இந்திய ஒன்றியத்திலே ஒரு மாநிலத்தில் ஒரு மாநிலக் கட்சி இளைஞர் அணி என்று ஆரம்பித்தது என்றால், அது நம்முடைய திராவிட முன்னேற்றக் கழகம்தான். 1980 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது, இளைஞர் அணி. அதேபோல இந்தியாவிலேயே ஒரு மாநிலக் கட்சி முதன் முதலில் அயலக அணி ஆரம்பித்திருக்கிறது என்றால், அதுவும் நம்முடைய திராவிட முன்னேற்றக் கழகம்தான். இன்னொரு பொருத்தம் இரண்டையுமே ஆரம்பித்தது நம்முடைய தலைவர் அவர்கள்தான். இது ஒரு வசதியான அணி. ஏன், சொல்கிறேன் என்று தெரியும் என்று நினைக்கிறேன். அணிகளிலேயே அதிகமான எம்.பி.க்கள் கொண்டது இந்த அயலக அணிதான். சகோதரர் அப்துல்லா, சகோதரர் செந்தில், சகோதரர் கலாநிதி வீராசாமி என்று மிகப்பெரிய ஒரு பட்டியல் இருக்கிறது. ஆனால் சகோதரர் தனுஷ் குமார், சகோதரர் அண்ணாதுரை என எங்கள் இளைஞர் அணிக்குக் கூட இரண்டு எம்.பி.க்கள்தான் இருக்கிறார்கள்.

பொதுவாக, ஒன்றிய அரசுக்கு வெளியுறவுத் துறை இருக்கும். அதேபோல், நம்முடைய திராவிட மாடல் அரசுக்குக்கூட அயலகத் தமிழர் நலத் துறை இருக்கிறது. அதை நிறுவியதும் நம்முடைய முத்தமிழறிஞர் கலைஞரின் ஆட்சியில் தான். தி.மு.க ஆட்சியில்தான்.

### கழக வெளியுறவுத்துறை அயலக அணி!

இப்போது நம்முடைய கழகத்தினுடைய வெளியுறவுத் துறையாக அயலக அணி சிறப்பாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. பல நாடுகளில் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள் ஏதாவது பிரச்சனை என்றால், தூதரகங்களுக்கு போகிறார்களோ இல்லையோ முதலில் கழகத்தின் அயலக அணியைத்தான் முதலில் தொடர்பு கொண்டு கோரிக்கைகளை வைக்கிறார்கள்.

இந்த அணி உருவாக்கப்பட்ட முக்கிய நோக்கம். உலகம் முழுக்க இருக்கின்ற தமிழ் மக்களுக்குப் பக்கபலமாக இருக்க வேண்டும். அவங்களுக்குத் தேவையான அனைத்து உதவிகளையும் உடனே செய்து தரவேண்டும் என்ற ஒரே நோக்கம்தான். கழகத் தலைவர் நம்முடைய முதலமைச்சரின் எண்ணத்தின்படி தமிழ்நாட்டு மக்களுக்கு உலகத்தின் எந்த மூலையில் என்ன பாதிப்பு என்றாலும், முதலில் சென்று நிற்பது நம்முடைய அயலக அணிதான். அதற்குப் பல உதாரணங்கள் இருக்கின்றன.

கட்சி, ஜாதி, மதம், மொழி, இனம் என எந்தப் பாகுபாடும் இல்லாமல், தமிழ்நாட்டு மக்கள் என்ற அடிப்படையில் வெளிநாட்டில் வசிக்கக் கூடிய தமிழர்களுக்குக் கழக அயலக அணி பல்வேறு உதவிகளைச் செய்து வருகின்றது. தமிழர்கள் பண்டைக் காலத்திலிருந்தே உலகம் முழுக்கப் பயணம் செய்து வாழ்ந்தார்கள். இன்னும் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும் என்றால், கடந்த 25 வருடங்களில் நம்முடைய தமிழர்கள் பணி செய்வதற்காகவும், வேலைக்காகவும், படிக்கவும் இப்போது வெளிநாடுகளில் அதிகமாக பயணம் செய்து கொண்டிருக்கிறார்கள்.

அதற்குக் காரணமும் நம்முடைய கலைஞர் அவர்கள்தான். உயர்கல்வியும், தகவல் தொழில்நுட்பத் துறையும் கலைஞர் அவர்கள் ஏற்படுத்திய அந்தச் சாதனைகளை, கொண்டு வந்த திட்டங்கள் தான். முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்தான் தமிழ்நாடு முழுவதும் ஏராளமான தொழில்நுட்பக் கல்லூரிகளைத் திறந்தார்கள். நாட்டிலேயே முதன்முறையாக 1997 ஆம் ஆண்டு ஐ.டி பாலிசி தகவல் தொழில்நுட்ப கொள்கையை உருவாக்கினார்கள்.

### வெளிநாடுகளில் தமிழர்கள் பணி செய்ய வாய்ப்பு!

டைடல் பார்க்கை சென்னைக்குக் கொண்டு வந்து, பல பன்னாட்டு நிறுவனங்களைத் தமிழ்நாட்டிற்குக் கொண்டு வந்தார்கள். இந்த எக்ஸ்போஷர்தான் தமிழ்நாட்டைச் சேர்ந்த பலர் இப்போது வெளிநாடுகளுக்குச் சென்று அங்கு தங்கி மேற்படிப்பைத் தொடரவும் பணி வாய்ப்புகள் பெறவும் காரணமாக அமைந்தது.

தி.மு.க அரசை நாம் ஏன் `திராவிட மாடல் அரசு’ என்று சொல்கிறோம் என்பதற்கு. இது மிக முக்கியக் காரணம். நாம் படித்தோம் நல்ல வேலையில போய்ச் சேர்ந்தோம். இனிமேல் நம்ம வாழ்க்கை நம்ம குடும்பம் என்று இல்லாமல் இந்த வாய்ப்புக்கு திராவிட இயக்கம்தான் காரணம் என்பதை உணர்ந்து, நம்முடைய அயலக அணியில் இணைத்துக்கொண்டு பணியாற்றி வருகின்ற உங்களையெல்லாம் எவ்வளவு பாராட்டினாலும் போதுமானது அல்ல.

இன்றைக்கு நம்முடைய கழக அயலக அணி 37 நாடுகளில் அமைப்புகளை உருவாக்கி இருக்கிறது. துவங்கிய 3 வருடத்தில் 37 நாடுகளில் அமைப்புகளை உருவாக்கியிருக்கிறது என்றால், மிகப்பெரிய ஒரு சாதனை இது. இன்னும் அனைத்து நாடுகளிலும் பெருக வேண்டும்.

கடந்த ஆண்டு நம்முடைய முதலமைச்சர் அவர்கள் முதலீடுகள் ஈர்ப்பதற்காக வெளிநாடுகளில் சுற்றுப்பயணம் செய்த போது நம்முடைய அயலக அணி தமிழர்கள் தி.மு.கவின் மீது வைத்திருந்த, முதலமைச்சரிடம் நீங்கள் காட்டிய பாசத்தின் மூலம் தெரிந்து கொண்டோம்.

குக்கிராமங்கள் முதல் தலைமுறையாகப் படித்துப் பட்டம் பெற்று இன்று வெளிநாடுகளில் நல்ல வேலையில் அமரக்கூடிய வாய்ப்பினை ஒடுக்கப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு உருவாக்கிக் கொடுத்தது, நம்முடைய திராவிட முன்னேற்றக் கழக அரசு. ஆனால், வெளிநாடுகளில் இருக்கக் கூடிய ஒரு சில தமிழர்களின் மத்தியில், திராவிட இயக்கம் பற்றிய தவறான கருத்துக்களைத் திட்டமிட்டு பரப்புகின்றனர். அந்தப் பொய்ப் பிரச்சாரங்கள் பற்றி என்னை விட உங்களுக்குத் தெரியும். களத்தில் இருப்பது நீங்கள். அந்த அவதூறுகளுக்கு எல்லாம் உடனடியாகப் பதிலடி கொடுத்து நமது நியாயங்களை எடுத்துச் சொல்ல வேண்டியது உங்களுக்குள் கூடுதலான ஒரு கடமை. 37 நாடுகளில் இருக்கக்கூடிய நம்முடைய அயலக அணியின் அமைப்பு பறந்து விரிந்து அனைத்து நாடுகளுக்கும் செல்ல வேண்டும். அனைத்து நாடுகளிலும் அயலக அணியை நாம் பலப்படுத்த வேண்டும்.

### சிவா எம்.பி. தலைமையில் மீட்புக் குழு அமைப்பு!

உக்ரைன், ரஷ்யா போர் மூண்டபோது அதில் உள்ள நம்முடைய தமிழ்நாட்டு மாணவர்களை மீட்க, கழக அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்தது. நம்முடைய நாடாளுமன்ற உறுப்பினர் திருச்சி சிவா அவர்களின் தலைமையில், ஒரு குழுவை நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அமைத்தார்கள்.

அந்தக் குழு டெல்லியிலேயே முகாமிட்டிருந்தது. மீட்புப் பணிகளை உறுதி செய்தது. அந்தப் பணிகளில் அயலக அணிகளின் பங்களிப்பு மிக மிக முக்கியமானது. அதுமட்டுமல்ல இப்பொழுது, இஸ்ரேல் பாலஸ்தீன போரின்போது தமிழ்நாட்டு மாணவர்களை மீட்டு வரும் பணியை நம்முடைய கழக அரசு மேற்கொண்டது. அயலகத் தமிழர்களுக்குத் தமிழ்நாடு அரசு இந்த அளவுக்கு அக்கறையுடன் செயல்பட்டு வருகின்றது. இதுபோன்ற நம்முடைய அரசின் செயல்பாடுகளையும் நமது இயக்கத்தின் கொள்கைகளையும் வெளிநாட்டில் வசிக்ககூடிய மக்களுக்கு நீங்கள்தான் எடுத்துச் செல்ல வேண்டும். வெளிநாடுகளில் வசிக்ககூடியவர்கள் குறிப்பாக, இளைஞர்கள் சமூக வலைத்தளங்களின் மூலம்தான் நம் தமிழ்நாட்டின் அரசியலை தெரிந்து கொள்கிறார்கள். சமூக ஊடகங்களில் திராவிடத்திற்கு எதிரான கருத்துக்களைச் சங்கிகள் தொடர்ந்து பரப்பிக் கொண்டு வருகிறார்கள்.

பாசிச பா.ஜ.க பெயரளவில் மட்டும் இது போன்ற அவதூறுகளைப் பரப்புவது கிடையாது. மதத்தின் பெயராலும், ஜாதியின் பெயராலும், அவ்வளவு ஏன், தமிழின அடையாளத்தின் பெயராலும் கூட திராவிடத்தின் மீது அவதூறுகளைப் பரப்பிக் கொண்டு வருகிறார்கள். அவர்கள் எத்தனை முகமூடிகளைப் போட்டுக்கொண்டு வந்தாலும், அதையெல்லாம் முறியடிக்க, நமக்கு முகமூடிகள் தேவையில்லை.

தந்தை பெரியாருடைய முகம் போதும், பேரறிஞர் அண்ணாவின் எழுத்துக்கள் போதும், முத்தமிழறிஞர் கலைஞரின் பேச்சுகள் போதும். தகவல் தொழில்நுட்பம் வளர்ந்து இருக்கக்கூடிய காலம். அதிகமாக இருக்கக்கூடிய காலம் இது. இந்த நவீன காலத்தில், நீங்கள் எல்லாம் வெளிநாடுகளில் வாழ்ந்தாலும், நாம் எல்லோரும் அடிக்கடி கலந்துரையாடுகின்ற வாய்ப்பை நமக்கு இப்பொழுது இந்த இணையதளம் கொடுத்திருக்கின்றது. இது போன்ற வாய்ப்புகளை அடிக்கடி பயன்படுத்திக் கருத்தரங்குகளை நடத்துங்கள் கலந்துரையாடல் கூட்டங்களை நடத்துங்கள். அப்பொழுதுதான் நம் மீது எங்கே அவதூறு கிளம்பினாலும் அவற்றை அங்கேயே நம்மால் முறியடிக்க முடியும். திராவிட இயக்கம் பற்றி நிறைய நூல்கள் வருகின்றன இப்பொழுது சமீபத்தில், இளைஞர் அணியின் சார்பில், முத்தமிழறிஞர் பதிப்பகத்தின் வாயிலாக ஒன்பது புத்தகங்களை வெளியிட்டிருக்கிறோம். அவற்றையெல்லாம் வாங்கிப் படியுங்கள். அவற்றை நீங்கள் வசிக்கக்கூடிய நாடுகளில் உள்ள பெரிய பெரிய பல்கலைக்கழகங்களுக்கு பரிசாகக் கொடுங்கள். அப்போதுதான் நம்முடைய திராவிட இயக்கம் பற்றி அந்தப் பல்கலைக்கழகங்களில் ஒரு பேசு பொருளாக இருக்கும் அதைப்பற்றி விவாதிப்பார்கள். அதைப் பற்றிப் பேசுவார்கள்.

### வெளிநாடுவாழ் தமிழர்களுக்கு கழக அயலக அணி உதவி!

நம் ஊரில் இருந்து இப்பொழுது பல பேர் வெளிநாடுகளுக்குத் தொழிலாளர்களாகவும் செல்கிறார்கள். அங்கு இருக்கக்கூடிய தொழிலாளர்கள் சட்டங்கள் குடியுரிமை விதிமுறைகள் பற்றிப் போதுமான விழிப்புணர்வு இப்போது இல்லை. சில நேரங்களில் வெளிநாடுகளில் உள்ள நிறுவனங்கள் ஏமாற்றும் பொழுது அவர்களுடைய ஒற்றை நம்பிக்கையாக நம்முடைய அயலக அணி செயல்பட்டு வருகின்றது. குறிப்பாக வெளிநாட்டில் மருத்துவ உதவி தேவைப்படும் பொழுது தமிழ்நாட்டு மக்களுக்கு ஏராளமான உதவிகளை நம்முடைய அயலக அணி செய்துள்ளது.

உடல்நிலை சரியில்லாமல் போனாலும், வேறு சில காரணங்களாலும் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள் வெளிநாட்டில் உயிரிழக்க நேர்ந்தால் அவருடைய உடலை தமிழ்நாட்டிற்குக் கொண்டு வருவது மிகப்பெரிய போராட்டமாக இருந்தது. நம்முடைய அமைப்புச் செயலாளர் குறிப்பிட்டுப் பேசினார்கள். முன்பெல்லாம் வெளிநாட்டிற்குப் படிக்கப் போனால் அங்கு எதிர்பாராத விதமாக இறந்தால் இறந்த உடலை, இங்கு வீட்டுக்கு, சொந்த ஊருக்குக் கொண்டு வருவதற்கு எட்டு மாதத்திலிருந்து ஒரு வருடம் கூட ஆகியிருக்கிறது. ஆனால், நம்முடைய அயலக அணி செயல்பாட்டிற்கு வந்த பிறகு, ஏதாவது அசம்பாவிதம் நடந்தால் இறந்தவரின் உடலை குறைந்தது 10 நாட்களுக்குள் அவர்களின் உறவினர்களிடம் கொண்டு சேர்த்திருக்கிறோம். இந்தப் பெருமை நம்முடைய அயலக அணிக்கு உண்டு.

இந்த அணியின் மனிதநேய பணிகளைப் பற்றி ஒரு உதாரணத்திற்குக் குறிப்பிட விரும்புகின்றேன். ஏனென்றால் அதில் எனக்கும் ஒரு சம்பந்தம் உண்டு. ஒருமுறை 2022 ஆம் ஆண்டு என்று நினைக்கிறேன். சமூக வலைதளத்தில் எனக்கு ஒருவர் கோரிக்கை வைக்கிறார். அமெரிக்காவில் இருந்து. ஒரு மெசேஜ் பண்றார் அவருடைய இரண்டு வயது குழந்தைக்கு உடம்பு சரியில்லை. அமெரிக்காவில் மருத்துவச் சேவைக்கான கட்டணம் மிக மிக அதிகம். அவர் தன்னுடைய முழுப் பணத்தையும் செலவு செய்து விட்டார். அதனால் ஒரு முடிவு எடுத்து இந்தியா திரும்பி விடலாம் என்று கிளம்பி வருகிறார்கள்.

வரும்போது துருக்கி நாட்டிற்கு மேல் விமானம் பறந்து கொண்டிருக்கும் பொழுது குழந்தைக்கு மிகவும் உடம்பு சரியில்லாமல் போகிறது. அங்கே விமானத்தில் இருக்கக்கூடிய ஒரு மருத்துவர், உடனே விமானத்தைத் தரையிறக்க வேண்டும். உடனே, இந்தக் குழந்தையை எமர்ஜென்சி வார்டில் சேர்க்க வேண்டும் என்று சொல்கிறார்கள். உடனே விமானத்தை இஸ்தான்பூல் விமான நிலையத்தில் தரை இறக்குகிறார்கள். அங்கே இருக்கக்கூடிய ஒரு தனியார் மருத்துவமனையில் அனுமதித்து ட்ரீட்மெண்ட் கொடுக்கப்படுகிறது. இதையெல்லாம் சொல்லி, எனக்கு ஒரு குறுஞ்செய்தி அனுப்பினார். உடனே, இந்த விஷயத்தை நம்முடைய அணியின் செயலாளர் திரு.அப்துல்லா அவர்களை அழைத்து நான் சொன்னேன். உடனே அயலக அணியின் மூலமாக அனைத்து உதவிகளும் செய்யப்பட்டன.

15 நாட்கள் அந்தக் குழந்தைக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு அதன் பிறகு, அந்தக் குழந்தை சென்னைக்குத் திரும்பி வருவதற்கும் அந்த அப்பாவிற்கும் குழந்தைக்கும் காசு இல்லை. நான் உடனே இந்தக் கோரிக்கையை நம்முடைய முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களிடம் கொண்டு போய்ச் சொன்னேன். சொன்ன உடனே கழகத் தலைவர் அவர்கள் 10 லட்சம் ரூபாய் அறிவித்து, அவர்கள் மீண்டும் இந்தியா வருவதற்கான அனைத்து உதவிகளையும் செய்தது நம்முடைய கழகத்தின் அயலக அணிதான். அந்தக் குழந்தையின் பெயர் சந்தியா. அப்பாவின் பெயர் காஞ்சிபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த மனோஜ் அவர்கள்.

### வெளிநாடுகளில் தி.மு.க.வின் முகம்!

அதேபோல் வெளிநாடுகளில் தி.மு.க கழகத்தின் முகமாக நீங்கள் தான் செயல்பட்டு கொண்டிருக்கிறீர்கள். உங்கள் பணிகளை நம்முடைய முதலமைச்சர் அவர்கள் தொடர்ந்து கூர்ந்து கவனித்துக் கொண்டு வருகிறார்கள். அதேபோல் நானும் உங்கள் அணிகளின் அனைத்து பணிகளையும் கவனித்துக் கொண்டு வருகிறேன். கலைஞருடைய பிறந்தநாள் நம்முடைய தலைவருடைய பிறந்தநாள் என்னுடைய பிறந்தநாள் அனைத்தையும் சிறப்பான வகையில் மக்களுக்குப் பயனளிக்கக் கூடிய வகையில் சிறப்பாக நிகழ்ச்சிகள் எல்லாம் நடத்திக் கொண்டு வருகிறீர்கள்.

உங்களுக்கு என்னுடைய வாழ்த்துகள். உங்களுடைய கழகப் பணி உண்மையிலேயே போற்றுதலுக்கு உரியது. உங்களுக்கு உரிய அங்கீகாரம் நிச்சயம் சரியான நேரத்தில் கிடைக்கும் என்கிற உறுதியை இந்த நேரத்தில் உங்களுக்கு அளிக்கிறேன்.

இந்த நேரத்தில் உங்களுக்கு இன்னொரு கோரிக்கை. இளைஞர் அணி மாநாடு வருகின்ற 21ஆம் தேதி சேலத்தில் நடைபெற இருக்கின்றது. நீங்களெல்லம் உங்களுடைய ஊரிலிருந்து சமூக வலைத்தளங்கள் மூலமாக நம்முடைய இளைஞர் அணி மாநாடு ஏன் நடத்தப்படுகிறது, நம்முடைய மாநாட்டின் பெயரே மாநில உரிமைகள் மீட்பு மாநாடு. இங்குச் சிறப்பான தீர்மானங்கள் நிறைவேற்றி இருக்கிறீர்கள். அதற்கு என்னுடைய வாழ்த்துக்கள்.

நம்முடைய மாநாடு ஏன் நடத்தப்படுகிறது நம்முடைய மாநில உரிமைகள் எல்லாம் பறிக்கப்படுகிறது அதற்கு நாம் எப்படி எல்லாம் போராட்டம் பண்ணிக் கொண்டிருக்கிறோம். இதையெல்லாம் உலகத்தில் வாழ்கின்ற அத்தனை தமிழர்களிடத்திலும் நீங்கள் தான் கொண்டு போய்ச் சேர்க்க வேண்டும். நீங்கள் செய்வீர்கள் என்று அந்த நம்பிக்கை எனக்கு இருக்கின்றது.

அதேபோல இங்கே அணியின் செயலாளர் அப்துல்லா அவர்கள் எனக்கு நன்றி சொன்னார். அவர் ஒரு வார்த்தை சொன்னார் நான் இல்லாமல் அவர் இல்லை என்று என்னைச் சொன்னார். அதை அவருக்கே நான் திருப்பிக் கொடுத்துவிடுகிறேன். அவருக்கு மட்டும் இல்லை இங்கு இருக்கக்கூடிய உங்கள் அத்தனை பேருக்கும் நான் திருப்பிக் கொடுத்து விடுகிறேன். நீங்கள் இல்லாமலும் நான் இல்லை.

### வீடு வீடாகச் தேர்தல் பிரச்சாரம்!

பல பேருக்குத் தெரியாது நானும் அப்துல்லாவும் கிட்டத்தட்ட ஒரு 25 வருட கால நட்பு எங்களுடையது. அப்போது எல்லாம் செல்போன் கிடையாது. நானும் அப்துல்லாவும் அன்பில் மகேஷ் பொய்யாமொழி அவர்களும் 1996 ஆம் ஆண்டு தேர்தல் பிரச்சாரம் செய்ய வீடு வீடாக ஆயிரம் விளக்குப் பகுதியில் தெருத்தெருவாக நான் ஒரு வீட்டையும் விடமாட்டேன் எல்லா வீட்டிற்கும் ஏறி விடுவேன்.

அப்துல்லா அவர்களும் மகேஷ் அவர்களும் `இந்த வீட்டுக்குக் கீழே ரெஸ்ட் எடுக்கிறேன். இந்த வீட்டிற்கு நீங்கள் போங்க அடுத்த வீட்டில் நான் இறங்கி வந்து விடுவேன். ஒருத்தர் மாற்றி ஒருவர் பிரச்சாரம் செய்வோம், அப்போது ஆரம்பித்த பிரச்சாரம் நான் இதுவரைக்கும் நன்றி சொன்னது கிடையாது. 2019 நாடாளுமன்றத் தேர்தல் முதன் முறையாக தலைவர் அவர்கள் என்னை அழைத்து, நீ தமிழ்நாடு முழுக்க பிரச்சாரத்திற்குப் போ அப்படி என்று சொன்னார். கூட துணைக்கு ஒருத்தர் வேண்டும் இல்லையா, அப்போது நான் என்னுடன் அழைத்துப்போனது 40 நாள் தமிழ்நாட்டில் 40 தொகுதிகளுக்கும் சென்று பிரச்சாரம் பண்ணி என்னுடன் வந்தது சகோதரர் அப்துல்லா அவர்கள்தான். அதுமட்டுமல்ல அவர்தான் எனக்கு பேசுவதற்கான முக்கிய குறிப்புகளைத் தருவார். இந்த இடத்தில் இந்த ஊரில் இந்தப் பிரச்சினை இருக்கு. இதைப் பேசுங்கள் என்று அந்தக் குறிப்பு எல்லாம் எனக்குக் கொடுப்பார். அதற்கு இதுவரைக்கும் எந்த மேடையிலும் இதுவரை நன்றி சொல்லவில்லை. அதற்கு இந்த மேடையைத் தவிர இன்னொரு சிறப்பான மேடை கிடைக்குமா என்று எனக்குத் தெரியவில்லை. எனவே அவருக்கு இந்த நேரத்திலே என்னுடைய நன்றியை அவருடைய குடும்பத்தினருக்கெல்லாம் என்னுடைய நன்றியையும் வாழ்த்துகளையும் நான் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அயலக அணி இன்னும் பல சாதனைகள் படைக்கட்டும், உலகெங்கும் பரவட்டும் என்று கூறி இங்கே மனோ ராஜா சொன்னது போல வருகின்ற நாடாளுமன்ற தேர்தல் மிக மிக முக்கியமான தேர்தல். நம்முடைய இந்திய நாட்டைக் காப்பாற்ற வேண்டும் என்றால், நம்முடைய இந்தியா கூட்டணியை வெற்றி பெற வைக்க வேண்டும் என்பதைக் கூறிக்கொண்டு அந்தத் தேர்தல் பணிகளை எல்லாம் நீங்கள் விரைவில் ஆர்வத்தோடு எழுச்சியோடு ஈடுபட வேண்டும் என்று கேட்டுக் கொண்டு மீண்டும் இந்த அணிக்கு என்னுடைய வாழ்த்துக்களைத் தெரிவித்து வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகின்றேன்.

இவ்வாறு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

முன்னதாக கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி தலைமை உரையாற்றினார். அணியின் செயலாளர் புதுக்கோட்டை எம்.எம். அப்துல்லா எம்.பி. வரவேற்புரையாற்றினார், அணியின் தலைவர் கலாநிதி வீராசாமி எம்.பி. நன்றியுரையாற்றினார்.

கூட்டத்தில் கழகக் கொள்கை பரப்புச் செயலாளர் நாடாளுமன்ற உறுப்பினர் திருச்சி சிவா, அயலக அணியின் இணைச் செயலாளர்கள் வழக்கறிஞர் புகழ்காந்தி, வழக்கறிஞர் மனுராஜ் சண்முகசுந்தரம், துணைச் செயலாளர்கள் உமா ராணி, விஜயன் ராமகிருஷ்ணன், வழக்கறிஞர் கன்னிகை ஸ்டாலின், வழக்கறிஞர் பரிதி இளம் சுருதி, முத்துவேல் ராமசாமி, சேகர் மனோகரன், குமரி பாபுவில்பிரெட், எஸ்.கே.பி.கருணா, கோவிலெனின், கீரை தமிழ்ராஜா, பரந்தாமன் எம்.எல்.ஏ., காசி முத்துமாணிக்கம், இறையன்பன் குத்தூஸ், வி.பி.மணி, மதன் மோகன், மருத்துவர் யாழினி உள்பட பலரும் கலந்து கொண்டனர்.


சென்னை மேற்கு மாவட்டம்
சேப்பாக்கம் - திருவல்லிக்கேணி சட்டமன்ற தொகுதி
முன்களப் பணியாளர்கள் 1700 குடும்பங்களுக்கு
பொங்கல் பரிசு
நாள் : 11.01.2024 வியாழக்கிழமை
இடம் : ஒய்.எம்.சி.ஏ, இராயப்பேட்டை.
பொங்கல் பரிசு வழங்குபவர்
மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும்
விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர்
திரு. உதயநிதி ஸ்டாலின்
அவர்கள்
தயாநிதி மாறன் எம்.பி.
செயலாளர், கழக விளையாட்டு மேம்பாட்டு அணி
அன்புடன்
நே.சிற்றரசு M.A.,M.Phil,M.C.,
மாவட்ட செயலாளர்
சென்னை மேற்கு மாவட்ட தி.மு.க.
ARASU ARTS


நாள் : 11.01.2024
இடம் : கொளத்தூர்
ARASU ARTS
உழவனை
வணங்குவோம்!
உழைப்பினை
வாழ்த்துவோம்!!
கொளத்தூர் சட்டமன்ற தொகுதி
பொங்கல் விழாவில் நலத்திட்ட உதவிகள் வழங்க வருகை தரும்
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
அவர்களே வருக! வருக!!
அன்புடன் : கொளத்தூர் தொகுதி தி.மு.க.




நாமக்கல் மேற்கு மாவட்டம், மோகனூர் மேற்கு ஒன்றியம், நன்செய்இடையார் ஊராட்சி மன்ற துணைத் தலைவர் அ.தி.மு.க.வைச் சார்ந்த எஸ்.சேகர், பா.ம.க. ஒன்றிய தொழிற்சங்க செயலாளர் எல்.விக்னேஸ்வரன், பா.ம.க. ஒன்றிய மாணவரணி செயலாளர் எல்.கோபிநாத், பா.ஜ.க. ஒன்றிய இளைஞரணி செயலாளர் கே.கேசவன், ஆகியோர் மோகனூர் மேற்கு ஒன்றிய செயலாளர் ஏ.பி.ஆர்.சண்முகம் தலைமையில் நாமக்கல் மேற்கு மாவட்ட கழக செயலாளர் எஸ்.எம்.மதுராசெந்தில் முன்னிலையில் 50க்கும் மேற்பட்ட மாற்று கட்சியினர் தங்களை கழகத்தில் இணைத்துக் கொண்டனர். இந்நிகழ்வில் பொதுக் குழு உறுப்பினர் பி.சிவா, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஆர்.பாலாஜி, துணை அமைப்பாளர் சுந்தர் மற்றும் கழக நிர்வாகிகள் உடன் இருந்தனர்.



கடலூர் மாவட்டம் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை சார்பில் பண்ருட்டியில் ஏழை பெண்களுக்கான திருமண நிதி உதவி மற்றும் தாலிக்கு தங்கம் வழங்கும் விழா மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் அருண் தம்புராஜ் தலைமையில் நடைபெற்றது. பண்ருட்டி நகர மன்ற தலைவர் க.இராஜேந்திரன், பண்ருட்டி ஒன்றிய பெருந்தலைவர் சபா.பாலமுருகன் முன்னிலை வகித்தனர். இதில் தொழிலாளர் நலன் திறன் மேம்பாட்டு துறை அமைச்சர் சி.வெ.கணேசன் பயனாளிகளுக்கு நிதி உதவிகளை வழங்கினார். விழாவில் மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் ராஜாராமன், மாவட்ட வருவாய் அலுவலர் ராஜசேகரன் ,மாவட்ட சமூக நல அலுவலர் கோமதி ,நகர மன்ற துணைத் தலைவர் சிவா உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டனர்.

# பெரம்பலூரில் "சட்டமன்ற நாயகர் கலைஞர்!" கருத்தரங்கம்!

## வெற்றி பெற்றவர்களுக்கு பேரவை துணைத் தலைவர் கு.பிச்சாண்டி பரிசு வழங்கினார்!

பெரம்பலூர், ஜன. 11-

முத்தமிழறிஞர்கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு, "சட்டமன்ற நாயகர் கலைஞர்" என்றதலைப்பில் பள்ளி மற்றும் கல்லூரி மாணவ மாணவிகளுக்கான கருத்தரங்கம் நடைபெற்றது. கல்லூரி மாணவர்களுக்கு சீனிவாசன் கலை மற்றும் அறிவியல் கல்லூரியிலும், பள்ளி மாணவர்களுக்கு தந்தை ஹேன்ஸ் ரோவர் மேல்நிலைப் பள்ளியிலும் நடைபெற்றகருத்தரங்கங்களுக்கு தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைதுணைசபாநாயகர் கு.பிச்சாண்டி தலைமையேற்று வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகளை வழங்கி பாராட்டினார்.

இந்நிகழ்வில் மாவட்ட ஆட்சித்தலைவர்க.கற்பகம் முன்னாள்சட்டமன்றஉறுப்பினர் மற்றும் விழாக்குழு உறுப்பினர் ஞானசேகரன், பெரம்பலூர் சட்டமன்ற உறுப்பினர்எம்.பிரபாகரன் ஆகியோர்முன்னிலைவகித்தனர்.

இந்நிகழ்வில் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை துணை சபாநாயகர் கு.பிச்சாண்டி தெரிவித்ததாவது:

முத்தமிழ் அறிஞர், முதலமைச்சர்கலைஞர்அவர்களுடைய ஆட்சிக்காலத்தில் என்னென்ன திட்டங்கள் எல்லாம் செயல்படுத்தப் பட்டு மக்கள் பயன்பெற்றுள்ளனர் என்பது குறித்து கருத்தரங்கில் பங்கேற்று பேசிய மாணவ - மாணவிகள் தெள்ளத் தெளிவாக எடுத்துரைத்தனர்.கலைஞர் அவர்கள் ஆரம்பப்பள்ளி மட்டுமேபடித்திருந்தாலும் அவருக்கெனதனி பேச்சாற்றல்எழுத்தாற்றல்எனஎல்லா திறமைகளும் இருந்தது. 13 தேர்தல்களில் தொடர்ச்சியாக போட்டியிட்டு தோல்வி அடையாத ஒரே ஒரு தலைவர். அவரைப் போல ஒரு தலைவன் இந்தியாவில் அல்ல உலகிலேயே கிடையாது.

முத்தமிழ் அறிஞர் கலைஞர்அவர்கள்சட்டசபையில் மக்கள் பிரச்சினைகளை பேசுவதற்கு அதிகமான வாய்ப்புகளை தருவார். அதோடு மட்டுமில்லாமல் தன்னை சந்திப்பதற்கு முன் அனுமதி கொடுத்து இருந்தால் குறித்த நேரத்தில் அனைவரையும்சந்திப்பார். மக்களோடு மக்களாக இருந்ததலைவர், நேரம்தவறாது இருந்த தலைவர் முன்னாள் முதலமைச்சர் கலைஞர் அவர்கள்.

முத்தமிழறிஞர்கலைஞர் இயற்றிய திட்டங்கள் அனைத்தும் இந்தியாவையே வழிநடத்தக் கூடிய திட்டங்களாக இருந்தது. அவர் அறிவித்த அனைத்து திட்டங்களும் இந்திய மக்களின் அனைவருக்குமான திட்டங்களாக இருந்தது. எனவே எதிர்காலத்தில் சட்டமன்ற நாயகர் முன்னாள் முதலமைச்சர் கலைஞர் அவர்களைப் போல மாணவர்களாகிய நீங்களும், திறமைகளை வளர்த்துக் கொண்டு ஒவ்வொரு மாணவர்களும் எழுச்சியோடுநாட்டின்வரலாறுகளை மற்றவர்களுக்கு சொல்லக்கூடியஆற்றல்உள்ளவர்களாகவளரவேண்டும் என தெரிவித்தார்.

கல்லூரி மாணவர்களுக்காக போட்டியில் முதல் பரிசு பெற்ற செல்வி பூஜா, என்பவருக்கு ரூ.3 ஆயிரம் , இரண்டாம் பரிசுபெற்ற செல்வி நா.லத்திகாஸ்ரீநிதி என்பவருக்கு ரூ.2 ஆயிரம், மூன்றாம் பரிசு பெற்ற செல்வி கீர்த்தனா, செல்வி ஹர்ஷவர்த்தினி, செல்வன் ஐயப்பன்ஆகியமூன்றுநபர்களுக்கு தலா ரூ.1000ம் மற்றும்பாராட்டுச்சான்றிதழ்களையும் சட்டமன்றப் பேரவை துணைத்தலைவர் கு.பிச்சாண்டி வழங்கினார்.

அதேபோல,பள்ளிமாணவர்களுக்காக போட்டியில் முதல் பரிசு பெற்ற செல்வி செ.சுப்ரமணிகவி என்பவருக்கு ரூ.3ஆயிரம்,இரண்டாம்பரிசுபெற்ற செல்வி சா.ஆதாம் கனி என்பவருக்கு ரூ.2ஆயிரம், மூன்றாம் பரிசு பெற்ற செல்வி அ.அருசுவி, செல்வி க. வர்ஷா, செல்வி அ.அகல்யா ஆகிய மூன்று நபர்களுக்கு தலா ரூ.1000ம் மற்றும் பாராட்டுச் சான்றிதழ்களையும் சட்டமன்றப் பேரவை துணைத்தலைவர் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் சட்டமன்ற கூடுதல் செயலாளர் பா.சுப்ரமணியம்,மாவட்ட வருவாய் அலுவலர் மு.வடிவேல் பிரபு, சட்டமன்ற இணைச்செயலாளர்மு.கருணாநிதி, துணைச்செயலாளர் சுமதி, சார்புச் செயலாளர்க.பாஸ்கரன், மாவட்ட ஊராட்சிக்குழுத்தலைவர் குன்னம்சி.இராஜேந்திரன், மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர்தமிழ்மாறைபாஸ்கர், ஊராட்சி ஒன்றியக்குகுழுத்தலைவர்கள்மீனாஅண்ணாதுரை, (பெரம்பலூர்), க.ராம லிங்கம் (வேப்பந்தட்டை), பெரம்பலூர் நகர் மன்ற துணை த்தலைவர் து. ஹரிபாஸ்கர்உள்ளிட்டபல்வேறுஅரசுத்துறைஅலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# சேத்தியாதோப்பு கூட்டுறவு சர்க்கரை ஆலையில் அரவைப் பணி!

## அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தொடங்கி வைத்தார்!

கடலூர், ஜன.11-

வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், எம்.ஆர்.கிருஷ்ணமூர்த்தி கூட்டுறவு சக்கரை ஆலையில் 202324 கரும்பு அரவை பணியை தொடங்கி வைத்தார்.

நேற்று (10.01.2024) கடலூர் மாவட்டம், புவனகிரி வட்டம், சேத்தியாதோப்பு பகுதியில் உள்ள எம்.ஆர். கிருஷ்ணமூர்த்தி கூட்டுறவு சக்கரை ஆலையில் 2023-24 கரும்பு அரவை பணியை வேளாண்மை உழவர் நலத் துறை அமைச்சர் எம்.ஆர். கே.பன்னீர்செல்வம் அரசு முதன்மை செயலாளர்/சக்கரைத்துறை ஆணையர் சா.விஜயராஜ்குமார் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர். அ.அருண் தம்புராஜ் ஆகியோர் முன்னிலையில் தொடங்கி வைத்தார்.

வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தெரிவித்ததாவது :-

முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி எம்.ஆர்.கிருஷ்ணமூர்த்தி சக்கரை ஆலையில் பல்வேறு உட்கட்டமைப்பு வசதிகளுடன் மேம்படுத்தப் பட்டுள்ளது. அதன்படி நவீனமயமாக்கப்பட்ட ஆய்வுக்கூடம், ஹைட்ராலிக் டிப்லர் எந்திரம், தானியங்கி எடை மேடை, கரும்பு தளத்தில் தார்சாலை அமைத்தல், எத்தனால் உற்பத்தி ஆலைத்திட்டம் உள்ளிட்ட உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் கரும்பு விவசாயிகளுக்கு சிறப்பு ஊக்கத் தொகைகளும் வழங்கப்பட்டுள்ளது.

கரும்பு அரவை 98.67 இலட்சம் மெட்ரிக் டன்களிலிருந்து 160.54 இலட்சம் மெட்ரிக் டன்னாக அதிகரித்தது. பதினோரு ஆண்டுகளுக்கு பிறகு 202223 அரவைப் பருவத்தில் 9.27 சதவீதம் என்ற அதிகபட்ச சர்க்கரை கட்டுமானம் பெறப்பட்டது. கரும்பு விலை டன் ஒன்றுக்கு ரூ.2,750ல் இருந்து ரூ.3,016 ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது. கடந்த மூன்று ஆண்டுகளில் கரும்பு விவசாயிகளுக்கு உற்பத்தி ஊக்கத் தொகை மற்றும் சிறப்பு ஊக்கத்தொகையாக 651.03 கோடி வழங்கப்பட்டுள்ளது. கரும்பு உற்பத்தியை அதிகரிப்பதற்காக 14.80 கோடி மதிப்பீட்டில் புதிய திட்டங்கள், கலைஞரின் அனைத்துக் கிராம வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தில் 2.03 கோடியில் திட்டங்கள் செயல்படுத்தப் பட்டது. சுமார் 13,000 ஹெக்டர் பரப்பளவில் சுமார் 196 கோடி மதிப்பீட்டில் நுண்ணீர் பாசனத்திட்டம் செயல்படுத்தப்பட்டது. சர்க்கரை ஆலைகளுக்கு வழிவகை கடனாக 600.37 கோடி வழங்கப்பட்டது. கள்ளக்குறிச்சி1 மற்றும் எம்.ஆர்.கே கூட்டுறவு சர்க்கரை ஆலைகளில் எத்தனால் உற்பத்தி ஆலை, தருமபுரி கூட்டுறவு சர்க்கரை ஆலையில் இணைமின் திட்டம் உற்பத்தி துவங்கப்பட் டது.

கூட்டுறவு மற்றும் பொதுத்துறை சர்க்கரை ஆலைகளில் பணிபுரியும் பணியாளர்கள் மற்றும் தொழிலாளர்களுக்கு 01.10.2018 முதல் வழங்கப் பட வேண்டிய ஊதிய உயர்வு நிலுவையில் இருந்துவந்த நிலையில், 35 விழுக்காடு ஊதியஉயர்வு வழங்கி ஆணையிடப்பட்டுள்ளது.

இந்நிகழ்ச்சியில் காட்டுமன்னார்கோயில் சட்டமன்ற உறுப்பினர் ம.சிந்தனைச்செல்வன், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் இரா.இராஜாராம், மாவட்ட வருவாய் அலுவலர்/செயலாட்சியர் ரெ. சதீஸ், சிதம்பரம் சார் ஆட்சியர் செல்வி ரஷ்மி ராணி, தலைமை கரும்பு அலுவலர் பா.ரவிக்கிருஷ்ணன் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் உள்ளனர்.

### கடலூர் மாவட்டம்- பண்ருட்டியில் சமூக நலத்துறை சார்பில்

# 1083 பயனாளிகளுக்கு தாலிக்கு தங்கம் திருமண உதவித்தொகை ரூ.9,50,29,938!

## அமைச்சர் சி.வெ.கணேசன் வழங்கினார்!

கடலூர், ஜன.11

கடலூர் மாவட்டம் பண்ருட்டியில் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை சார்பில் ஏழைப் பெண்களின் திருமணத்திற்கு நிதி உதவி மற்றும் தாலிக்கு தங்கம் வழங்கும் விழா பண்ருட்டியில் நடைபெற்றது.

மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் அருண் தம்புராஜ் தலைமை தாங்கினார். பண்ருட்டி நகர மன்ற தலைவர் க.இ ராஜேந்திரன், பண்ருட்டி ஒன்றிய பெருந்தலைவர் சபா.பாலமுருகன் முன்னிலை வகித்தனர்.

தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு துறை அமைச்சர் சி. வெ.கணேசன் பயனாளிகளுக்கு நிதி உதவிகளை வழங்கி பேசியதாவது :

சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத்துறையின் கீழ் ஏழை பெண்களின் திருமணத்திற்கு கீழ்கண்ட திட்டங்கள் செயல்படுத்தப் பட்டு வருகின்றன.

விதவைத் தாய்மார்களின் பெண் குழந்தைகளுக்கு வாழ்வில் ஒளியேற்றும் வண்ணம் ஈ.வெ.ரா.மணியம்மையார் நினைவு விதவை மகள் திருமண நிதியுதவி மற்றும் தாலிக்கு தங்கம் வழங்கும் திட்டம்.

ஆதரவற்ற பெண்களின் வாழ்வில் ஒளியேற்ற அன்னை தெரசா நினைவு ஆதரவற்ற பெண் திருமண நிதியுதவி மற்றும் தாலிக்கு தங்கம் வழங்கும் திட்டம்.

சாதி, மத, பேதத்தை ஒழித்து சமதர்ம சமுதாயத்தை உருவாக்கும் விதமாக கலப்புத் திருமணத்தை ஆதரிக்கும் வகையில் டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி கலப்புத் திருமண நிதியுதவி மற்றும் தாலிக்கு தங்கம் வழங்கும் திட்டம்.

விதவை மறுமணத்தை ஆதரிக்கும் டாக்டர். தர்மாம்பாள் விதவை மறுமண நிதியுதவி மற்றும் தாலிக்கு தங்கம் வழங்கும் திட்டம்.

சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத் துறையின் கீழ் செயல்படும் இத்திட்டங்களுக்கு 2023 - 2024 ஆம் நிதியாண்டில் பட்டதாரி அல்லாத 432 பயணிகளுக்கு தலா ரூ 25,000/ வீதம் ரூ.1,08,00,000 மும் 651 பட்டதாரி பயனாளர்களுக்கு தலா ரூ.50,000/ வீதம் 3,25,50,000/ மொத்தம் 1083 பயனாளிகளுக்கு ரூ.4,33,50,000/மும் 8கி வீதம் 1083 பயனாளிகளுக்கு தங்க நாணயங்களின் மதிப்பு ரூ.5,16,79,938/மும் ஆக மொத்த மதிப்பு ரூ.9,50,29,938/ (ரூபாய் ஒன்பது கோடியே ஐம்பது இலட்சத்து இருபத்து ஒன்பதாயிரத்து தொள்ளாயிரத்து முப்பத்து எட்டு மட்டும்) ஒதுக்கீடு செய்யப்பட்டு வழங்கப்பட்டுள்ளது.

தற்பொழுது அண்ணாகிராமம், பண்ருட்டி, விருத்தாச்சலம், கம்மாபுரம், நல்லூர் மற்றும் மங்களூர் ஒன்றியங்கள், பேரூராட்சிகள் மற்றும் நகராட்சி பகுதிகளில் உள்ள பட்டதாரி அல்லாத 215 பயனாளிகளுக்கு தலா ரூ.25,000/ வீதம் ரூ. 53,75,000/ மும் மற்றும் 300 பட்டதாரி பயனாளிகளுக்கு தலா ரூ.50,000/ வீதம் ரூ.1,50,00,000/மும் ஆக மொத்தம் ரூ.2,03,75,000/மும் 515 தங்க நாணயங்கள் மதிப்பு ரூ.2,45,75,500/மும் ஆக மொத்த மதிப்பு ரூ.4,49,50,500/ (ரூபாய் நான்கு கோடியே நாற்பத்து ஒன்பது இலட்சத்து ஐம்பதாயிரத்து ஐநூறு மட்டும்) ஏழைப் பெண்களுக்கான திருமண நிதியுதவியுடன் (வங்கியில் வரவு வைக்கப்படும்) தங்க நாணயங்கள் இன்று (10.01.2024) தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை அமைச்சர் பயனாளிகளுக்கு வழங்கி பேசினார்.

இவ்விழாவில் மாவட்ட காவல் துறை கண்காணிப்பாளர் ராஜாராமன், மாவட்ட வருவாய் அலுவலர் ராஜசேகரன், மாவட்ட சமூக நல அலுவலர் கோமதி, நகர மன்ற துணைத் தலைவர் சிவா உள்ளிட்ட அரசு அலுவலர்கள் கழக நிர்வாகிகள் இவ்விழாவில் கலந்து கொண்டனர்.

### மாவட்டச் செயலாளர் கே.கே.செல்லப்பாண்டியன் தலைமையில் !

# புதுக்கோட்டை வடக்கு - கீரனூரில் மாபெரும் பொதுக்கூட்டம்!

## திண்டுக்கல் ஐ.லியோனி - கவிச்சுடர் கவிதைப்பித்தன் சிறப்புரை!

புதுக்கோட்டை, ஜன. 11-

புதுக்கோட்டை வடக்கு மாவட்டம் குன்றாண்டார் கோவில் கிழக்கு, மேற்கு, மத்திய ஒன்றியங்கள் , கீரனூர் பேரூர் கழகம் சார்பில் கழக இளைஞர் அணி செயலாளர் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள் பொதுக்கூட்டம் 8.1.2024 திங்கட்கிழமை மாலை 6 மணி அளவில் பழைய சந்தைப்பேட்டை கீரனூரில் புதுக்கோட்டை வடக்கு மாவட்டச் செயலாளர் கே.கே.செல்லபாண்டியன் தலைமையிலும், என். சேட்டு, ஓ.எஸ். வெங்கடாசலம், சி. சண்முகம், கீரனூர் பேரூர் கழகச் செயலாளர் பி.அண்ணாதுரை ஆகியோர் வரவேற்புரையிலும் நடைபெற்றது.

கழக கொள்கை பரப்பு செயலாளர் தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழக தலைவர் திண்டுக்கல் ஐ.லியோனி கலந்து கொண்டு கழக இளைஞர் அணி செயலாளர் அவர்களை வாழ்த்தியும் திராவிட மாடல் அரசின் சாதனைகளை மக்கள் எளிதில் உள்வாங்கி கொள்ளும் வகையில் விளக்கியும் சிறப்புரை யாற்றினார்கள்.

இந்நிகழ்வில் மாநில இலக்கிய அணி துணைத் தலைவர் கவிச்சுடர் கவிதைப்பித்தன், மாநில விவசாய தொழிலாளர் அணி துணைச் செயலாளர்ஒன்றிய பெருந்தலைவர் கே. ஆர்.என்.போஸ், மாநில வர்த்தக அணி துணைச் செயலாளர் செ. அசோக் பாண்டியன், மாவட்ட பொருளாளர் எம்.லியாக்கத் அலி, பொதுக்குழு உறுப்பினர் தென்னலூர் எம்.பழனியப்பன், மாவட்ட ஊராட்சிக்குழு உறுப்பினர் த.செல்வம், பேரூராட்சி தலைவர் கே.எம்.கே.ரவிக்குமார், துணைத் தலைவர் எம்.ஏ.எம்.இம்தியாஸ், மாவட்ட அணிகளின் நிர்வாகிகள் இராம.செல்வராஜ், கீரை.அஸ்ரப் அலி, ஆ.ராஜேந்திரசோழன், எஸ்.வி.ஆர்.ஸ்டாலின், மு.கலைஞர் கருணாநிதி, மு.இளஞ்சேரன், கவிஞர் மரிய எட்வின், வழக்கறிஞர் மணிகண்டன், வழக்கறிஞர் ராஜேஷ், சொ.தமிழினியன், எழில் ராஜா, ஒன்றிய கழக நிர்வாகிகள் டி.முத்து, கே.ஆர்.பாலமுத்து, க. வீரையா, ராஜராஜசோழன், ராஜ்குமார், சினன்ப்பா, முத்து ராங்கியர், பி.சி.என்.கண்ணன், அழகு.ராஜேந்திரன், வி. எஸ்.பழனி, கருணாநிதி, முத்துக்குமார், திவ்யநாதன், க.செ.கலியமூர்த்தி, இளைஞர் அணி நிர்வாகிகள் ந.அம்பலவாணன், ச. ரமேஷ், அஸ்வின், டி.கே.டி. வல்லரசு, மற்றும் மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர், வட்ட கிளைக் கழக நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

நிறைவாக மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் முனைவர் செ.குறிஞ்சிவாணன் நன்றி கூறினார்.

# பள்ளிக்கல்வித்துறையின் "எங்கள் பள்ளி மிளிரும் பள்ளி"!

## திருவாரூரில் பூண்டி.கே.கலைவாணன் எம்.எல்.ஏ. பங்கேற்பு!

திருவாரூர்,ஜன11.

திருவாரூர் மாவட்டம், அம்மையப்பன் அரசு மேல்நிலைப்பள்ளியில் பள்ளிக் கல்வித்துறையின் சார்பில் எங்கள் பள்ளி, மிளிரும் பள்ளிநிகழ்ச்சியினைசட்டமன்ற உறுப்பினர் பூண்டி. கே.கலைவாணன் தொடங்கி வைத்தார். மாவட்ட ஆட்சித்தலைவர் சாருஸ்ரீமற்றும்கல்விஅதிகாரிகள் உடனிருந்தனர்.

இந்நிகழ்ச்சியானது, 08.01.2024முதல்10.01.2024 வரைசிறப்புபள்ளிதூய்மை பணிசெயல்பாடுகள்,பள்ளிகள்தோறும், தூய்மையை தொடருவோம் வாருங்கள் என்றதலைப்பில்மாவட்டத்திலுள்ள945ஆரம்பப்பள்ளி, நடுநிலைப்பள்ளிகளில் நடைபெறுகிறது. கொரடாச்சேரிஅரசுமேல்நிலைப் பள்ளியில் நடைபெற்ற இந்நிகழ்வில் மாவட்ட ஊராட்சிதுணைத்தலைவர் கலியபெருமாள், ஒன்றியக் குழு துணைத்தலைவர் ஆர். பாலசந்தர்,

முதன்மை கல்வி அலுவலர் புகழேந்தி, மாவட்ட கல்வி அலுவலர் மாதவன், வட்டாட்சியர்நக்கீரன்,ஒன்றியக்குழு உறுப்பினர் சண்முகம்,ஊராட்சிமன்றதலைவர் முருகதாஸ், பள்ளி தலைமையாசிரியர் அருளாளன், உள்ளிட்ட அரசு அலுவலர்கள், உள்ளாட்சி அமைப்பின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.



சென்னை மாவட்டத்திற்குட்பட்ட காவல் நிலையங்களில் கண்காணிப்பு கேமராக்கள் பொருத்துவது தொடர்பான மாவட்ட அளவிலான மேற்பார்வைக் குழுக் கூட்டம் மேயர் திருமதி ஆர்.பிரியா முன்னிலையில், சென்னை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ரஷ்மி சித்தார்த் ஜகடே, தலைமையில் (09.01.2024) அன்று ரிப்பன் கட்டட அலுவலகத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் காவல்துறை இணை ஆணையாளர் (தலைமையிடம்) திருமதி கயல்விழி, சென்னை மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி அனுசியா தேவி உட்பட அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



திருவள்ளூர் மாவட்டம் பூவிருந்தவல்லி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட காக்களூர் ஊராட்சி பூங்கா நகர் மற்றும் ம.பொ.சி.நகரில் பொங்கல் பரிசுத் தொகுப்பு வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் பூவிருந்தவல்லி சட்ட மன்ற உறுப்பினர் ஆ.கிருஷ்ணசாமி சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு பொங்கல் பரிசாக 1 கிலோ பச்சரிசி, 1 கிலோ சர்க்கரையுடன் ரூ 1000 ரொக்கப்பணம் மற்றும் 1 முழு கரும்பு,, 1,வேட்டி, 1 சேலை ஆகியவற்றை வழங்கினார். உடன் ஒன்றிய செயலாளர் ஆர்.ஜெயசீலன், தலைமை பொதுகுழு உறுப்பினர் த.எத்திராஜ், நிர்வாகிகள் வி.சௌந்தர்ராஜன், வி.தியாகராஜன், டி.கே.பூவண்ணன், த.சுகுமார், சிவப்பிரகாசம், கே.சரவணன், செந்தில், முருகன், சதீஷ், பிரபு, சங்கர், கார்த்திக், கதிர், பரத் உள்பட பலர் கலந்து கொண்டனர்.



காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம், உத்திரமேரூர் தொகுதி திருமுக்கூடல் ஊராட்சியில் ரூ.18.87 லட்சம் மதிப்பில் கட்டப்பட்ட ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியை மாவட்டக் கழகச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. திறந்து வைத்தார். உடன் ஒன்றிய கழக செயலாளர் டி. குமார், ஊராட்சி மன்ற தலைவர் மஞ்சுளா முருகன், துணைத்தலைவர் சீனிவாசன், மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர் கோ சிவராமன், ஒன்றிய குழு உறுப்பினர் அன்புராஜ், ஒன்றிய அவைத்தலைவர் என் எஸ் ரவி, ஒன்றிய துணை செயலாளர் ஞானசேகரன், பொருளாளர் பாலமுருகன், மாவட்ட பிரதிநிதி வெங்கடாசுப்பிரமணி, சுப்பிரமணி, சரவணன், செயல் அறிஞன், சண்முகம், ஆறுமுகம், முருகன், செல்வம், விஷ்ணு ஜெயபுரி, ராதாகிருஷ்ணன், உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்,

### ஈரோடு தெற்கு மாவட்ட கலை, இலக்கிய, பகுத்தறிவுப் பேரவை சார்பில்

# தைப் பொங்கல் திருநாள் விழா!

ஈரோடு, ஜன. 11-

ஈரோடு தெற்கு மாவட்ட கலைஇலக்கியபகுத்தறிவுப் பேரவை மாவட்ட அமைப்பாளர் சித்தோடு சி.எஸ்.பிரகாஷ் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

வருகிற 15.01.2014, திங்கட்கிழமை அன்று, ஈரோடு மணல்மேட்டில் அமைந்துள்ள ஈரோடு தெற்கு மாவட்டத் தி.மு.கழக அலுவலகமான கலைஞர் அறிவாலயம்தனில் அன்று காலை 9.00 மணி அளவில், தமிழ் புத்தாண்டு மற்றும் தைப் பொங்கல் திருநாளை முன்னிட்டு, கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைப்படியும், ஈரோடு தெற்கு மாவட்டத் தி.மு.கழக செயலாளரும், தமிழ்நாடு வீட்டு வசதி, நகர்ப்புற வளர்ச்சி மற்றும் மதுவிலக்கு ஆயத்தீர்வைத் துறைகளின் அமைச்சருமான சு.முத்துசாமி வழிகாட்டுதல் மற்றும் அவர்தம் தலைமையிலும், ஈரோடு தெற்கு மாவட்ட தி.மு.கழக கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை அணியின் சார்பில், தமிழர்களின் பாரம்பரிய இசையான தாரை, தப்பட்டை முழக்கத்துடனும், சேலம் ஜான் பாஷா குழுவினரின் கழகக் கொள்கை விளக்கப் பாடல்கள் அடங்கிய இசைக்கச்சேரியுடனும், பொங்கல் வைப்பதுடனும், தமிழர் திருநாளாம் தமிழ்ப் புத்தாண்டு மற்றும் தைப் தைப் பொங்கல் திருவிழா நடைபெற உள்ளது.

அதுசமயம் மாநில, மாவட்ட, மாநகர, ஒன்றிய, பகுதி, பேரூர், ஊராட்சி, வார்டு கழக நிர்வாகிகள், சார்பு அணிகளின் நிர்வாகிகள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு விழாவை சிறப்பித்து தருமாறு ஈரோடு தெற்கு மாவட்டத் தி.மு. கழக கலை இலக்கியப் பகுத்தறிவுப் பேரவை அணியின் சார்பில் கேட்டுக் கொள்கிறோம்.

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



திருவள்ளூர் மாவட்டம் ஆவடி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட திருநின்றவூர் பகுதியில் உள்ள நியாய விலை கடையில் குடும்ப அட்டைதாரர்களுக்கு பொங்கல் பரிசுத்தொகுப்பு ரூபாய் 1000 ஒரு கிலோ பச்சரிசி, ஒரு கிலோ சர்க்கரை, ஒரு முழு கரும்பு 1 வேட்டி, 1 சேலை அடங்கிய பொங்கல் பரிசு தொகுப்பு வழங்கும் பணிகளை முன்னாள் அமைச்சரும் திருவள்ளூர் மத்திய மாவட்டச் செயலாளரும் ஆவடி சா.மு.நாசர் எம்.எல்.ஏ துவக்கி வைத்தார். அருகில் தலைமை செயற்குழு உறுப்பினர் நடுகுத்தகை கே.ஜெ.ரமேஷ், ஆவடி மாநகராட்சி மேயர் ஜி.உதயகுமார், நகர் மன்ற தலைவர் உஷாராணி ரவி, மாநகர பொறுப்பாளர் சன்.பிரகாஷ், நகர மன்ற துணை தலைவர் சரளா நாகராஜ், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் கே.சுரேஷ்குமார், நகர நிர்வாகிகள் ஜெ.அன்பழகன், எஸ்.கமலக்கண்ணன், ரவி, பி.எல்.ஆர்.யோகா, ஜெயக்குமார், தி.வை.சுரேஷ்குமார், சசிகலா ஜீவானந்தன், சலீம், ரவிச்சந்திரன், பால்ராஜ், செந்தில்வேல், எஸ்.டி.எஸ்.பாஸ்கரன், சுதர்சனம், பிரசன்னா, மகேஷ்குமார் உள்பட பலர் உள்ளனர்.

### 2024 - 25 ஆம் ஆண்டிற்கானது :

# யுனைடெட் இந்தியா காப்பீட்டு நிறுவனத்திற்கு ரூ. 1228.27 கோடி!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் வழங்கினார்

சென்னை, ஜன. 11 -

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று (10.01.2024) சென்னை, தேனாம்பேட்டை, தமிழ்நாடு சுகாதார திட்ட அலுவலகத்தில் முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டம், 2024-25ஆம் ஆண்டிற்கான காப்பீட்டுத் தொகை ரூ.1228.27 கோடிக்கான காசோலையை யுனைடெட் இந்தியா காப்பீட்டு நிறுவனத்திற்கு வழங்கினார். பின்னர் செய்தியாளர்களிடம் அவர் தெரிவித்ததாவது:

முதலமைச்சரின் விரிவான மருத்துவக்காப்பீடு திட்டத்திற்கான 11.01.2024 தொடங்கி 10.01.2025 வரைக்கான பிரிமியத் தொகை ரூ.1228.27 கோடிக்கான காசோலை நேற்று யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் நிறுவனத்திற்கு வழங்கும் நிகழ்வு மிகச் சிறப்பாக நடைபெற்று இருக்கிறது. தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டு திட்டம் என்பது இன்றைக்கு பெரிய அளவில் பயன்பாட்டில் இருந்து வருகிறது.

தமிழ்நாட்டில் முதலமைச்சராக முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் இருந்த காலக்கட்டத்தில் 2009ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 23ஆம் நாள் தொடங்கப்பட்டது இத்திட்டம். ஏறத்தாழ 14 ஆண்டுகளுக்கு முன்னால் தமிழ்நாட்டில் இத்திட்டம் தொடங்கப்பட்டதன் மூலம் இந்தியாவிற்கே முன்மாதிரியாக இத்திட்டம் செயலாக்கத்திற்கு வந்தது. இத்திட்டத்தில் இதுவரை தமிழ்நாட்டில் பயன்பாட்டில் இருக்கின்ற குடும்பங்களின் எண்ணிக்கை 1.45 கோடி ஆகும். இவர்களுக்கு ஆண்டொன்றிற்கு ரூ.5 இலட்சம் வரை மருத்துவ பயன்பாட்டிற்கு வழங்கப்பட்டு வருகிறது.

கடந்த ஆட்சிக்காலத்தில் ரூ.2 இலட்சமாக இருந்தது, தற்போது ரூ.5 இலட்சமாக உயர்த்தப் பட்டிருக்கிறது. அதுமட்டுமல்லாமல் கடந்த ஆட்சியில் ஆண்டு வருமானம் ரூ.72,000/ வரை இருப்பவர்களுக்கு காப்பீடு அட்டை என்கின்ற வகையில் இருந்ததால் தற்போது அனைத்து பயனாளர்களும் பயன்பெற வேண்டும் என்கின்ற நோக்கில் தற்போது ஆண்டு வருமானம் ரூ.1,20,000/ உயர்த்தப்பட்டு இருக்கிறது. அந்தவகையில் தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்களால் 11.01.2022 முதல் ஐந்து ஆண்டுகளுக்கு இத்திட்டம் நீட்டிக்கப்பட்டது. அந்தவகையில் இத்திட்டம் 1829 மருத்துவமனைகளில் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது.

அரசு மருத்துவமனைகள் 854, தனியார் மருத்துவமனைகள் 975. தமிழ்நாட்டில் மட்டுமே மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தில் அதிகமாக நோய் சிகிச்சைகளுக்கான மருத்துவ முறைகள் இருந்துக்கொண்டிருக்கிறது. 1513 மருத்துவம் மற்றும் அறுவை சிகிச்சை முறைகள் இக்காப்பீட்டுத் திட்ட பயன்பாட்டில் இருக்கின்றன. 8 சிறப்பு உயர்சிகிச்சை முறைகள், 52 முழுமையான பரிசோதனை முறைகள், 11 தொடர் சிகிச்சை முறைகள் என்று அனைத்து சிகிச்சைகளும் இருந்து கொண்டிருக்கிறது. அந்தவகையில் 8 சிறப்பு உயர்சிகிச்சை என்பது கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சை, சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை, எலும்பு மஜ்ஜை மாற்று அறுவை சிகிச்சை, காதுவால் நரம்பு உள்வைப்பு அறுவை சிகிச்சை, ஸ்டெம்செல் மாற்று அறுவை சிகிச்சை, நுரையீரல் மற்றும் இருதய மாற்று அறுவை சிகிச்சை, நுரையீரல் வால்வு மாற்று அறுவை சிகிச்சை, செவிபுல மூளை தண்டு அறுவை சிகிச்சை என 8 உயர்சிகிச்சை என உடலுறுப்பு மாற்று அறுவை சிகிச்சைகள் தமிழ்நாட்டில் இருந்துக் கொண்டிருக்கிறது. இக்காப்பீட்டுத் திட்டத்தின் மூலம் ரூ.22 இலட்சம் வரை பொதுமக்கள் பயன்பெற்று வருகின்றனர்.

சமீபத்தில் கூட ஒன்றிய அரசால் இத்திட்டம் 50% அரசு மருத்துவமனைகளில் செயல்படுவதை பாராட்டி அதிகமாக செயல்பாட்டில் உள்ள மாநிலம் (Best State) தமிழ்நாட்டிற்கு விருது வழங்கப்பட்டிருக்கிறது. அவ்விருது ஏற்கெனவே தமிழ்நாடு முதலமைச்சரிடம் காண்பித்து வாழ்த்து பெறப்பட்டுள்ளது.

காப்பீட்டு தொகை ஆண்டொன்றிற்கு ரூ.5 இலட்சமாக உயர்த்துதல்

மேலும் கடந்த ஆட்சிக் காலத்தில் பிரிமியத் தொகை ரூ.699 ஆக இருந்தது, தற்போது ரூ.849 ஆக உயர்த்தப்பட்டிருக்கிறது. கடந்த ஆட்சிக்காலத்தில் குடும்ப ஆண்டு வருமானம் ரூ.72,000 ஆக இருந்தது, தற்போது ரூ.1,20,000 ஆக உயர்த்தப்பட்டிருக்கிறது. கடந்த ஆட்சிக்காலத்தில் காப்புறுதித் தொகை ரூ.2 இலட்சம் ஆக இருந்தது, தற்போது ரூ. 5 இலட்சமாக உயர்த்தப்பட்டிருக்கிறது.

கடந்த ஆட்சிக்காலத்தில் சிகிச்சை முறைகள் 1450 ஆக இருந்தது, தற்போது 1513 ஆக உயர்ந்து இருக்கிறது. கடந்த ஆட்சிக்காலத்தில் தமிழ்நாட்டில் அங்கீகரிக்கப்பட்ட மருத்துவமனைகளின் எண்ணிக்கை 970 ஆக இருந்தது, தற்போது இது 1829 என இருமடங்காக உயர்த்தப்பட்டிருக்கிறது. உயர்சிறப்பு உறுப்பு மாற்று அறுவை சிகிச்சைகள் கடந்த ஆட்சிக் காலத்தில் 2 என்கின்ற எண்ணிக்கையில் இருந்தது, தற்போது 8 என்கின்ற எண்ணிக்கையில் உயர்த்தப்பட்டிருக்கிறது. 2021 மே திங்கள் 7 ஆம் தேதிக்குப்பிறகு இந்த ஆட்சி பொறுப்பேற்றவுடன் இக்காப்பீட்டுத் திட்டத்தில் மேலும் பல குடும்பங்கள் இணைத்திட வேண்டும் என்கின்ற நோக்கில் காப்பீடு சிறப்பு முகாம்கள் தொடர்ச்சியாக நடத்தப்பட்டு வருகிறது.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு ஒரு மாதத்திற்கு முன்னால் தமிழ்நாட்டில் 100 சட்டமன்றத் தொகுதிகளில் 100 முகாம்கள் நடத்தப்பட்டது. இதில் இதுவரை 8,84,551 புதிய குடும்பங்கள் இக்காப்பீட்டு திட்டத்தில் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். இன்னமும் கூட 100 தொகுதிகளில் 100 முகாம்கள் நடத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. தேதி இறுதி செய்து விரைவில் அறிவிக்கப்படும்.

இவ்வாறு அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்தார்.




சென்னை வடகிழக்கு மாவட்டம், மாதவரம் வடக்கு பகுதி, 19ஆவது வட்டம், மாத்தூர் முன்னாள் கிளைக் கழக செயலாளரும், கழகத்தின் மூத்த முன்னோடியும், 19ஆவது வட்டச் செயலாளர் மாத்தூர் கா. தாமரைச்செல்வன், கா. புகழேந்தி, வழக்கறிஞர் கா. தமிழ் வேந்தன், கா. குமார், கா. விஜயகுமார்,கா. சேரலாதன் ஆகியோரின் தந்தை யாருமான,மாத்தூர் காசிநாதன் என்கிற தமிழரசன் அவர்களின் 11 ஆம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு, அன்னாரது திருவுருவ படத்திற்கு 19ஆவது வட்டச் செயலாளர் மாத்தூர் கா. தாமரைச்செல்வன் தலைமையில் , மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் கலந்து கொண்டு மலர் தூவி அஞ்சலி செலுத்தினார். இந்த நிகழ்ச்சியில் க. காசிநாதன், மஞ்சம்பாக்கம் ஆர். பாபு, வக்கீல் வி. கார்த்திகேயன், எஸ் .உதயகுமார், கோ.சரவணன், துளசி, திருமலை கார்த்திக், பகுதி பிரதிநிதி கோவர்தனன், ஹரி சுப்பிரமணி, கதிரவன், ஆர். ராஜகோபால், சின்ன மாத்தூர் ரா. குகன், கங்காதரன், ஜானகிராமன், முகமது முஸ்தபா, எஸ். எஸ். கே. செல்வகுமார், சதீஷ்குமார், ஞானமூர்த்தி, முருகன், கஸ்தூரி, பெரியநாயகி, சரஸ்வதி,சுந்தரி, கலைச்செல்வி, ரவி, உள்ளிட்டோர் கலந்து கொண்டார்கள்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### சிறுவேடல் வெ.கணேசன்

### சனவரி 11 (2022)



இளமைப் பருவத்திலேயே கழகக் கொள்கையால் ஈர்க்கப்பட்டு, கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டு பணியாற்றியவர்.

ஒன்றுபட்ட செங்கல்பட்டு மாவட்டத்தில் உள்ள சிறுவேடல் கிளைக் கழகச் செயலாளர் – வாலாஜாபாத் ஒன்றிய இணைச் செயலாளர் – ஒன்றிய துணைச் செயலாளர் – மாவட்ட பிரதிநிதி என கழகத்தில் பல்வேறு பொறுப்புகளை வகித்தவர்.

வாலாஜாபாத் ஒன்றியக்குழு உறுப்பினராக போட்டியிட்டு வெற்றி பெற்று, அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.

வாலாஜாபாத் நிலவள வங்கி துணைத் தலைவராகவும் பணியாற்றியவர்.

கழகம் அறிவித்த பல்வேறு அறப்போராட்டங்களில் பங்கேற்று பலமுறை சிறை சென்றதோடு, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் ‘சிறை சென்ற செம்மல்’ என்று அழைக்கப்பட்டவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

# தமிழ்நாடு - புதுச்சேரியில் கனமழைக்கு வாய்ப்பு!

சென்னை, ஜன.11-

சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது: இலங்கைக்கு தெற்கே, ஒரு வளிமண்டல கீழடுக்கு சுழற்சி நிலவுகிறது. இதன்காரணமாக நேற்று (10.01.2024) தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் இடி மின்னலுடன் லேசானது முதல் மிதமான மழை பெய்தது. கன்னியாகுமரி மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களின் மலைப்பகுதிகளின் ஓரிரு இடங்களில் கனமழை பெய்தது.

இன்று (11.01.2024 முதல் 12.01.2024 வரை) தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

(13.01.2024 முதல் 16.01.2024 வரை) தமிழகம், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் வறண்ட வானிலை நிலவக்கூடும்.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் அடுத்த 48 மணி நேரத்திற்கு வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் ஒருசில பகுதிகளில் லேசான மழை பெய்யக்கூடும். அதிகபட்ச வெப்பநிலை 30-31 டிகிரி செல்சியஸ் மற்றும் குறைந்தபட்ச வெப்பநிலை 23-24 டிகிரி செல்சியஸாகவும் இருக்கக்கூடும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

### காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட

# தகவல் தொழில் நுட்ப அணி பயிற்சி வகுப்புக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. அறிவிப்பு!



காஞ்சிபுரம் தெற்கு மாவட்டத்தில் தலைமை கழகம் அறிவித்துள்ள தி.மு.க. தகவல் தொழிற்நுட்ப அணியின் முன்னெடுப்பில் வருகின்ற 13.01.2024 அன்று சனிக்கிழமை காலை 9.00 மணியளவில் வாலாசாபாத் உமாசேகர் திருமண மண்டபத்தில் மாவட்ட அளவிலான சமுக ஊடகங்களுக்கான பயிற்சி வகுப்பு நடைபெறுகிறது. எனவே, கீழே குறிப்பிட்டுள்ள அணிகள் விவரம் வருமாறு.

கழக இளைஞர் அணி, மாணவர் அணி, மகளிர் அணி, தொண்டர் அணி, தொழிலாளர் அணி, வழக்கறிஞர் அணி, பொறியாளர் அணி, மருத்துவ அணி, விளையாட்டு மேம்பாட்டு அணி, சிறுபான்மை உரிமை பிரிவு விவசாய அணி, விவசாய தொழிலாளர் அணி, சுற்றுசூழல் அணி, அயலக அணி உள்ளீட்ட கழக சார்பு அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் மற்றும் கழக நாடாளுமன்ற - சட்டமன்ற உறுப்பினர்கள் கலந்துக்கொள்ளவேண்டும் என கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

**க.சுந்தர், எம்.எல்.ஏ.**
செயலாளர், காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட தி.மு.க.

### சேலத்தில் இளைஞர் அணி மாநாடு:

# கோவை மாநகர் மாவட்ட இளைஞர் அணியினர் பல்லாயிரவர் பங்கேற்பு!

## மாவட்டக் கழகக் கூட்டத்தில் தீர்மானம்!

கோவை, ஜன.11-

கோவை, வடகோவை, கிராஸ்கட்சாலை, கோவை மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில் நடைபெற்ற, கோவை மாநகர் மாவட்ட திமுக நிர்வாகிகளின் ஆலோசனைக் கூட்டத்தில், கோவை மாநகர் மாவட்ட தி.மு.க. செயலாளர்

நா.கார்த்திக் தலைமை தாங்கி, சிறப்புரையாற்றினார்.

பின்னர், கோவை மாநகர் மாவட்ட தி.மு.க. செயற்குழு கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

அது வருமாறு:

தமிழ்நாட்டில் இரண்டரை ஆண்டு காலமாக மக்கள் நலத்திட்டங்களை செயல்படுத்தி நல்லாட்சி நடத்துகின்ற திராவிட மாடல் அரசின் தமிழ்நாடு முதலமைச்சர், கழக தலைவர், அன்பு தளபதி அவர்களுடைய ஆணைக்கிணங்க தமிழ்நாடு விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் மேம்பாட்டு துறை அமைச்சர், இளைஞர்களின் எழுச்சி நாயகன், கழகத்தின் எதிர்கால நம்பிக்கை நட்சத்திரம், அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் தலைமையில் ஜனவரி 21 ஆம் தேதி அன்று சேலத்தில் நடைபெறவிற்கும் திமுக இளைஞர் அணி மாநாட்டில் கோவை மாநகர் மாவட்டத்தில் இருந்து பல்லாயிரக்கணக்கான இளைஞர் அணி தம்பிமார்கள் வெண் சீருடையுடன் பங்கேற்பது என்று இக்கூட்டம் தீர்மானிக்கிறது.

தமிழர்களின் பாரம்பரிய திருவிழாவான, உழைக்கும் உழவர் பெருமக்கள் இயற்கைக்கும், மற்ற உயிரினங்களுக்கும் நன்றி செலுத்தும் விதமாக தமிழ்நாடு முழுவதும் ஜாதி, மதபேதங்களை களைந்து, எல்லோரும் ஓர் இனமாய் கொண்டாடப்படுகின்ற பொங்கல் திருநாளை, கோவை மாநகர் மாவட்டம் முழுவதும் அனைத்து பகுதிக் கழகங்கள், வார்டுகளிலும் கழகத்தின் இருவண்ண கொடி ஏற்றிவைத்தும், “சமத்துவப் பொங்கல்” வைத்தும், தமிழர்களின் பாரம்பரியமான பல்வேறு விளையாட்டு போட்டிகளை நடத்தியும், திருவள்ளுவர் சிலைக்கு மலர்மாலை அணிவித்தும், மகளிர்கள் பங்கேற்க கூடிய கோலப்போட்டிகள் போன்ற பல்வேறு போட்டிகள் நடத்தி, கோலாகலமாக பொங்கல் விழாவை கொண்டாடுவதென்று இக்கூட்டம் தீர்மானிக்கிறது.

இக்கூட்டத்தில், கோவை மாநகர் மாவட்ட துணைச் செயலாளர் கோட்டை அப்பாஸ், தலைமை கழக நிர்வாகிகள் தீர்மானக்குழு இணைச்செயலாளர்

பி.நாச்சிமுத்து, கழக சட்டத்துறை இணைச் செயலாளர்கள் கே.எம்.தண்டபாணி, பி.ஆர்.அருள் மொழி, தீர்மானக்குழு உறுப்பினர் மு.ரா.செல்வராஜ், மாநில தொழிலாளர் அணி துணைச் செயலாளர் தமிழ் செல்வன், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள்

வே.பாலசுப்ரமணியம், ஆனந்தகுமார்,

பொதுக்குழு உறுப்பினர்கள் மு.ம.ச.முருகன், புதூர் மணிகண்டன், சசிக்குமார், சா.கர்த்திகேயன், பகுதிச்செயலாளர்கள் ஆர்.எம்.சேது ராமன், கணபதி லோகு, அஞ்சுகம் பழனியப்பன், வ.ம.சண்முகசுந்தரம், பரணி கே.பாக்கியராஜ், கே.எம்.ரவி,

ப.பசுபதி, மார்க்கெட் எம்.மனோகரன், வி.ஐ. பதுருதீன், சிங்கை மு.சிவா, துரை. செந்தமிழ்செல்வன், மா.நாகராஜ், இரா.சேரலாதன், அணிகளின் அமைப்பாளர்கள்

இ.ரா.தனபால், அக்ரி பாலு, பூரணச்சந்திரன், அன்புச்செழியன், சி.ஆர்.கனிமொழி, அன்னம்மாள், ஸ்ரீசத்யா, கோவை தங்கம், சிவப்பிரகாஷ், கண்ணன், டெம்போ சிவா, ஏ.எஸ். ஜெயகுமார், எஸ்.கண்ணன், வி.எம்.மணி, உமாகாந்தன், கோவை அபு, கே.ஆர். ராஜா, இலா.தேவசீலன், கராத்தே அர்ச்சுனன், அணிகளின் தலைவர்கள் சிவராமன், சாந்தாமணி பன்னீர் செல்வம், ஜார்ஜ், ஆகியோர் கலந்துகொண்டனர்.

இவ்வாறு மாவட்டச் செயலாளர் நா.கார்த்திக் தமது அறிக்கையில் கூறியுள்ளார்.



மாநிலக்கல்லூரியில் தமிழ்த்துறை சார்பாக விடுதலைப் போராட்ட வீரரும் தமிழறிஞருமான கு.மு. அண்ணல் தங்கோ நினைவுக் கூட்டம் நடைபெற்றது. இதில் கல்லூரி முதல்வர் முனைவர் இரா.ராமன் உதவி பேராசிரியர் முனைவர்.பே. ஜெயச்சந்திரன், தமிழ்த்துறை தலைவர் தாமரைக்கண்ணன்,கு.மு. அண்ணல் தங்கோ அவர்களின் பேரன்கள் தமிழ்ச்செல்வன், அருள்செல்வன் ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள். மேலும் அண்ணல் தங்கோ பற்றிய பேச்சுப்போட்டியில் வென்றவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டது. நிகழ்ச்சியை முனைவர் இரெ.ஜோதி பாஸ் ஒருங்கிணைத்தார்.உதவி பேராசிரியர் கே.குமார் நன்றி கூறினார்.



காஞ்சிபுரம் மாவட்டம், பல்லாவரம் ராஜாஜி நகரில் உள்ள நியாய விலை கடையில் குடும்ப அட்டைதாரர்களுக்கு ரொக்கப்பணம் ரூ.1000/–த்துடன் ஒரு கிலோ பச்சரிசி, ஒரு கிலோ சர்க்கரை மற்றும் முழு கரும்புடன் கூடிய பொங்கல் பரிசு தொகுப்பினையும் மற்றும் இலவச வேட்டி, சேலைகளையும் கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி. குறு,சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் ஆகியோர் வழங்கினார்கள். உடன் பல்லாவரம் இ.கருணாநிதி, மேயர் வசந்தகுமாரி, துணை மேயர் காமராஜ், மண்டல குழு தலைவர்கள் ஜோசப் அண்ணாதுரை, வே.கருணாநிதி ஆகியோர் கலந்து கொண்டனர்.



திருவள்ளூர் மாவட்டம், ஆர்.கே.பேட்டை தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கத்தின் கீழ் இயங்கும் செல்லாத்தூர் நியாயவிலை கடை வளாகத்தில் 6 இலட்சத்து 25 ஆயிரத்து 729 குடும்ப அட்டைதாரர்களுக்கும் தமிழர் திருநாளாம் தைப்பொங்கல் பண்டிகையினை முன்னிட்டு பொங்கல் பரிசு தொகுப்பு வழங்கும் பணிகளை கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர்.காந்தி தொடங்கி வைத்து திருவள்ளூர் மேற்கு மாவட்டச் செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ. முன்னிலையில் பரிசு பொருட்கள் வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.த.பிரபுசங்கர் மாவட்ட திட்டக்குழுத்தலைவர் கே.வி.ஜி.உமா மகேஸ்வரி, மண்டல இணைப்பதிவாளர் தி.சண்முகவள்ளி, துணைப்பதிவாளர் சி.வி.கருணாகரன், வட்டாட்சியர் விஜயகுமார், வட்ட வழங்கல் அலுவலர் வெங்கடேசன், ஊராட்சிமன்ற தலைவர் ஜி.வேலு, கூட்டுறவு சங்க செயலாளர் எஸ். ஏழுமலை ஒன்றிய செயலாளர் பெ.பழனி, சி.என்.சண்முகம், எம்.ஜி.ஜோதிகுமார், ம.கிரண், டி.எம்.சுகுமார், சித்திக் அலி, ஜி.வேணு, திலகவதிரமேஷ். ஆனந்தி செங்குட்டுவன், ரகு, டில்லி பாபு, பிச்சாண்டி, வெங்கடேசன், திருவேங்கடம், பெருமாள், மாத்தையா மற்றும் அரசு துறை அலுவலர்கள் உள்ளாட்சி பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

### கல்வி உரிமையைக் காக்க – பாசிச பா.ஜ.க. அரசைக் கண்டித்து

# புதுடெல்லியில் நாளை மாணவர் பேரணி!

## கழக மாணவர் அணிச் செயலாளர் சி.வி.எம்.பி.எழிலரசன் அறிக்கை!

*சென்னை, ஜன. 11 -*

*தேசிய கல்விக் கொள்கையை நிராகரித்து, கல்வி உரிமையைக் காப்பதற்கும்; நாளை பாசிச பா.ஜ.க. அரசை நிராகரித்து, இந்தியாவை காப்பதற்கும் டெல்லியில் மாபெரும் மாணவர் பேரணி நடைபெறுகிறது. இதில் தி.மு.க. மாணவர் அணி உள்ளிட்ட இந்தியா கூட்டணி கட்சியின் 16 மாணவர் அமைப்புகள் ஒன்று கூடி உருவாக்கிய "யுனைடெட் ஸ்டூடென்ஸ் ஆஃப் இந்தியா" (United Students of India) அமைப்பு பங்கேற்று நடத்துகிறது. டெல்லி பேரணிக்கு தி.மு.க. மாணவர் அணியின் அடலேறுகளே, மாணவர் சேனையே அணி திரண்டு வாரீர்! வாரீர்!! என்று தி.மு.க. மாணவர் அணிச் செயலாளர் சி.வி.எம்.பி. எழிலரசன், எம்.எல்.ஏ. அழைப்பு விடுத்துள்ளார்.*

*அவரது அறிக்கை வருமாறு: -*

*கழக தலைவர் முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, கழக இளைஞர் அணிச் செயலாளர் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலோடு, பாசிச பா.ஜ.க. அரசின் ஜனநாயக விரோத ஆட்சியை கண்டித்தும், மாணவர் விரோத கல்விக் கொள்கை, சட்டங்கள், திட்டங்கள் குறிப்பாக தேசிய கல்விக் கொள்கை 2020, நீட் தேர்வுக்கு எதிராக கழக மாணவர் அணி தொடர்ந்து போராடி கொண்டிருப்பது அனைவரும் அறிந்ததே.*

*இந்திய துணைக்கண்டத்தை காக்கும் நோக்கத்தோடு, பாசிச பா.ஜ.க அரசை எதிர்த்து, இந்தியா (I.N.D.I.A.) கூட்டணியில் இடம்பெறும் AISA, AISB, AISF, CRJD, CYSS, DSF, Dravidan Students' Federation, NSUI, PSF, PSU, RLD Chatra Sabha, Samajwadi Chatra Sabha, Satro Mukti Sangram Samiti, SFI, TSU ஆகிய அமைப்புகளுடன் தி.மு.க. மாணவர் அணி இணைந்து "யுனைடெட் ஸ்டூடென்ஸ் ஆஃப் இந்தியா" (United Students of India) என்ற அமைப்பை உருவாக்கியது.*

*இந்த அமைப்பின் செய்தியாளர்கள் சந்திப்பு கடந்த 21.11.2023 அன்று டெல்லியில் நடைபெற்றது. அதில், பாசிச பா.ஜ.க. அரசு கொண்டு வந்துள்ள தேசிய கல்விக் கொள்கை 2020 மாணவர்களின் கல்வி உரிமைக்கு எதிரானது. அது கல்வியை காவிமயமாக்கவும், வணிகமயமாக்கவும், கார்ப்பரேட்களிடம் தாரை வார்க்கவும், அனைவருக்குமான கல்வி உரிமையை மறுக்கவும், இந்தி, சமஸ்கிருத திணிப்பிற்கும் அடித்தளமிடுகிறது. இந்தியாவின் பன்முகத் தன்மையை சிதைத்து ஒற்றைப் பண்பாட்டு தேசமாக அதிலும் குறிப்பாக சமஸ்கிருத பண்பாட்டுத் தேசமாக இந்தியாவை கட்டமைக்க வழிவகுக்கும் தேசிய கல்விக் கொள்கை 2020ஐ நிராகரிக்க வேண்டுமென்றும்,*

*கல்வியே ஒரு மனிதனுக்கு அறிவையும், ஆற்றலையும் சுயசிந்தனையும், சுய மரியாதையையும், சுதந்திரத்தையும் வழங்கக்கூடியது. தனிமனித சுதந்திரம் என்பது ஜனநாயகத்தின் மாண்பு. அந்த ஜனநாயகத்தை காக்கும் தூணாக விளங்கும் கல்வியை ஏழை எளியோரிடமிருந்து பறித்து, பணக்கார வர்க்கத்திடம் வழங்க சதிதிட்டம் செய்கிறது பாசிச பா.ஜ.க. அரசு. அதன்மூலம் கல்வி மறுக்கப்பட்ட சமூக நிலையை மீண்டும் கட்டமைக்கவே விரும்புகிறது தேசிய கல்விக் கொள்கை 2020. கல்வி மறுக்கப்பட்ட சமூகம் தனது சுயமரியாதையும், சுதந்திரத்தையும் இழந்துவிடும். அரசியலமைப்புச்சட்டம் வழங்கிய அத்தனை உரிமைகளையும் இழக்கச் செய்து சுதந்திரமற்றவர்களாய், சுயமரியாதை அற்றவர்களாய், ஒட்டுமொத்த ஜனநாயகத்தை அழிக்க முயல்கிறது பாசிச பா.ஜ.க. அரசு.*

*எனவே, இந்திய துணைக்கண்டத்தை காக்க, இந்தியாவின் பன்முகத்தன்மையை, ஒற்றுமையை, ஒருமைப்பாட்டை, மாணவர்களின் கல்வி உரிமையை காத்திட தேசிய கல்விக் கொள்கை 2020ஐ நிராகரிப்போம்! பாசிச பா.ஜ.க. அரசை நிராகரிப்போம்!! என்றும், கல்வி உரிமையை காப்போம்! இந்தியாவை காப்போம்!! என்ற முழக்கத்துடன், "Save EDUCATION Reject NEP; Save INDIA Reject BJP" என்ற முழக்கத்துடன், வரும் 12.01.2024 தேதியன்று, தலைநகர் டெல்லியில் பல்லாயிரக்கணக்கான மாணவர்கள் பங்கேற்கும் நாடாளுமன்றம் நோக்கிய மாபெரும் மாணவர் பேரணி (Parliament March) நடத்திட யுனெடெட் ஸ்டூடென்ஸ் ஆஃப் இந்தியா (United Students of India) கூட்டமைப்பு எடுத்த முடிவினை அறிவித்தோம்.*

*அதன்படி, பாசிஸ்ட்டுகளிடமிருந்து இந்திய துணைக் கண்டத்தை காத்திடவும், மாணவர்களின் கல்வி உரிமையையும் பாதுகாத்திடவும் டெல்லியில் நடைபெறும் பேரணிக்கு தி.மு.க. மாணவர் அணியின் அடலேறுகளே, மாணவர் சேனையே அணி திரண்டு வாரீர்! வாரீர்!! என அன்போடு அழைக்கின்றேன்!*

*இவ்வாறு அவர் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.*



சென்னை வடக்கு மாவட்டம் ஆர்.கே.நகர் 43 வது வார்டில் வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீராசாமி மற்றும் ஆர்.கே.நகர் சட்டமன்ற உறுப்பினர் ஜே.ஜே. எபினேசர் ஆகியோர் ஏற்பாட்டில் சிங்காரவேலர் நகர், எம்.ஜி.ஆர்.நகர் பகுதியை சார்ந்த சுமார் 2000 நபர்களுக்கு நல உதவிகள் வழங்கப்பட்டது. இதில் சென்னை வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் தா.இளைய அருணா, பகுதிக் கழகச் செயலாளர்கள் இரா.லட்சுமணன், எஸ்.ஜெபதாஸ்பாண்டியன் ஆகியோர் பங்கேற்றனர். மேலும் மண்டலக்குழுத் தலைவர் நேதாஜி யு.கணேசன், மாமன்ற உறுப்பினர் நரேஷ்குமார், என்.மருதுகணேஷ் மற்றும் கழக நிர்வாகிகள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

# தலைமைக் கழக அறிவிப்பு

'தி.மு.க. தகவல் தொழில்நுட்ப அணி'யின் முன்னெடுப்பில் வருகிற 13.01.2024 (சனிக்கிழமை) அன்று மாவட்டக் கழகங்கள் நடத்தும் மாவட்ட அளவிலான "சமூக ஊடகங்களுக்கான பயிற்சி வகுப்பு" நடைபெறுகிறது.

இப்பயிற்சி வகுப்பில் கழக இளைஞர் அணி – மாணவர் அணி – மகளிர் அணி – தொண்டர் அணி – தொழிலாளர் அணி – வழக்கறிஞர் அணி – பொறியாளர் அணி – மருத்துவ அணி – விளையாட்டு மேம்பாட்டு அணி – சிறுபான்மைநல உரிமைப் பிரிவு – விவசாய அணி – விவசாயத் தொழிலாளர் அணி – சுற்றுச்சூழல் அணி – அயலக அணி உள்ளிட்ட கழக சார்பு அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள் – துணை அமைப்பாளர்கள் மற்றும் கழக நாடாளுமன்ற – சட்டமன்ற உறுப்பினர்கள் கட்டாயம் கலந்து கொள்ள வேண்டும் என அறிவுறுத்தப்படுகிறது.

இப்பயிற்சி வகுப்பு நடைபெறும் இடம் குறித்த விவரங்களைத் தெரிந்து கொள்ள, அந்தந்த மாவட்டக் கழகத்தை அணுக வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை – 18
நாள்– 10.01.2024

**தலைமைக் கழகம்,**
தி.மு.க.

### பன்னாட்டு – உள்நாட்டு தொழில் நிறுவனங்கள் விரிவாக்கம்

# முதலீட்டாளர் நம்பிக்கையாக தமிழ்நாடு உள்ளது!

## 'தி இந்து' ஆங்கில நாளேடு தலையங்கம்!

சென்னை, ஜன.11–

பன்னாட்டு மற்றும் உள்நாட்டு தொழில் நிறுவனங்கள் இங்கு விரிவாக்கம் செய்ய எண்ணுவதன் மூலம் முதலீட்டாளர்களின் நம்பிக்கையாக தமிழ்நாடு உள்ளது என்று 'தி இந்து' ஆங்கில நாளேடு தனது தலையங்கத்தில் பாராட்டியுள்ளது.



Investor confidence

Tamil Nadu must match its growth aspirations with action on the ground

By getting industry leaders to commit to invest ₹6.64 lakh crore through 631 Memoranda of Understanding (MoU) signed over the course of the two-day Tamil Nadu Global Investors Meet (GIM 2024), the M.K. Stalin government seems intent on using job creation to steer the State on a growth trajectory. The projections of an additional 26.90 lakh jobs including 14.54 lakh through direct employment are meant to reinforce Tamil Nadu's reputation as an economic power house. In sheer numbers, the success of the 2024 edition dwarfs the outcomes in 2019 and 2015. It has attracted investments in green energy, e-vehicles, non-leather footwear, automobiles, advanced electronic manufacturing, defence and aerospace and the time-tested Information Technology and digital services. Sig-

இரண்டு நாள் தமிழ்நாடு உலக முதலீட்டாளர்கள் மாநாட்டில் 631 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மூலம் தொழில்துறை தலைவர்கள் 6.64 லட்சம் கோடி முதலீடு செய்ய உறுதியளித்ததன் மூலம் , மு.க.ஸ்டாலின் அரசு வேலைவாய்ப்பைப் பயன்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. மாநிலத்தை வளர்ச்சிப் பாதையில் கொண்டு செல்ல வேண்டும்.

நேரடி வேலைவாய்ப்பு மூலம் 14.54 லட்சம் உட்பட 26.90 லட்சம் கூடுதல் வேலை வாய்ப்புகள் தமிழ்நாட்டின் பொருளாதார சக்தியாக இருக்கும் நற்பெயரை என்பதோடு வலுப்படுத்தும் வகையில் உள்ளன. அதிக எண்ணிக்கையில், 2024 பதிப்பின் வெற்றியானது 2019 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளின் விளைவுகளை குறைக்கிறது.

இது பசுமை ஆற்றல், மின் வாகனங்கள், தோல் அல்லாத பாதணிகள், ஆட்டோமொபைல்கள், மேம்பட்ட மின்னணு உற்பத்தி, பாதுகாப்பு மற்றும் விண்வெளி மற்றும் நேரத்தைச் சோதனை செய்த தகவல் ஆகியவற்றில் முதலீடுகளை ஈர்த்துள்ளது. தொழில்நுட்பம் மற்றும் டிஜிட்டல் சேவைகள். குறிப்பிடத்தக்க வகையில், வளர்ச்சியடைந்த சென்னை மற்றும் கோயம்புத்தூர் பகுதிகளுக்கு அப்பால், இந்த முதலீடுகள் கடைகோடி மாவட்டங்கள் தெற்கு உட்பட மாநிலம் முழுவதும் விநியோகிக்கப்படுகின்றன.

அடுக்கு 2 மற்றும் 3 நகரங்கள் மற்றும் நகரங்களில் ஆதரவு உள்கட்டமைப்பை உருவாக்குவதன் மூலம், இது சமச்சீர் பிராந்திய வளர்ச்சிக்கு வழி வகுக்கும் மற்றும் நகர்ப்புற மையங்களுக்கு இடம்பெயர்வதை ஓரளவு தடுக்கலாம்.

ஒன்பது முன்னேறிய நாடுகள் பங்குதாரர் வந்திருந்தன. மேலும் 30 க்கும் மேற்பட்ட நாடுகள் மாநாட்டில் பங்கேற்றன. அதன் உலகளாவிய தன்மையே வியட்நாமின் EV தலைவர் வின்ஃபாஸ்ட் போன்ற புதிய நுழைவுயாளர்களை தமிழ்நாட்டிலிருந்து இந்திய சந்தையில் நுழைவதற்கான வாய்ப்பைப் பயன்படுத்த தூண்டியது.

ஹூண்டாய், டாடாஸ், அதானி, குவால்காம் மற்றும் செயின்ட் கோபேன் உள்ளிட்ட பன்னாட்டு மற்றும் உள்நாட்டு குழுக்கள் தங்கள் தடத்தை விரிவுபடுத்துவதில் ஆர்வமாக இருப்பது தமிழ்நாட்டின் பொருளாதார மற்றும் நிர்வாகச் சூழலில் முதலீட்டாளர்களின் நம்பிக்கையின் அளவைக் காட்டுகிறது.

இவ்வாறு 'தி இந்து' ஆங்கில நாளேடு தனது தலையங்கத்தில் குறிப்பிட்டுள்ளது.





கடலூர் மாவட்டம், புவனகிரி வட்டம், சேத்தியாதோப்பு பகுதியில் உள்ள எம். ஆர்.கிருஷ்ணமூர்த்தி கூட்டுறவு சக்கரை ஆலையில் நேற்று (10.01.2024) 2023–24 கரும்பு அரவை பணியை வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தொடங்கி வைத்தார். உடன் அரசு முதன்மை செயலாளர்/சர்க்கரைத்துறை ஆணையர் சா.விஜயராஜ்குமார், மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.அ.அருண் தம்புராஜ், காட்டுமன்னார்கோயில் சட்டமன்ற உறுப்பினர் ம.சிந்தனைச்செல்வன், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் இரா.இராஜாராம், மாவட்ட வருவாய் அலுவலர்/செயலாட்சியர் ரெ.சதீஸ் ஆகியோர் உள்ளனர்.



இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு நேற்று (10.01.2024) ஆணையர் அலுவலகத்தில் திருக்கோயில்களில் பணியாற்றி ஓய்வுபெற்ற அர்ச்சகர்கள் மற்றும் பணியாளர்களுக்கு பொங்கல் கொடை வழங்கும் திட்டத்தை தொடங்கி வைத்து ரூ.1,000/-க்கான காசோலைகளை வழங்கினார். உடன் சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் க.மணிவாசன், இந்து சமய அறநிலையத்துறை சிறப்பு பணி அலுவலர் ஜெ.குமரகுருபரன், ஆணையர் க.வீ.முரளீதரன், கூடுதல் ஆணையர்கள் அ.சங்கர், திருமதி ந.திருமகள், திருமதி சி.ஹரிப்ரியா மற்றும் அலுவலர்கள் உள்ளனர்.

ஊழல் வழக்கின் சாட்சியங்களைக் கலைக்க சேலம் செல்லும் ஆளுநரைக் கண்டித்து.

# தமிழ்நாடு மாணவர் இயக்கங்களின் கூட்டமைப்பு சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம்!

## ஒருங்கிணைப்பாளர்கள் சி.வி.எம்.பி.எழிலரசன் எம்.எல்.ஏ. - கோ.அரவிந்தசாமி அறிவிப்பு!

சென்னை, ஜன.11-

சேலம் பெரியார் பல்கலைக்கழகத்தின் கீழ் 120க்கும் மேற்பட்ட அரசு மற்றும் தனியார் கல்லூரிகள் இயங்கி வருகின்றன. இந்த பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராக கடந்த மூன்று ஆண்டுகளாக ஜெகநாதன் என்பவர் பணியாற்றி வருகிறார். இந்தச் சூழலில் ஜெகநாதனின் பதவிக் காலத்தில் பல்வேறு முறைகேடுகள் ஊழல் குற்றச்சாட்டுகள் என தொடர்ச்சியான புகார்கள் எழுந்து வந்தன. தன்னை ஆர்.எஸ்.எஸ். காரர் என்றும், செய்யும் அத்தனை ஊழல்களையும் ஒன்றிய பா.ஜ.க. அரசு காப்பாற்றும் என்றும் கருதி செயல்பட்டுக் கொண்டிருப்பவர் தான் இந்த ஜெகநாதன்.

இந்தச் சூழலில் பெரியார் பல்கலைக்கழகத்தின் துணை வேந்தராக உள்ள ஜெகநாதன், பூட்டர் பவுண்டேஷன் என்ற நிறுவனத்தை தொடங்கி, பல்கலைக்கழகத்தில் பணியாற்றுக்கூடிய ஆசிரியர்களை பயன்படுத்தி தனியார் நிறுவனங்கள் உடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்ததாக புகாரும், ஏற்கனவே தொழிற்சங்கத்தினர், பேராசிரியர்கள் என பல்வேறு தரப்பினரும் பல்வேறு முறைகேடு புகார்களைத் தொடர்ந்து தெரிவித்து வந்துள்ளனர்.

குறிப்பாக சட்டவிரோதமாக பணியாளர்களை நியமிப்பது, தகுதி இல்லாத ஆசிரியர்களை நியமிப்பது, பதவி உயர்வு வழங்குவதில் முறைகேடு, ஆட்சி மன்றக் குழுவின் அனுமதி இல்லாமல் பல்வேறு தனியார் அமைப்புகளுக்கு பெரியார் பல்கலைக்கழகத்தில் நிகழ்ச்சி நடத்த அனுமதி அளிப்பது போன்ற பல்வேறு குற்றச்சாட்டுகள் தொடர்ந்து எழுந்து வந்த நிலையில், பல்வேறு ஊழல் மற்றும் முறைகேடு காரணங்களுக்காக பல்கலைக்கழக துணை வேந்தர் ஜெகநாதன் மீது, தமிழ்நாடு அரசு சார்பில் காவல்துறை மூலம் ஆபாசமாகப் பேசுதல், கொலை மிரட்டல் விடுத்தல், கூட்டு சதி, மோசடி, போலி ஆவணங்களைத் தயாரித்தல், அரசு ஊழியராக இருந்து கொண்டு ஏமாற்றுதல், குற்றம் செய்ய முயற்சி செய்தல் மற்றும் வன்கொடுமை தடுப்பு சட்டம் ஆகிய 8 பிரிவுகளின் கீழ் போலீஸார் வழக்கு பதிவு செய்யப்பட்டு, வழக்கு தொடுக்கப்பட்டு, கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார்.

இவ்வளவு குற்றச் செயல்களில் ஈடுபட்ட ஒருவருக்கு கீழமை நீதிமன்றம் பிணை வழங்கியதை எதிர்த்து, காவல் துறை சார்பில் உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடக்கப்பட்டுள்ளது. இவ்வழக்கு இன்னும் இரண்டு தினத்தில் இவ்வழக்கு உயர்நீதிமன்றத்தில் விசாரிக்கப்படவுள்ள நிலையில், மாண்புமிகு ஆளுநர் ஆர்.என். ரவி, சேலம் பெரியார் பல்கலைக்கழகத்தில் ஆய்வு எனக்கூறிக் கொண்டு, அனைத்து பேராசிரியர்கள் மற்றும் பணியாளர்களுடன் கலந்துரையாடல் கூட்டத்தை இன்று (11.01.2024) நடத்த உள்ளதாக அறிய வருகிறோம்.

பல்கலைக்கழக துணை வேந்தராக இருந்து கொண்டு, தனக்குச் சொந்தமாக பூட்டர் பவுண்டேஷன் என்ற நிறுவனத்தைத் தொடங்கி, ஒரு தனியார் நிறுவனத்தோடு புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துகொண்டு பல்கலைக்கழக நிதியை, மாணவர்களுக்கான பணத்தை, மக்கள் வரிப் பணத்தை கையாடல் செய்யும் நோக்கத்தோடு செயல்பட்டவரை காப்பாற்றும் விதமாக செயல்படும் தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என். ரவியின் உள்நோக்கம் என்ன என்பது அனைவருக்கும் தெரிந்ததே!

ஊழல் மற்றும் முறைகேடு வழக்குகளில் தொடர்புடைய ஒரு துணை வேந்தரைப் பாதுகாக்கும் நோக்கத்தில் ஆளுநர் ஆர்.என்.ரவி சேலம் பெரியார் பல்கலைக் கழகத்திற்குச் செல்வது, ஊழல்வாதிகளுக்கு ஆதரவு தெரிவிக்கவும், அவ்வழக்கைத் திசை திருப்பவும், சாட்சியங்களைக் கலைப்பதற்கும் முறைகேடுகளில் ஈடுபட்டவர்களை மறைமுகமாய் காப்பாற்ற நினைக்கிறாரா ஆளுநர் என்ற சந்தேகம் மக்களிடம் ஏற்பட்டுள்ளது.

தமிழ்நாட்டின் கல்வி முறைகளை மேம்படுத்த உருவாக்கப்பட்ட பல்கலைக்கழகங்களில் துணைவேந்தரை நியமிப்பதில் தேர்வுக் குழுவில் தன்னிச்சையாக ஒருவரை ஆளுநர் நியமிப்பது தவறு என நீதிமன்றம் கருத்து சொன்ன நிலையில், பல்கலைக்கழகத்தில் ஊழல் பெருச்சாளியாய் செயல்பட்டுக் கொண்டிருக்கும் ஒருவரைக் காப்பாற்றுவதற்காக இத்தனை முயற்சியா என்ற கேள்வி பொதுமக்கள் எழுப்புகின்றனர்.

தமிழ்நாட்டின் வருங்கால சந்ததியினரான மாணவர்களை மேம்படுத்தும் உன்னதமான பணியினை மேற்கொள்ளும் பல்கலைக்கழகத்தில் ஊழல் செய்தும், வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட ஒருவரை காப்பாற்ற வேண்டுமென்ற உள்நோக்கத்தோடும், சாட்சியங்களை களைப்பதற்காகவும், ஆய்வுக்கூட்டம் என்றப் பெயரால் பல்கலைக்கழகத்திற்கு செல்லும் ஒன்றிய பாசிச பா.ஜ.க. அரசின் ஏஜெண்டாக இருக்கும் ஆளுநர் ஆர்.என். ரவியை தமிழ்நாடு மாணவர் இயக்கங்களின் கூட்டமைப்பு வண்மையாக கண்டிக்கிறது. மேலும், உடனடியாக ஆளுநர் அவர்கள் பல்கலைக்கழக ஆய்வுப் பணியை ரத்து செய்ய வேண்டுமென்று வலியுறுத்துகிறது.

அதையும் மீறி, ஊழல் வழக்கில் தொடர்புடைய நபருக்கு ஆதரவாக தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என். ரவி அவர்கள் சேலம் பல்கலைக்கழகத்திற்குள் நுழைய முற்படுவாரேயானால், தி.மு.க. மாணவர் அணி, திராவிட மாணவர் கழகம், ம.தி.மு.க. மாணவர் அணி, இந்திய மாணவர் சங்கம் (SFI), அனைத்திந்திய மாணவர் பெருமன்றம் (AISF), முற்போக்கு மாணவர் கழகம் (RSF), முஸ்லிம் மாணவர் பேரவை (MSF), சமூகநீதி மாணவர் இயக்கம் (SMI), மாணவர் இந்தியா, அனைத்திந்திய கிராமப்புற மாணவர் சங்கம், திராவிட இயக்கத் தமிழ் பேரவை மாணவர் அணி, தமிழ்நாடு மாணவர் முன்னணி (TSF) உள்ளிட்ட தமிழ்நாடு மாணவர் இயக்கங்களின் கூட்டமைப்பு (FSO - TN) சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறும்.

இந்த ஆர்ப்பாட்டத்தில், தமிழ்நாடு மாணவர் இயக்கங்களின் கூட்டமைப்பில் இடம்பெற்றுள்ள மாணவர் அமைப்புகளின் நிர்வாகிகள், பொறுப்பாளர்கள், தோழர்கள், முற்போக்கு சிந்தனையுடைய மாணவர், இளைஞர்கள் அனைவரும் கலந்து கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறோம்.

இவ்வாறு மாணவர் இயக்கங்களின் கூட்டமைப்பு தமிழ்நாடு (FSOTN) ஒருங்கிணைப்பாளர்கள் சி.வி.எம்.பி. எழிலரசன், எம்.எல்.ஏ., மற்றும் கோ. அரவிந்தசாமி ஆகியோர் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளனர்.

**கூட்டமைப்பு**

திராவிட மாணவர் கழகம்,

தி.மு.க. மாணவர் அணி,

ம.தி.மு.க. மாணவர் அணி,

இந்திய மாணவர் சங்கம் (SFI),

அனைத்திந்திய மாணவர் பெருமன்றம் (AISF),

முற்போக்கு மாணவர் கழகம் (RSF),

முஸ்லிம் மாணவர் பேரவை (MSF),

சமூகநீதி மாணவர் இயக்கம் (SMI),

மாணவர் இந்தியா,

அனைத்திந்திய கிராமப்புற மாணவர் சங்கம்,

திராவிட இயக்கத் தமிழர் பேரவை மாணவர் அணி,

தமிழ்நாடு மாணவர் முன்னணி (TSF)

மற்றும் பல்வேறு மாணவர் அமைப்புகள் உள்ளிட்ட

மாணவர் இயக்கங்களின் கூட்டமைப்பு தமிழ்நாடு. (FSOTN)

ராமர் கோயில் திறப்பு விழா பயனை அறுவடை செய்ய - நாடாளுமன்றத்

# தேர்தலை வடமாநிலங்களில் முதலில் நடத்த மோடி அரசு திட்டம்!

சென்னை, ஜன.10-

அயோத்தி ராமர் கோயில் திறப்பு விழா நடந்து முடிந்த பிறகு, அதன் பயனை அறுவடை செய்ய வசதியாக உடனடியாக மக்களவைத் தேர்தலை வட மாநிலங்களில் முதலில் நடந்த மோடி அரசு தயாராகி உள்ளதாக தினகரன் நாளேடு 9.1.2024 அன்று தலையங்கத்தில் குறிப்பிட்டுள்ளது.

அத்தலையங்கத்தில் கூறப்பட்டுள்ளதாவது :

அயோத்தி ராமர் கோயில் திறப்பு விழா ஜன.22ம் தேதி முடிந்த பிறகு நாடாளுமன்ற தேர்தல் தேதி எப்போது வேண்டும் என்றாலும் அறிவிக்கப்படலாம். தேர்தலுக்கான அத்தனை ஏற்பாடுகளையும் தலைமை தேர்தல் ஆணையம் செய்து முடித்து விட்டது. 2019ம் ஆண்டு மார்ச் 10ம் தேதி தேர்தல் தேதிகள் அறிவிக்கப்பட்டன. நாடு முழுவதும் மொத்தம் 7 கட்டங்களாக தேர்தல் நடத்தப்பட்டன. ஏப்.11 தொடங்கி மே 19 வரை நாடு முழுவதும் உள்ள 543 தொகுதிகளுக்கும் தேர்தல் நடத்தப்பட்டன. இந்த தேர்தல் முடிவுகள் மே 23ம் தேதி அறிவிக்கப்பட்டன.

ராமர் கோயில் திறப்பு விழா பயனை பா.ஜ அறுவடை செய்ய வசதியாக,

### 'தினகரன்' நாளேடு தலையங்கம்!

இந்த முறை வடமாநிலங்களில் முதலில் வாக்குப்பதிவு நடத்த வாய்ப்பு உள்ளதாக அரசியல் விமர்சகர்கள் கருத்து தெரிவித்து உள்ளனர். அதற்கு ஏற்றார்போல்





சிபிஎஸ்இ தேர்வுகள் ஏப்.2ம் தேதி முடிக்கப்பட உள்ளன. 543 தொகுதிகளில் பெரும்பாலான இடங்களுக்கு வேட்பாளர் பெயரைக்கூட பா.ஜ இறுதி செய்துவிட்டதாகவும் தகவல் வெளியாகி உள்ளன. நாடு முழுவதும் மக்களவை தேர்தல் ஏற்பாடுகளுக்கு தயாராகி உள்ள நிலையில் இந்த முறை மோடி அரசை வீழ்த்த நாட்டில் உள்ள 28 எதிர்க்கட்சிகள் ஒன்று சேர்ந்து இந்தியா கூட்டணியை அமைத்து உள்ளன.

பீகார் முதல்வர் நிதிஷ்குமார் முயற்சியால் காங்கிரஸ் கட்சியுடன் எப்போதும் எதிர்த்து நிற்கும் மேற்கு வங்க முதல்வர் மம்தா பானர்ஜி தலைமையிலான திரிணாமுல் காங்கிரஸ் கட்சியும், டெல்லி முதல்வர் கெஜ்ரிவால் தலைமையிலான ஆம்ஆத்மியும் இந்தியா கூட்டணியில் இணைந்துள்ளன. அதைவிட முக்கியமாக காங்கிரஸ் மற்றும் ஆம்ஆத்மி இடையே தொகுதி பங்கீடு குறித்து முதற்கட்ட பேச்சு வார்த்தை நடத்தி முடிக்கப்பட்டுள்ளது. காங்கிரஸ் கட்சியிடம் இருந்து டெல்லி மற்றும் பஞ்சாப் மாநில ஆட்சி அதிகாரத்தை ஆம்ஆத்மி கைப்பற்றியது.

அங்கும் கூட்டணி வைக்க இருகட்சிகளின் மாநில தலைவர்கள் எதிர்ப்பு தெரிவித்தாலும், அதை எல்லாம் மீறி பா.ஜவை வீழ்த்த வேண்டும் என்ற ஒற்றை இலக்குடன் பேச்சு வார்த்தை நடத்தி முடிக்கப்பட்டுள்ளது. டெல்லியில் உள்ள 7 தொகுதிகளில் காங்கிரஸ் கட்சிக்கு 3 தொகுதிகள் ஒதுக்க முடிவு எடுக்கப்பட்டுள்ளது. 2014, 2019ல் நடந்த நாடாளுமன்ற தேர்தலில் டெல்லியில் உள்ள 7 தொகுதிகளையும் பா.ஜ வென்றது. இந்த முறை காங்கிரஸ், ஆம்ஆத்மி இணைந்து போட்டியிடுவதால் அங்கு பா.ஜவுக்கு சிக்கல் ஏற்படும். அதே போல் பஞ்சாப் மாநிலத்தில் உள்ள 13 தொகுதிகளில் காங்கிரசுக்கு 6 தொகுதிகள் ஒதுக்க ஆம்ஆத்மி சம்மதித்து விட்டது.

அதே சமயம் அரியானா, கோவா, குஜராத் மாநிலங்களிலும் ஆம்ஆத்மிக்கு தொகுதி ஒதுக்க காங்கிரஸ் கட்சியிடம் கோரிக்கை வைத்துள்ளது. விரைவில் இருகட்சிகள் இடையே முழுமையான தொகுதி பங்கீடு முடிந்து அறிவிப்பு வெளியாகும் என்று தெரிகிறது. தற்போது மேற்குவங்கம், மகாராஷ்டிரா மாநிலங்களில் மட்டும் தான் இழுபறி நீடிக்கிறது. பீகார் மாநிலத்தில் கிட்டத்தட்ட தொகுதி பங்கீடு இறுதி செய்யப்பட்டுவிட்டது. இந்த மாத இறுதிக்குள் இந்தியா கூட்டணி மற்ற அனைத்து மாநிலங்களிலும் தொகுதி பங்கீட்டை முடித்து விட்டு முன்கூட்டியே பிரசாரத்தை தொடங்க உள்ளது. இதனால் இனிவரும் நாட்களில் அனல் பறக்கும்.

இவ்வாறு அந்தத் தலையங்கத்தில் கூறப்பட்டுள்ளது.

ஆட்சியர் மருத்துவர் ச.உமா தலைமை எம்.எல்.ஏ.க்கள் பெ.இராமலிங்கம், கே.பொன்னுசாமி முன்னிலை!

# நாமக்கல்லில் கலைஞர் நூற்றாண்டு விழா விளையாட்டுப்போட்டி!

## கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி. துவக்கி வைத்தார்!

நாமக்கல், ஜன. 11-

முன்னாள் தமிழ்நாடு முதல்வர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை தமிழ்நாடு அரசு சிறப்பாக கொண்டாடி வருகிறது. இதையொட்டி, மாவட்ட அளவிலான இளைஞர்களுக்கான குழு விளையாட்டு போட்டிகள் கால்பந்து, வாலிபால், மற்றும் கபடி ஆகிய விளையாட்டு போட்டிகள், மாவட்ட விளையாட்டரங்கில் நேற்று (ஜன. 10) மற்றும் 11 ஆம் தேதி ஆகிய இரண்டு நாட்கள் நடைபெற உள்ளது. ஆண்கள் மற்றும் பெண்கள் ஆகிய இரு பாலருக்கும் தனித்தனியே விளையாட்டுப் போட்டிகள் காலை 8 மணி முதல் நடைபெறுகிறது.

இப்போட்டிகளில், 15 வயது முதல் 24 வரையுள்ள ஆண்கள் மற்றும் பெண்கள் கலந்து கொள்ளலாம். மேலும், கபடி போட்டிகளுக்கு ஆண்கள் மற்றும் பெண்கள் அணிக்கு முதல் பரிசாக தலா ரூ.20,000, இரண்டாம் பரிசாக தலா ரூ.10,000, மூன்றாம் பரிசாக ரூ.5,000 வீதம் வழங்கப்படும். கால்பந்து போட்டிகளுக்கு ஆண்கள் மற்றும் பெண்கள் அணிக்கு முதல் பரிசாக தலா ரூ.25,000, இரண்டாம் பரிசாக தலா ரூ.20,000, மூன்றாம் பரிசாக தலா ரூ.10,000 வீதம் வழங்கப்படும். வாலிபால் போட்டிகளுக்கு ஆண்கள் மற்றும் பெண்கள் அணிக்கு முதல் பரிசாக தலா ரூ.15,000, இரண்டாம் பரிசாக தலா ரூ.10,000, மூன்றாம் பரிசாக தலா ரூ.5,000 வீதம் வழங்கப்படும்.

இப்போட்டி துவக்க விழா நாமக்கல் மாவட்ட உள்விளையாட்டு அரங்கில் நடைபெற்றது. நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித் தலைவர் மருத்துவர் ச.உமாதலைமை தாங்கினார். சட்டமன்ற உறுப்பினர்கள் நாமக்கல் பெ.இராமலிங்கம், சேந்தமங்கலம் கே.பொன்னுசாமி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இரண்டு நாள் நடைபெறும் இப்போட்டியை நாமக்கல் கிழக்கு மாவட்ட கழகச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் துவக்கி வைத்து பேசினார். அப்போது முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பதவியேற்ற நாள் முதல் மாணவர்களுக்கான பல்வேறு திட்டங்களை செயலாற்றி வருகிறார்.

கழக இளைஞர் அணி செயலாளரும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பொறுப்பேற்றதற்கு பிறகு விளையாட்டுத்துறைக்கு முக்கியத்துவம் வழங்கி வருகிறார். அதிலும் விளையாட்டு வீரர்களுக்கு இந்தியாவிலேயே அனைத்துத் துறை வேலை வாய்ப்பில் விளையாட்டு வீரர்களுக்கு முன்னுரிமை கொடுக்கும் வகையில் 3 சதவீதம் வேலை வாய்ப்பை விளையாட்டு வீரர்களுக்கு வழங்கி உள்ளார்.

விளையாட்டு வீரர்கள் இதனை பயன்படுத்திக் கொண்டு விளையாட்டு துறையில் நல்ல விதமாக விளையாடி கொண்டு அரசு துறையில் பணிபுரிவதற்கு பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். இந்நிகழ்ச்சியில் சேந்தமங்கலம் ஒன்றிய கழக செயலாளர் அசோக்குமார் மாவட்ட விளையாட்டு அலுவலர் கோகிலா உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



சிவகங்கை மாவட்டம் மானாமதுரையில் முதல்வரின் பொங்கல் பரிசு தொகையினை திருமதி தமிழரசி ரவிக்குமார் எம்..எல்.ஏ. வழங்கினார். உடன் மானாமதுரை மேற்கு ஒன்றியச் செயலாளர் எம்.அண்ணாதுரை மற்றும் கூட்டுறவுத்துறை அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

தமிழ்நாடு அரசு
நெடுஞ்சாலைத்துறை
நபார்டு மற்றும் கிராமச்சாலைகள் வட்டம், சேலம்-7
ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு
ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண். 24 / 2023–24 / முவஅ / நாள்: 05.01.2024
தமிழ்நாடு ஆளுநருக்காகவும், ஆளுநரின் சார்பாகவும் கண்காணிப்புப் பொறியாளர் (நெ), நபார்டு மற்றும் கிராமச்சாலைகள் வட்டம், **சேலம்** அவர்களால் RIDF XXIX - 2023-2024 ஊராட்சி ஒன்றிய மற்றும் ஊராட்சி சாலைகளை மாவட்ட இதர சாலைகளாக தரம் உயர்த்துதல் பணிகளின் கீழ், **சேலம்** (நெ), நபார்டு மற்றும் கிராமச்சாலைகள் கோட்டத்தைச் சார்ந்த **3 சாலைப்பணிகள்**, **தருமபுரி** (நெ), நபார்டு மற்றும் கிராமச்சாலைகள் கோட்டத்தைச் சார்ந்த **3 சாலைப்பணிகள்**, **ஈரோடு** (நெ), நபார்டு மற்றும் கிராமச்சாலைகள் கோட்டத்தைச் சார்ந்த **3 சாலைப்பணிகள் மற்றும் கோவை** (நெ), நபார்டு மற்றும் கிராமச்சாலைகள் கோட்டத்தைச் சார்ந்த **3 சாலைப்பணிகள்** ஆகிய பணிகளுக்கு இணையதள வழியில் மட்டுமே சதவீத ஒப்பந்தப்புள்ளிகள் **06.02.2024** அன்று **15.00 மணி** (இணையதள கடிகாரத்தின்படி) வரை வரவேற்கப்படுகிறது.
பணிகளின் விவரம், தோராய மதிப்பு, முன்வைப்புத் தொகை, ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் மற்றும் அனைத்து இதர விவரங்களை **http://tntenders.gov.in** என்ற அரசு இணையதளத்தில் **19.01.2024** முதல் தெரிந்துக் கொள்ளலாம். ஏதேனும் திருத்தங்கள் / மாறுதல்கள் இருப்பின் மேற்குறிப்பிட்ட அரசு இணையதளத்தில் மட்டுமே வெளியிடப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.
கண்காணிப்புப் பொறியாளர் (நெ), நபார்டு மற்றும் கிராமச்சாலைகள் வட்டம், சேலம்–7
செ.ம.தொ.இ / 152 / ஒப்பந்தப்புள்ளி / 2024
சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம் சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்

தமிழ்நாடு அரசு - நெடுஞ்சாலைத்துறை,
நபார்டு மற்றும் கிராமச் சாலைகள் வட்டம், செங்கல்பட்டு
ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு
ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண். 42 / 2023-2024/ முவதொஅ / நாள்.08.01.2024
தமிழ்நாடு ஆளுநருக்காகவும் அவர்களின் சார்பாகவும் கண்காணிப்புப் பொறியாளர்(நெ) நபார்டு மற்றும் கிராமச் சாலைகள், செங்கல்பட்டு வட்டம், அவர்களால் ஊராட்சி ஒன்றிய மற்றும் ஊராட்சி சாலைகளை இதர மாவட்ட சாலைகளாக தரம் உயர்த்துதல் **NABARD RIDF.XXIX – 2023-2024**-பணிகளின் கீழ் கடலூர்(நெ) நபார்டு மற்றும் கிராமச் சாலைகள் கோட்டத்திற்கான மூன்று தனிப்பணிகளுக்கும், வேலூர்(நெ) நபார்டு மற்றும் கிராமச் சாலைகள் கோட்டத்திற்கான மூன்று தனிப்பணிகளுக்கும் மற்றும் செங்கல்பட்டு(நெ) நபார்டு மற்றும் கிராமச் சாலைகள் கோட்டத்திற்கான ஒரு தனிப்பணிக்கும் இணையவழியில் மட்டுமே சதவீத ஒப்பந்தப்புள்ளிகள் 31.01.2024, 15.00 மணி வரை வரவேற்கப்படுகிறது.
பணிகளின் விவரம், தோராய மதிப்பு, முன்வைப்பு தொகை, ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் மற்றும் அனைத்து இதர விபரங்களை **https://tntenders.gov.in** என்ற அரசு இணையதளத்தில் **12.01.2024** முதல் தெரிந்துகொள்ளலாம். ஏதேனும் திருத்தங்கள் / மாறுதல்கள் இருப்பின் மேற்குறிப்பிட்ட அரசு இணையதளத்தில் மட்டுமே வெளியிடப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.
கண்காணிப்புப் பொறியாளர்(நெ) நபார்டு மற்றும் கிராமச் சாலைகள் வட்டம், செங்கல்பட்டு-1
செ.ம.தொ.இ./112/ஒப்பந்தப்புள்ளி/2024

தமிழ்நாடு அரசு - நெடுஞ்சாலைத்துறை
நபார்டு மற்றும் கிராமச் சாலைகள் வட்டம், செங்கல்பட்டு
ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு
ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண். 37 / 2023-2024/ முவதொஅ / நாள்.02.01.2024
தமிழ்நாடு ஆளுநருக்காகவும் அவர்களின் சார்பாகவும் **கண்காணிப்புப் பொறியாளர்(நெ) நபார்டு மற்றும் கிராமச் சாலைகள், செங்கல்பட்டு வட்டம்,** அவர்களால் **ஊராட்சி ஒன்றிய மற்றும் ஊராட்சி சாலைகளை இதர மாவட்ட சாலைகளாக தரம் உயர்த்துதல் NABARD RIDF.XXIX – 2023-2024- பணிகளின் கீழ் கடலூர்(நெ) நபார்டு மற்றும் கிராமச் சாலைகள்** கோட்டத்திற்கான **ஒரு தனிப்பணிக்கும் மற்றும் வேலூர்(நெ) நபார்டு மற்றும் கிராமச் சாலைகள்** கோட்டத்திற்கான **இரு** தனிப்பணிகளுக்கும் **இணையவழியில் மட்டுமே சதவீத** ஒப்பந்தப்புள்ளிகள் **31.01.2024, 15.00** மணி வரை வரவேற்கப்படுகிறது.
பணிகளின் விவரம், தோராய மதிப்பு, முன்வைப்பு தொகை, ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் மற்றும் அனைத்து இதர விபரங்களை **https://tntenders.gov.in** என்ற அரசு இணையதளத்தில் **12.01.2024 முதல்** தெரிந்துகொள்ளலாம். ஏதேனும் திருத்தங்கள் / மாறுதல்கள் இருப்பின் மேற்குறிப்பிட்ட அரசு இணையதளத்தில் மட்டுமே வெளியிடப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.
கண்காணிப்புப் பொறியாளர்(நெ) நபார்டு மற்றும் கிராமச் சாலைகள் வட்டம், செங்கல்பட்டு-1
செ.ம.தொ.இ./ 132 /ஒப்பந்தப்புள்ளி/2024

தமிழ்நாடு அரசு - நெடுஞ்சாலைத்துறை,
நபார்டு மற்றும் கிராமச் சாலைகள் வட்டம், செங்கல்பட்டு
ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு
ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண். 43 / 2023-2024/ முவதொஅ / நாள்.09.01.2024
தமிழ்நாடு ஆளுநருக்காகவும் அவர்களின் சார்பாகவும் கண்காணிப்புப் பொறியாளர்(நெ) நபார்டு மற்றும் கிராமச் சாலைகள், செங்கல்பட்டு வட்டம், அவர்களால் ஊராட்சி ஒன்றிய மற்றும் ஊராட்சி சாலைகளை இதர மாவட்ட சாலைகளாக தரம் உயர்த்துதல் **NABARD RIDF.XXIX – 2023-2024**-பணிகளின் கீழ் கடலூர்(நெ) நபார்டு மற்றும் கிராமச் சாலைகள் கோட்டத்திற்கான இரண்டு தனிப்பணிபணிகளுக்கும், வேலூர்(நெ) நபார்டு மற்றும் கிராமச் சாலைகள் கோட்டத்திற்கான இரண்டு தனிப்பணிகளுக்கும் மற்றும் செங்கல்பட்டு(நெ) நபார்டு மற்றும் கிராமச் சாலைகள் கோட்டத்திற்கான ஒரு தனிப்பணிக்கும் இணையவழியில் மட்டுமே சதவீத ஒப்பந்தப்புள்ளிகள் 31.01.2024, 15.00 மணி வரை வரவேற்கப்படுகிறது.
பணிகளின் விவரம், தோராய மதிப்பு, முன்வைப்பு தொகை, ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் மற்றும் அனைத்து இதர விபரங்களை **https://tntenders.gov.in** என்ற அரசு இணையதளத்தில் 12.01.2024 முதல் தெரிந்துகொள்ளலாம். ஏதேனும் திருத்தங்கள் / மாறுதல்கள் இருப்பின் மேற்குறிப்பிட்ட அரசு இணையதளத்தில் மட்டுமே வெளியிடப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.
கண்காணிப்புப் பொறியாளர்(நெ) நபார்டு மற்றும் கிராமச் சாலைகள் வட்டம், செங்கல்பட்டு-1
செ.ம.தொ.இ./113/ஒப்பந்தப்புள்ளி/2024



மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று (10.01.2024) சென்னை, தேனாம்பேட்டை, தமிழ்நாடு சுகாதார திட்ட அலுவலகத்தில் முதலமைச்சரின் விரிவான மருத்துவக்காப்பீட்டுத் திட்டம், 2024–25ஆம் ஆண்டிற்கான காப்பீட்டுத் தொகை ரூ.1228.27 கோடிக்கான காசோலையை யுனைடெட் இந்தியா காப்பீட்டு நிறுவனத்திற்கு வழங்கினார். இந்நிகழ்வில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் ககன்தீப் சிங் பேடி, தமிழ்நாடு சுகாதார திட்ட இயக்குநர் கோவிந்தராவ், மருத்துவம் மற்றும் ஊரகநலப்பணிகள் இயக்குநர் மரு.சண்முககனி, யுனைடெட் இந்தியா காப்பீட்டு நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் தலைவர் சத்யஜித் திரிபாதி, பொது மேலாளர் திருமதி.உஷாகிரிஷ், துணை பொது மேலாளர் திருமதி.பிரேமா முகிலன், தலைமை மேலாளர் தேவராஜ், இணை இயக்குநர் மரு.ரவிபாபு மற்றும் உயரலுவலர்கள் உடனிருந்தனர்.

## 4.25 லட்சம் பேர்களுக்கு பொங்கல் பரிசுத் தொகை!

சிவகங்கை, ஜன.11-

தமிழ்நாடு முதல்வர் அவர்கள் அனைத்து குடும்பங்களுக் கும் பொங்கல் பரிசுத் தொகையாக ஒரு கிலோ பச்சரிசி முழு கரும்பு, சர்க்கரை ரூபாய் 1000ரொக்கப் பணம் வழங்க உத்தரவிட்டார். அதற்கான பொங்கல்பரிசு தொகை நேற்று பத்தாம் தேதி முதல் தமிழகத்தில் அனைத்து மாவட்டங்களிலும் வழங்கப்பட்டு வருகிறது. இதில் சிவகங்கை மாவட்டத்தில் 4லட்சத்து 16 ஆயிரத்து 569 குடும்ப அட்டைதாரர்களுக்கு பொங்கல் பரிசுத் தொகை வழங்கப் பட உள்ளது. நேற்று முதல் நாள் பத்தாம் தேதி பொங்கல் பரிசுத் தொகை வழங்கும் நிகழ்ச்சி காஞ்சிரங்கால் நியாய விலை கடையில் மாவட்ட ஆட்சியர் திருமதி ஆஷா அஜித் பயனளிகளுக்கு வழங்கினார்.





தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களால் தொடங்கப்பட்ட "மக்களுடன் முதல்வர் என்ற சிறப்பு திட்ட முகாம், பெருநகர சென்னை மாநகராட்சி, நுங்கம்பாக்கம் 110 வார்டுக்குட்பட்ட ராஜாஜி தெரு, பள்ளிசாலையில் அமைந்துள்ள, அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்றது. இந்த முகாமினை மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், சென்னை மேற்கு மாவட்ட கழகச் செயலாளர் நே.சிற்றரசு ஆகியோர் நேரில் சென்று பார்வையிட்டு அரசு அலுவலர்கள் மற்றும் பொதுமக்களுடன் கலந்துரையாடினார்கள்.

### தமிழர் திருநாளாம் தைத் திருநாளை முன்னிட்டு

# திருவண்ணாமலையில் பொங்கல் பரிசுத் தொகுப்பு!

### சட்டப்பேரவைத் துணைத் தலைவர் கு.பிச்சாண்டி வழங்கினார்! எ.வ.வே.கம்பன் பங்கேற்பு!

திருவண்ணாமலை, ஜன.11-

பொங்கல் பரிசு தொகுப்பைத் தமிழ்நாடு சட்டப்பேரவை துணைத்தலைவர் கு.பிச்சாண்டி வழங்கி தொடங்கி வைத்தார்.

தமிழர் திருநாளாம் தை திருநாளை முன்னிட்டு, பொதுமக்கள் சிறப்பாக கொண்டாடும் வகையில் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பொங்கல் பரிசுத் தொகுப்பு வழங்குவதை தொடங்கி வைத்ததை தொடர்ந்து, திருவண்ணாமலை நகராட்சி, காந்தி நகர் பைபாஸ் சாலையில், துராபலித் தெருவில் தமிழ்நாடு சட்டப்பேரவைத் துணைத்தலைவர் கு.பிச்சாண்டி, பொங்கல் பரிசு தொகுப்பை வழங்கி தொடங்கி வைத்தார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் பா.முருகேஷ், மாநில தடகள சங்க துணைத்தலைவர் மரு. எ.வ.வே.கம்பன் கலந்து கொண்டனர்.

திருவண்ணாமலை மாவட்டத்தில் மொத்தம் 182 கூட்டுறவு நிறுவனம் நடத்தும் ஆயிரத்து 616 கூட்டுறவு நியாய விலை கடைகளும், தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகத்தால் நடத்தப்படும் 03 நியாய விலை கடைகளும், மகளிரால் நடத்தப்படும் 08 நியாய விலை கடைகள் என மொத்தம் ஆயிரத்து 627 நியாய விலை கடைகள் உள்ளது.

2024 பொங்கல் பரிசுத் தொகுப்பு பெற தகுதி வாய்ந்த அரிசி குடும்ப அட்டைதாரர்களாக கூட்டுறவு துறையின் கீழ் உள்ள கடைகளில் 7 இலட்சத்து 73 ஆயிரத்து 60 குடும்ப அட்டைதாரர்களும், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தால் நடத்தப்படும் கடைகளில் 3 ஆயிரத்து 340 குடும்ப அட்டைகளும், மகளிரால் நடத்தப்படும் கடைகளில் 4 ஆயிரத்து 707 குடும்ப அட்டைதாரர்களும் மற்றும் ஆயிரத்து 112 இலங்கை தமிழர் மறுவாழ்வு முகாம்களில் வசிக்கும் குடும்பங்களுக்கும் ஆக மொத்தம் 7 இலட்சத்து 82 ஆயிரத்து 747 குடும்பங்களுக்கு ரூ. 78 கோடியே 22 இலட்சத்து 19 ஆயிரத்தில் மட்டும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அளித்துள்ள ரூ. ஆயிரம் ரொக்கத்துடன் ஒரு கிலோ பச்சரிசி, ஒரு கிலோ சர்க்கரை, ஒரு முழுக்கரும்பு மற்றும் இலவச வேட்டிச் சேலைகள் வழங்கித் துவக்கி வைத்தார்கள்.

குடும்ப அட்டைதாரர்கள் அனைவருக்கும் டோக்கன்கள் தெரு வாரியாக வீடு தோறும் சென்று நியாய விலைக் கடை பணியாளர்கள் மூலம் நாள் மற்றும் நேரம் குறிப்பிட்டு வழங்கப்பட்டது. இதனை தொடர்ந்து இன்று திருவண்ணாமலை மாவட்டத்தில் பொங்கல் பரிசுத் தொகுப்பு வழங்குதல் தொடங்கப்பட்டது.

இந்நிகழ்வில் மாவட்ட வருவாய் அலுவலர் மரு. மு.பிரியதர்ஷினி, இணைப் பதிவாளர் கோ.நடராஜன், துணைபதிவாளர் பொது விநியோக திட்டம் ப.ராஜசேகரன், துணைப்பதிவாளர் (பொறுப்பு) திருமதி. சித்ரா, வருவாய் கோட்டாட்சியர் திருமதி. மந்தாகினி, திருவண்ணாமலை ஒன்றியக் குழு துணைத்தலைவர் ரமணன், நகர மன்றத் துணை தலைவர் ராஜாங்கம், அரசு அலுவலர்கள் மற்றும் உள்ளாட்சிப் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

### மக்களுக்கு எந்தச் சிரமமின்றி

# அனைத்துத் தடங்களிலும் பேருந்துகள் இயக்கம்!

### அரசு போக்குவரத்துக் கழகம் அறிவிப்பு!

சென்னை, ஜன. 11 -

பொதுமக்களுக்கு எந்த வித சிரமமும் ஏற்படாத வகையில் தமிழ்நாட்டில் உள்ள அனைத்து போக்குவரத்து கழக பணிமனைகளில் இருந்தும் பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன.

காலிப்பணியிடங்களை நிரப்ப வேண்டும், புதிய ஓய்வூதிய திட்டத்தை கைவிட வேண்டும் என்பவை உள்பட 6 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி அரசு போக்குவரத்து கழக தொழிற்சங்கங்கள் வேலைநிறுத்த நோட்டீஸ் அளித்தன. இதையடுத்து தொழிற்சங்கத்தினருடன் தமிழ்நாடு அரசு தொடர்ச்சியாக நடத்திய பேச்சுவார்த்தையில் 4 கோரிக்கைகளை நிறைவேற்றுவதாக அரசு உறுதி அளித்தது. பொங்கலுக்கு பின்னர் மீண்டும் பேச்சுவார்த்தை நடத்துவது என்றும் முடிவு செய்யப்பட்டது. ஆனால் அ.தி.மு.க. உள்ளிட்ட சில தொழிற்சங்கங்கள் அரசியல் செய்து வேலை நிறுத்தம் மேற்கொண்டுள்ளனர். ஆனால் இந்த வேலை நிறுத்தப்போராட்டத்திற்கு தொ.மு.ச. உள்ளிட்ட தொழிற்சங்கங்கள் ஆதரவு அளிக்கவில்லை. தொ.மு.ச உள்ளிட்ட பல்வேறு தொழிற்சங்கத்தினர் தொடர்ந்து பேருந்துகளை இயக்கி வருகின்றனர். அரசு விரைவு போக்குவரத்துக்கழகம், சென்னை மாநகர போக்குவரத்துக்கழகம், விழுப்புரம், கும்பகோணம், சேலம், கோவை, மதுரை, திருநெல்வேலி ஆகிய கோட்டங்களில் இருந்து முழு அளவில் பேருந்துகள் இயக்கப்படுகின்றன. இதனால் பொதுமக்கள் எந்த வித சிரமமின்றி பயணம் மேற்கொண்டனர். பேருந்துகளை இயக்க நடவடிக்கை எடுத்த தமிழ்நாடு அரசுக்கு அவர்கள் நன்றி தெரிவித்தனர்.

சென்னையை பொறுத்த வரை சென்னை மத்திய பணிமனை, தியாகராயநகர், சைதாப்பேட்டை, அடையாறு, திருவான்மியூர், ஆலந்தூர், அண்ணாநகர், பெரம்பூர் உள்ளிட்ட அனைத்து பணிமனைகளில் இருந்தும் முழு அளவில் பேருந்துகள் இயக்கப்படுகின்றன. சென்னையின் புறநகர் பகுதிகளான ஆவடி, அம்பத்தூர், தாம்பரம், குரோம்பேட்டை, கிளாம்பாக்கம் பணிமனைகளில் இருந்து முழு அளவில் பேருந்துகள் இயக்கப்படுகின்றன. இதனால் பொதுமக்கள் எந்த ஒரு சிரமமின்றி பயணம் மேற் கொண்டு வருகின்றனர்.

### ஏ.எம்.வி.பிரபாகரராஜா எம்.எல்.ஏ. தலைமை! கே.கண்ணன் - மு.ராசா முன்னிலை!

# விருகம்பாக்கம் தொகுதியில் 2700 நபர்களுக்கு பொங்கல் தொகுப்பு!

### அமைச்சர் மா.சுப்பிரமணியன் வழங்குகிறார்!

சென்னை, ஜன. 11

சென்னை தெற்கு மாவட்டம், விருகம்பாக்கம் சட்டமன்றத் தொகுதி, 136 வது வார்டுக்கு உட்பட்ட, கன்னிகாபுரம், சிவலிங்கபுரம் பகுதியில் உள்ள பொதுமக்களுக்கு இன்று (11.1.2024 வியாழக்கிழமை) மாலை 5 மணி அளவில், சிவன் பூங்கா அருகில், 2700 நபர்களுக்கு பொங்கல் தொகுப்பு வழங்கும் நிகழ்ச்சி சட்டமன்ற உறுப்பினர், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஏ.எம்.வி.பிரபாகரராஜா தலைமையில் நடைபெறுகிறது.

இந்நிகழ்ச்சியில் சென்னை தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர், அமைச்சர் மா.சுப்பிரமணியன் கலந்து கொண்டு நல உதவிகளை வழங்குகிறார்.

இந்நிகழ்ச்சியில் மாநில வர்த்தக அணிச் செயலாளர் காசி முத்துமாணிக்கம், பகுதிக் கழகச் செயலாளர், மாமன்ற உறுப்பினர் கே.கண்ணன், மு.ராசா, மாமன்ற உறுப்பினர் நிளவரசி துரைராஜ், தலைமை பொதுக்குழு உறுப்பினர் உ.துரைராஜ், எஸ்.டி.தங்கராஜ், பி.எஸ்.முருகேசன், மாவட்ட துணை செயலாளர் வாசுகி பாண்டியன், வட்டக் கழகச் செயலாளர்கள் இரா.சொழியன், பூக்கடை பழனிச்சாமி, பொன்.வர.லோகு, பி.கே.குமார், அ.கதிரேசன், கி.சதீஷ்கண்ணன், அன்பழகன், சோ.சொந்தில் குமார், எஸ்.மைக்கில், வீ.ஏ. ராஜா, மு.கோவிந்தராஜ், பழக்கடை பாஸ்கரன், தஞ்சை பாபு, மாவட்ட அமைப்பாளர் சசிகுமார், கனிமொழி, நிஷா, மாவட்ட துணை அமைப்பாளர்கள் எம். விநாயகமூர்த்தி, சங்கர்கனேஷ், கிருஷ்ணாகுமார், எழில் பாண்டியன், ராமபுரம் ரவி, தியாகராஜன், கோட்டூர் பிரகாஷ் உள்ளிட்ட கழகத்தினர் கலந்து கொள்கின்றனர்.

# கோடநாடு வழக்கு: சயானிடம் சி.பி.சி.ஐ.டி. போலீசார் இன்று விசாரணை!

கோவை,ஜன. 11 -

நீலகிரி மாவட்டம் கோத்தகிரி அருகே உள்ள கோடநாட்டில் முன்னாள் முதல்அமைச்சர் ஜெயலலிதாவிற்குச் சொந்தமான பங்களா உள்ளது. இந்த பங்களாவிற்குள் கடந்த 2017ம் ஆண்டு புகுந்த மர்ம நபர்கள் கொள்ளை சம்பவத்தில் ஈடுபட்டனர். இதில் அங்கு பணியில் இருந்த காவலாளி ஓம்பகதூர் கொலை செய்யப்பட்டார்.

இந்த சம்பவத்தை தொடர்ந்து போலீசார் வழக்குப்பதிவு செய்து இது தொடர்பாக 11 பேரை கைது செய்தனர். இது குறித்த வழக்கு ஊட்டி கோர்ட்டில் நடைபெற்று வருகிறது. இந்த வழக்கில் தொடர்புடைய கார் டிரைவர் கனகராஜ் விபத்தில் பலியானார். இதையடுத்து கோடநாடு வழக்கு சி.பி.சி.ஐ.டி. போலீசுக்கு மாற்றப்பட்டது. சி.பி.சி.ஐ.டி. போலீசார் இந்த வழக்கில் பலரை கோவை போலீஸ் பயிற்சி பள்ளி மைதானத்தில் உள்ள அலுவலகத்திற்கு வரவழைத்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

இந்த நிலையில், கோடநாடு கொலை, கொள்ளை வழக்கில் முதல் குற்றவாளியாக சேர்க்கப்பட்டுள்ள சயானிடம் சி.பி.சி.ஐ.டி. போலீசார் இன்று (வியாழக்கிழமை) மீண்டும் விசாரணை நடத்த உள்ளனர். ஜாமீனில் உள்ள சயானுக்கு, இந்த விசாரணைக்கான சம்மன் கடந்த 5ம் தேதி அனுப்பப்பட்டது. அதன்படி, இன்று கோவை சி.பி.சி.ஐ.டி. அலுவலகத்தில் காலை 10 மணிக்கு சயான் ஆஜராக உள்ளார்.

கோடநாடு வழக்கில் குற்றவாளிகளாக சேர்க்கப்பட்டுள்ள பிஜின்குட்டி, தீபு, ஜம்சீர் அலி ஆகியோரின் செல்போன் தகவல் பரிமாற்ற விவரங்கள் ஏற்கனவே மீட்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது

### இரா.லட்சுமணன் தலைமை ! ஜே.ஜே.எபினேசர் முன்னிலை !

# ஆர்.கே.நகர் கிழக்கு பகுதி சார்பில் பொங்கல் விழா! கழக நிர்வாகிகளுக்கு புத்தாடைகள்!

### அமைச்சர் பி.கே.சேகர்பாபு , தா.இளையஅருணா, கலாநிதி வீராசாமி வழங்குகின்றனர் !

சென்னை ஜன:11

ஆர்.கே.நகர் கிழக்கு பகுதி தி.மு.க. சார்பில் பொங்கல் விழா மற்றும் கழக நிர்வாகிகளுக்கு புத்தாடை வழங்கும் நிகழ்ச்சி நாளை மறுதினம் (13.01.2024 சனிக்கிழமை) காலை 10.மணியளவில் தண்டையார்பேட்டை அப்பலோ அருகில் நடைபெறுகிறது. ஆர்.கே.நகர் கிழக்கு பகுதி செயலாளர் இரா.லட்சுமணன் தலைமை வகிக்கிறார்.

என்.அனிபா,கே.பாலு, எம்.வேதலட்சுமி, கே.பி. சதிஷ்குமார், மா.நாகராஜன், என்.எம்.கதிரேசன், தா.வ.மு.கஜேந்திரன், நா. கோதண்டன், ப.குமார், ச.தமிழ்ச்செல்வன், பொ.து.ராஜா, வீ.வடிவேல், எம்.எம்.சாமி, பி. கே.மூர்த்தி, ஆர்.ரமேஷ், ஜெ.சுரேஷ்பாபு, பி.அன்பழகன், வி.முத்து, கே. மோகன், டி.ஆர்.தணிகாசலம், எம்.ரூபசங்கர், சா. திருப்பதிசாமி, ஆகியோர் வரவேற்புரையாற்றுகின்றனர்

ஆர்.கே.நகர் சட்டமன்ற உறுப்பினர் ஜே. ஜே.எபினேசர் முன்னிலை வகிக்கிறார்.

இந்நிகழ்ச்சியில் இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை மற்றும் சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத் தலைவர் பி.கே.சேகர்பாபு, மாவட்டச் செயலாளர் தா.இளையஅருணா, டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி, ஆகியோர் கழக நிர்வாகிகளுக்குபுத்தாடைகள் வழங்குகிறார்கள்.

இதில் நந்தனம் நம்பிராஜன், எஸ்.ஜெபதாஸ் பாண்டியன்,இரா.மதிவாணன், இரா.வெற்றிவீரன், ஏ.டி.மணி, நேதாஜி யு.கணேசன் எம்.சி, என். மருதுகணேஷ், டி.வி.முத்துகிருஷ்ணன், த.தமிழ் கொடி, கு.நற்குணம், வெ.சு.சத்தியநாராயணன்,சி.மணிகண்டன், எ. ரமேஷ்பாபு, இர.பொன் இளவரசன், எஸ். கே.இளங்கோ, கோ.ஹரிராமன், பா.கோதண்டன், இரா.ஆறுமுகம், ப.ஆ.சண்முகம், வானூர்.கே.ராஜி, ஜெ.பிரேம்ஆனந்த், எஸ். பி.எஸ்.புத்தன், ஜே.ஜே. நெல்சன், ஜெய்(எ)ராமு, எஸ்.எம்.டி.ரவிச்சந்திரன், எம்.கிறிஸ்டிராஜ், கே.முத்தமிழ்செல்வன், இரா. மகேந்திரன், டி.லெனின், வி.அன்பு, ஆர்.ராஜா,டி. கணேசன், கே.வாசு, ஆர். ஜெயகுமார், எஸ்.தேவன், என்.பிரேமதாசன், ஆ. பாபு, தே.ஜனார்தனன், சி.கார்த்திக், ஆர்.மூர்த்தி, எஸ்.செந்தில்சாமி, டி. சுரேஷ்குமார், எம்.விஜயகுமார், டி.கண்ணன், பி. தமிழ்செல்வன், வி.அருள், ஜெ.வசந்த், சி.சிவகுமார், பி.செல்வராஜ், மல்லாசரவணன், ஜெ.மகேஷ்வரி, எம்.கலைவாணி, பாம்பே லட்சுமி, எம்.ஷீலாமோகன், குமாரி நாகராஜ் எம். சி, தேவி கதிரேசன் எம்.சி, பவித்ரா நரேஷ்குமார் எம்.சி, எரிமலை பி.எல். பாலு, சா.சம்பத், கே. கோதண்டன், ப.நரேஷ்குமார், வண்ணைமோகன், வி.வி. ரமேஷ், எ.வெங்கடேஷ், எஸ்.சேகர், எஸ்.அரிஷ்குமார், இ.கார்த்திக், ஜே. ஜே.பிராங்க்ளின், கே.சதிஷ், ஜி.ராஜேஸ்வரி, வெ.சு.பிரபாகரன், கெ. பொம்முராஜ், பி.எஸ்.எஸ். தனுஷ்கோடி, டி. ஜெயசேகர், டி.ராஜ் குமார், ஜெபஸ்டீன், எம்.யாசர்அராபத், ஆ.விந்தன், தெ.கிருஷ்ணமூர்த்தி, சு.நிவேதா,டி.ஏம்ராஜ், க.கோபால், இ. வெங்கடேசன், ஆர். வேலுச்சாமி, என்.யூகநாதன், தெ.சீனிவாசன், ஆர். சந்தோஷ், கே.விஜயகுமாரி, கே.பத்மா,கே.பேபி, ஆர். விக்டோரியா, எம். சைனீஸ் அரி உள்ளிட்டோர் கலந்து கொள்கின்றனர்.

பகுதி துணைச்செயலாளர் ஆர்.டி.ராஜா நன்றி கூறுகிறார்.



விழுப்புரம் சட்டமன்ற உறுப்பினரும், மாநில மருத்துவர் அணி இணை செயலாளருமான டாக்டர் இரா.இலட்சுமணன் விழுப்புரம் நகரம், 14 வது வார்டு, அய்யனார்குளம் தெற்கு தெரு, நியாயவிலை கடை எண் 20ல் (1000 ரூபாய் ரொக்கம், அரிசி, சக்கரை, கரும்பு) ஆகிய பொங்கல் தொகுப்பினை பொதுமக்களுக்கு வழங்கி துவக்கி வைத்தார். உடன் மாவட்ட பொருளாளர் இரா.ஜனகராஜ், செ.புஷ்பராஜ், ர் பரமேஸ்வரி, காஜா ஷாகுல் அமீது, பிரியதர்ஷினி, க்கரை, தமிழ்ச்செல்வி பிரபு, சித்திக் அலி, பஞ்சநாதன், எஸ்.ஆர்.எம்.யு. பழனிவேல், ரகு, ஏ.சி.குமார், ஹரி, நாகராஜ், அசாருதீன், முகமது பாரத், பாலு, முகமது அலி, தாஹீர், ரவி, டி.ஆர்.ரவி, புருஷோத்தமன், புல்லட் மணி, பாஸ்கர், பிரபு தேவா, சூரியமூர்த்தி, ஓம் லக்கி, தாஸ் , கோவிந்தராஜ் மற்றும் மாவட்ட, நகர கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

### கலாநிதி வீராசாமி எம்.பி - ஜே.ஜே.எபினேசர் எம்.எல்.ஏ. ஏற்பாட்டில்

# ஆர்.கே.நகர் - 43 வது வார்டில் நல உதவிகள்!

### தா.இளையஅருணா - இரா.லட்சுமணன் - எஸ்.ஜெபதாஸ்பாண்டியன் பங்கேற்பு!

சென்னை, ஜன. 11 -

சென்னை வடக்கு மாவட்டம் ஆர்.கே.நகர் 43வது வார்டில் வட சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீராசாமி மற்றும் ஆர்.கே.நகர் சட்டமன்ற உறுப்பினர் ஜே.ஜே.எபினேசர் ஆகியோர் ஏற்பாட்டில் சிங்காரவேலர் நகர், எம்.ஜி.ஆர்.நகர் பகுதியை சார்ந்த சுமார் 2000 நபர்களுக்கு நல உதவிகள் வழங்கப்பட்டது.

சென்னை வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் தா.இளைய அருணா, பகுதிக் கழகச் செயலாளர்கள் இரா.லட்சுமணன், எஸ்.ஜெபதாஸ்பாண்டியன் ஆகியோர் பங்கேற்று சிறப்பித்தனர்.

மேலும் மண்டலக் குழுத் தலைவர் நேதாஜி யு.கணேசன், மாமன்ற உறுப்பினர் நரேஷ்குமார், என்.மருதுகணேஷ், என். அனிபா, ஆர்.டி.ராஜா, கே.பாலு, எம்.வேதலட்சுமி, கே.பி.சதீஷ்குமார், சு.சத்தியநாராயணன், தா.வ.மு.கஜேந்திரன், எம். நாகராஜ், மா.குமார், எஸ். தமிழ்ச்செல்வன், ஜி.ஏழுமலை, ராம் சசிகுமார் மற்றும் மாவட்ட பிரதிநிதிகள், அனைத்து அணிகளின் மாவட்ட, பகுதி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கழக நிர்வாகிகள் பொது மக்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

### மதுரவாயல் வடக்குப் பகுதி

# 147 வது வட்டக் கழக பொது உறுப்பினர்கள் கூட்டம்!

### வட்டச் செயலாளர் மேட்டுக்குப்பம் லயன் எஸ்.ஜி.மாதவன் அறிக்கை!

சென்னை. ஜன. 11 -

மதுரவாயல் வடக்குப் பகுதி, 147 வது வட்டக் கழகச் செயலாளர், மேனாள் மாமன்ற உறுப்பினர் மேட்டுக்குப்பம் லயன் எஸ். ஜி.மாதவன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

சென்னை தெற்கு மாவட்டம், மதுரவாயல் வடக்கு பகுதி, 147 வது வட்டக் கழகப் பொது உறுப்பினர்கள் கூட்டம் இன்று (11.1.2024 வியாழக்கிழமை) மாலை 5.30 மணிக்கு, ஆலப்பாக்கம், கங்கையம்மன் கோவில் தெரு, மாமன்ற உறுப்பினர் அலுவலகம் அருகில் நடைபெறுகிறது.

எனவே வட்டத்திற்குட்பட்ட மாவட்ட, பகுதி, வட்டக் கழக நிர்வாகிகள், அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், கழக நிர்வாகிகள், கழகத் தோழர்கள், கழக முன்னோடிகள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

பொருள்:

தமிழர் திருநாள் பொங்கல் விழா முன்னிட்டு நிகழ்ச்சிகள் குறித்தும் மற்றும் கழக ஆக்கப் பணிகள்.

இவ்வாறு மேனாள் மாமன்ற உறுப்பினர், 147 வது வட்டக் கழகச் செயலாளர் மேட்டுக்குப்பம் லயன் எஸ்.ஜி.மாதவன் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



இராயபுரம் தொகுதி 49 வது வார்டு, ஆறுமுக நாடார் பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் தமிழ்நாடு அரசின் விலையில்லா மிதிவண்டிகள் வழங்கும் நிகழ்ச்சியில் இராயபுரம் சட்டமன்ற உறுப்பினர் ஐட்ரீம் இரா.மூர்த்தி கலந்துகொண்டு 11ஆம் வகுப்பு படிக்கும் 269 மாணவிகளுக்கு விலையில்லா மிதிவண்டிகள் வழங்கினார். இந்நிகழ்வில் பள்ளி தலைவர், செயலாளர், தலைமை ஆசிரியர், ஆசிரியர்கள், வட்ட செயலாளர் காட்டன் சதீஷ் குமார், மாவட்ட பகுதி வட்ட கழக நிர்வாகிகள், அணிகளின் நிர்வாகிகள், 10, 11 ஆம் வகுப்பு மற்றும் 12ஆம் வகுப்பு மாணவிகள் இருந்தனர்.





கடலால் பிரிக்கப்பட்டுள்ள
தமிழ் சொந்தங்களை
தமிழால் இணைக்கும் விழா !

அயலகத் தமிழர் தினம்-2024

நாள் : 11.01.2024 நேரம் : காலை 09.30 முதல் இரவு 8.00 மணி வரை
இடம் : சென்னை வர்த்தக மையம், நந்தம்பாக்கம், சென்னை.

வரவேற்புரை :
திரு. கார்த்திகேய சிவசேனாபதி
தலைவர், அயலகத் தமிழர் நல வாரியம்

முன்னிலை
திரு. செஞ்சி கே.எஸ்.மஸ்தான்
மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும்
வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர்

விழாவைத் தொடக்கி வைத்து பேருரை
திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள்
மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும்
விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர்

சிறப்பு விருந்தினர்
திரு. தங்கம் தென்னரசு
மாண்புமிகு நிதி,மனிதவள மேலாண்மை மற்றும் தொல்லியல் துறைஅமைச்சர்

முனைவர் பழனிவேல் தியாகராஜன்
மாண்புமிகு தகவல் தொழில் நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர்

முனைவர் டி.ஆர்.பி.ராஜா
மாண்புமிகு தொழில்துறை அமைச்சர்

திரு. கவிப்பேரரசு வைரமுத்து

திரு. கலாநிதி வீராசாமி
நாடாளுமன்ற உறுப்பினர்

அனைவரையும் அன்புடன் வரவேற்கும்.

R.விஜயகுமார் B.A.,B.L.,
செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர்
செஞ்சி ஒன்றிய செயலாளர் (கி) , தலைமை செயற்குழு உறுப்பினர்

L.P.நெடுஞ்செழியன் B.A.,B.L.,
மேல்மலையனூர் ஒன்றிய செயலாளர் (கி)
தலைமை செயற்குழு உறுப்பினர்

K.S.M.மொக்தியார் அலி மஸ்தான் B.Tech.,IT.LLB.,
தலைவர் - செஞ்சி பேரூராட்சி, விழுப்புரம் மாவட்டம்.

JN ADS 9790242624 digital printing-Gingee



# இடம் பொருள் கலைஞர் 52

**பல்வேறு துறைகளில் தொலைநோக்குப் பார்வையுடன், முத்தமிழறிஞர் கலைஞர் செயல்படுத்திய திட்டங்கள், உருவாக்கிய கட்டமைப்புகள் குறித்து இந்தப் பகுதியில் பார்த்து வருகிறோம். இந்த வாரம் மதுரை உயர்நீதிமன்றக் கிளை.**



## மதுரை உயர்நீதிமன்றக் கிளை

### தமிழ்நாட்டு நீதித்துறையில் ஒரு மைல்கல்!

தமிழ்நாட்டில் உள்ள நகரங்களில், மதுரைக்கு என்றும் தனிச் சிறப்பு உண்டு. மூன்றாம் தமிழ்ச் சங்கம் அமைத்து, முத்தமிழ் வளர்த்த இந்த மதுரைதான, தீர விசாரிக்காமல் 'கண்ணால் கண்டதே உண்மை, காதால் கேட்டதே நியாயம்' என்று நம்பி கோவலனுக்குத் தண்டனை கொடுத்த பாண்டிய மன்னனை, அவனது சிம்மாசனத்திலிருந்து கீழே தள்ளியது.

சிலப்பதிகாரம் சொல்லும் அந்தச் செய்தியில் மறைபொருளாக உள்ள இன்னொரு விஷயம்... அன்றெல்லாம், சாமானியர்களும் தங்களுக்கான நீதியை வேண்டி அரண்மனைகளை எளிதாக அணுக முடிந்தது என்பது..! ஆனால், இன்று ஒருவர் தனது வழக்கை உச்ச நீதிமன்றம் கொண்டு செல்ல வேண்டும் என்றால், அதற்காக அவர் கொடுக்க வேண்டிய விலை அதிகம். பொருள் செலவு, நேர செலவு, மொழி தெரியாத ஊரில் ஏற்படும் அலைச்சல் எனப் பல தடைகளைத் தாண்டி வர வேண்டிய சூழல் உள்ளது.

அதனால்தான் இன்று பல மாநிலங்களில், உச்ச நீதிமன்றக் கிளைகள் அமைக்கப்பட வேண்டும் என்ற குரல்கள் எழத் தொடங்கியுள்ளன. உச்ச நீதிமன்றத்தின் கிளைகள் பற்றி இன்றுதான் பலர் பேசுகிறார்கள். ஆனால், 1970 களிலேயே, உயர் நீதிமன்றத்துக்கே கிளைகள் அமைக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தியது திராவிட முன்னேற்றக் கழக அரசு. அதன் பலனாக நமக்குக் கிடைத்ததே மதுரை உயர் நீதிமன்றக் கிளை.

### அண்ணல்... அடிக்கல்...!

தமிழ்நாட்டுக்கும் புதுச்சேரிக்கும் சேர்த்து நீதிபரிபாலனம் செய்து வருகிறது சென்னை உயர் நீதிமன்றம். சென்னையில் உயர் நீதிமன்றம் அமைந்திருப்பதால் கடைக்கோடி மாவட்டங்களான கன்னியாகுமரி, நெல்லை, தூத்துக்குடி, விருதுநகர், இராமநாதபுரம், சிவகங்கை, மதுரை, திண்டுக்கல் உள்ளிட்ட தென் மாவட்டங்களைச் சார்ந்த மக்கள், உயர் நீதிமன்றத்தை அணுக வேண்டும் என்றால் வெகுதூரம் பயணிக்க வேண்டியுள்ளது. இதனால் நேர விரயமும், பொருளாதார விரயமும் ஏற்பட்டு, தங்கள் வழக்குகளை நடத்துவதில் பல இன்னல்களைச் சந்தித்து வந்தனர், தென் மாவட்ட மக்கள்.



இந்த நிலையில், நீதியை அணுகுவதில் தென்மாவட்ட மக்களுக்கு உள்ள இடர்ப்பாடுகளை உணர்ந்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், அவர்களின் எண்ணங்களை எதிரொலிக்கும் வண்ணம், சென்னை உயர் நீதிமன்றத்தின் கிளையை மதுரையில் நிறுவ வேண்டும் என்று 1972 ஆம் ஆண்டு முதல் பலமுறை தொடர்ந்து குரல் கொடுத்து வந்தார். அந்தத் தொடர் வலியுறுத்தல்கள் காரணமாக, தென் தமிழ்நாட்டு மக்களின் கோரிக்கை ஏற்கப்பட்டு மதுரையில் உயர் நீதிமன்றக் கிளையை நிறுவுவதற்கான ஒன்றிய அரசின் ஒப்புதல், 1996 ஆம் ஆண்டில் கிடைத்தது.

அதைத் தொடர்ந்து, மதுரை அருகே 1997-1998 ஆம் ஆண்டில் உயர் நீதிமன்றக் கிளை அமைக்க, உலகனேரியில் நிலம் கையகப்படுத்தும் பணிக்காக 2 கோடியே 58 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு நிலம் கையகப்படுத்தும் பணி நடைபெற்று முடிவடைந்தது.

அடுத்த கட்டமாக, 2000-2001 நிதிநிலை அறிக்கையில், "கடந்த பல ஆண்டுகளாக மதுரை மாநகரில் சென்னை உயர் நீதிமன்றக் கிளை ஒன்றை அமைக்க, நாம் எடுத்த முயற்சி கனிந்துள்ளது. தமிழக நீதி பரிபாலன வரலாற்றில் ஒரு மைல் கல்லாகத் திகழும். இதற்கான நிலம் கையகப்படுத்தப்பட்டுப் புதிய நீதிமன்றக் கட்டடங்களுக்கு அடிக்கல் நாட்டு விழா, வரும் ஏப்ரல் திங்கள் 13 ஆம் நாளன்று நடைபெற உள்ளது. இதன் வாயிலாக, தென்மாவட்ட மக்கள் நீதியைப் பெறுவது எளிமையாக்கப்படுகிறது" என்று முத்தமிழறிஞர் கலைஞர் குறிப்பிட்டார்.

தான் ஆட்சியில் இருக்கும் போதெல்லாம், அண்ணல் அம்பேத்கரின் நினைவாக ஏதேனும் ஒரு திட்டத்தையோ, முன்னெடுப்பையோ மேற் கொள்வது கலைஞரது வழக்கம். அப்படியேதான் அண்ணலின் பிறந்த நாளையொட்டி ஒரு நாளுக்கு முன்னதாக மதுரை உயர் நீதிமன்றக் கிளைக்கு அடிக்கல் நாட்டு விழா நடைபெற்றது.

### தலைமை நீதிபதியின் பொருத்தம்!

அடிக்கல் நாட்டு விழாவில், கலைஞரின் தலைமையில், அன்றைய உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதி டாக்டர் ஏ.எஸ்.ஆனந்த் அடிக்கல் நாட்டினார். பிறகு தனது உரையின் போது முத்தமிழறிஞர் அவர்கள், "இந்த உயர்நீதிமன்றக் கிளைக் கட்டடத்திற்காக நீதியரசர் திரு.ஆனந்த் அவர்கள் அடிக்கல் நாட்டுவது முற்றிலும் பொருத்த முடையதாகும். ஏனெனில், அவர் சென்னை உயர் நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியாகப் பணியாற்றிய காலத்தில்தான் இந்தக் கிளை அமைவதற்கான திட்டம் ஒரு உறுதியான வடிவத்தைப் பெற்றது.

நீதியரசர் டாக்டர் ஆனந்த் அவர்கள் நமது மாநிலத்தில் தலைமை நீதிபதியாகப் பணிபுரிந்த காரணத்தால் தமிழக மக்களின் மீது அவர் பேரன்பும், பற்றும் கொண்டுள்ளவர் என்பதை நான் அறிவேன்" என்று குறிப்பிட்டார்.

மேலும் அவர் பேசும்போது, "அஸ்ஸாம், மராட்டியம் மற்றும் மத்திய பிரதேசம் ஆகிய இடங்களில் உள்ள உயர் நீதிமன்றங்களுக்கு இரண்டு அல்லது இரண்டிற்கு மேற்பட்ட கிளைகள் உள்ளன என்பதை நான் அறிகிறேன். உயர் நீதிமன்றத்தை அணுகும் மக்கள் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதன் காரணமாக, அதற்கு உதவும் வகையில், இதுபோன்ற கிளை நீதிமன்றங்கள் பல காலப் போக்கில் தொடங்கப்பட வேண்டியது மிகவும் அவசியமாகும். இத்திட்டம் நிறைவேறுவதற்காக நீண்ட காலமாக முயற்சிகளை மேற்கொண்டவன் என்ற முறையில், சிறப்பான இந்த நிகழ்ச்சியில் பங்கு பெறுவதன் மூலம் இந்த மகிழ்ச்சியில் நானும் பங்குகொள்கிறேன்" என்றார்.

அடிக்கல் நாட்டு விழாவைத் தொடர்ந்து, அடுத்தடுத்த ஆண்டுகளில் திராவிடக் கட்டடக் கலையம்சத்துடன் கூடிய உயர் நீதிமன்றக் கிளைக் கட்டடத்துக்கான கட்டுமானப் பணிகள் தொடர்ந்து நடைபெற்று, 2004 ஆம் ஆண்டு பயன்பாட்டுக்குக் கொண்டு வரப்பட்டது. இந்த ஒரு காரணத்துக்காகவேனும் தென்மாவட்ட மக்கள், தெற்கிலிருந்து உதித்த சூரியனை மனதில் ஏந்தியிருப்பர்..!

...வலம் வருவோம்

### அடிக்கல்லுக்கு முன்பு நிதி ஒதுக்கீடு!

மதுரையில் 'எய்ம்ஸ்' மருத்துவமனை அமைக்கிறோம் என்று சொல்லி, ஒரு செங்கலை மட்டும் அடிக்கல்லாக நாட்டிவிட்டுப் போனார்கள். இதுவரை நிதி ஒதுக்கீடுகூட முழுமையாக, முறையாக ஒதுக்கப்படவில்லை. அந்த லட்சணத்தில்தான் ஒன்றிய அரசு இயங்குகிறது. அவர்கள் எல்லாம் முத்தமிழறிஞர் கலைஞரிடமிருந்து பாடம் கற்றுக்கொள்ள வேண்டும்.

காரணம், 'மதுரையில் உயர் நீதிமன்றக் கிளை அமைப்போம்' என்று உறுதி கூறியதுடன், அனுமதியையும் வாங்கி, நிலங்களையும் கையகப்படுத்தி, அடிக்கல் நாட்டு விழாவுக்கு ஒரு நாள் முன்பே கட்டடம் கட்டுவதற்கான நிதியையும் ஒதுக்கீடு செய்தார் கலைஞர். இதுகுறித்து, அவர் தனது உரையில் கூறும்போது, "இந்தக் கிளை, மிகச் சிறப்பாகச் செயல்படுவதற்குத் தேவையான அனைத்து உள்கட்டமைப்பு வசதிகளையும் இந்த அரசு நிறைவேற்றித் தரும். இங்குக் கட்டடம் கட்டுவதற்காக 75 ஏக்கர் நிலத்தினை 45.50 இலட்சம் ரூபாய் செலவில் இந்த அரசு கையகப்படுத்தி வழங்கியுள்ளது என்பது உங்கள் அனைவருக்கும் தெரியும். இங்கு கட்டப்படவுள்ள கட்டடத்திற்குரிய வரைபடங்கள் அரசுக்கு வந்துள்ளன. அந்த வரைபடங்களைத் துணையாகக் கொண்டு, இங்கு கட்டடங்கள் கட்டுவதற்கு உரிய செலவினமாக 56.45 கோடி ரூபாயை நேற்றைய தினம் அனுமதித்துள்ளேன் என்பதனை இவ்வேளையில் நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்" என்றார்.

மேலும் 1996-2001 ஆட்சி காலத்தில், பல்வேறு நீதிமன்றங்களும், நீதித்துறை அலுவலர்களுக்கான குடியிருப்புகளும் என 39 கோடி ரூபாய் செலவில் தமிழகம் முழுவதிலும் கட்டப்பட்டன. 1996 முதல் 2000 வரையிலான நான்கு ஆண்டுகளில் மட்டும் 101 புதிய நீதிமன்றங்கள் ஏற்படுத்தப்பட்டன.

---

## நவீன கவிதையில் பெரியார்!

***மா**ரீசமானை வேட்டையாடப் போனவனை மனக்குகையில் எழுந்த சிறுத்தைதான் வேட்டையாடியது*

- என மூன்றே வரிகளில் ராமாயணம் பற்றி தந்தை பெரியாரின் பார்வையைச் சுருக்கமாகக் கவிதையாக்கியுள்ளார் எழுத்தாளர் சுகுணா திவாகர்.



'பெரியாரை நவீன கவிதைக்குள் கொண்டு வர முடியுமா?' என்பதைச் சவாலாக எடுத்துக் கொண்டு பெரியார் குறித்துத் தான் எழுதிய நவீன கவிதைகளைத் தொகுப்பாக்கி 'அங்கிருந்துதான் வந்திருக்கிறோம்' என்ற தலைப்பில் கொண்டு வந்துள்ளார் நூலாசிரியர். அதனை கருப்புப் பிரதிகள் பதிப்பகம் வெளியிட்டுள்ளது.

புத்தகத்தின் அட்டைப்படம் தொடங்கி கடைசிப் பக்கம் வரை பெரியார் நவீனப்பட்டு மிளிர்கிறார். சமகால சிக்கல்களை பெரியாரிய பார்வையில் கவிதையாக்கியது மட்டுமின்றி, பெரியாரின் கடந்த காலச் செயல்பாடுகளையும் நவீன கவிதையில் அடக்கியுள்ளார். புதுமைப் பித்தன் காலத்திலேயே 'பெரியார் ராமசாமி' என்ற பெயர் சிறுகதைகளில் தோன்றத் தொடங்கி விட்டது. இன்றைக்கும் பல சிறுகதைகளில் பெரியார் நம்முடன் கைப்பிடித்து நடைபோடுகிறார். சுகுணா திவாகரின் இந்தத் தொகுப்பு பெரியாரை நவீன கவிதை உலகத்துக்கு அழைத்து வந்துள்ளது. நாம் எங்கிருந்து வந்தோம் என்பதை இந்த 72 பக்க கவிதைத் தொகுப்பான 'அங்கிருந்துதான் வந்திருக்கிறோம்!', நமக்கு நினைவூட்டுகிறது.

---

## ஃப்ளாஷ்பேக்



### இலக்கியமும் கைத்தறியும்!



ராஜேந்திரன்

1986 ஆம் ஆண்டில் சென்னை சூளைமேட்டில், கழக இலக்கிய அணி சார்பில், நிர்வாகிகள் அறிமுகக் கூட்டம் நடைபெற்றது. அன்றைய இளைஞர் அணிச் செயலாளரும் இன்றைய முதலமைச்சருமான தளபதியார் அவர்கள் அந்த நிகழ்வுக்கு வருகை தந்திருந்தார். இலக்கிய அணி நிர்வாகிகளை அறிமுகம் செய்துவைத்து அனைவருக்கும் கைத்தறி ஆடை அணிவித்து வாழ்த்தினார். நான் சுமார் 40 ஆண்டு காலம் கழக உறுப்பினராகத் தொடர்வதைப் பெருமையாக உணர்கிறேன்.

**-ஈ.ராஜேந்திரன், முன்னாள் அமைப்பாளர், கழக இலக்கிய அணி, ஆவடி. சென்னை.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறு குறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-600 018. வாட்ஸ்அப் எண் : 90033-24473, மின்னஞ்சல் youthwing@dmk.in

---


## கருவூலம்

### காமராசருக்காகக் கலங்கிய கலைஞர்!

**1975-ஆம் ஆண்டு அக்டோபர் 2-ஆம் தேதி காமராசர் மறைந்தபோது, தேனாம்பேட்டை காங்கிரஸ் திடலில் அஞ்சலிக்கு வைக்கப்பட்டு அங்கேயே அடக்கம் செய்ய, அவரது கட்சியினர் எண்ணினர். ஆனால், அதை மறுத்த கலைஞர், ராஜாஜி மண்டபத்தில் காமராசர் உடலை அஞ்சலிக்கு வைத்தார். பின்னர் கிண்டி காந்தி மண்டபத்துக்கு அருகில், புதர் மண்டிக் கிடந்த இடத்தை ஒரே இரவில் சுத்தம் செய்து, பல்லாயிரக்கணக்கானோர் அஞ்சலி செலுத்தும் வகையில் மாற்றியமைத்து, அரசு மரியாதையுடன் அடக்கம் செய்தார். அத்துடன் 'காமராசர் நினைவு மண்டபம்' எழுப்பினார். கடற்கரைச் சாலைக்கு காமராசர் பெயர் சூட்டினார். விருதுநகரில் காமராசர் பிறந்த இல்லத்தை நினைவிடமாக மாற்றினார்.**

---

## திராவிடத்தால் வாழ்கிறோம் 356




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131